
வட்டு-வடக்கு பிரமனாச்சி தோட்டம்

# கற்பகப் பிள்ளையார்

# தேர் சிறப்பு மலர்

13.09.99






வட்டு-வடக்கு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மகா கணபதி துணை



**வட்டுக்கோட்டை பிரமனாச்சித் தோட்ட கற்பகப்பிள்ளையாரின்**

## தேர்த்திருவிழாவினை முன்னிட்டு

ஆசியுரை, வாழ்த்துரை, கட்டுரை, பாமாலைகளாற் பொழிந்து அன்பர்கள், அடியார்கள் எல்லாம் பக்திப்பரவசப்படும் வகையில் ஞானமணம் கமழ வெளிவரும் இம்மலரினை எல்லாம் வல்ல

கற்பகப்பிள்ளையாரின் திருப்பாத கமலங்களில்

**சமர்ப்பணமாக்குகின்றோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

கற்பக விநாயகர் துணை

# இம் மலரை மலரச்செய்ய வந்துதித்தவன்



# ஸ்தம்பப்பிள்ளையார்

பெருவடிவை பக்தரெல்லாம் தேடுகின்ற புகலிடமாய்
அருள் நிதியை அன்பொழுகப்பாடி


ஆத்தியின் கீழ் வீற்றிருக்கும் வேழமுக விநாயகனின்
திருவடியை தினம் தொழுவாய் தொல்வினைபோம் என்மனமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆத்தியடிப் பிள்ளையார்



மூலமூர்த்தி



எழுந்தருளும் தெய்வங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைரவக் கடவுள்



நாக தம்பிரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விமானத்தின் தோற்றம்



கும்பாபிஷேக காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விமானத்தின்மேற்குப்புறம்



வசந்தமண்டப தென்கிழக்குப்பக்கம்



ஆலய முகப்புத்தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதமகுரு, நல்லை ஆதீனமுதல்வர், ஆலயகுரு
அருளாசி வழங்கும் காட்சி



பிரதான கும்பங்கள் வீதி வலம் வரும் காட்சி



விமானத்தை நிர்மாணித்த சிற்பாசாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்



## நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர்

### இரண்டாவது குருமஹா சந்நிதானம்

அவர்களின்

# அருளாசிச் செய்தி

விநாயகர் அடியார்களே!

வட்டுக்கோட்டைப் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் கற்பகப்பிள்ளையார் இன்று தேர் ஏறி அருட்காட்சி தருவது எல்லோருக்கும் மனநிறைவைத் தருகின்றது. விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப்பெருமான் வேண்டுவார் வேண்டும் வரங்களை வழங்கிய வண்ணம் கற்பகப்பிள்ளையாராக வீற்றிருக்கின்றார். தனக்கு மேல் தலைவன் இல்லாதவர் விநாயகர். மூர்த்தி, தலம், விருட்சம் அனைத்தையும் கொண்டது இவ்வாலயம். இன்று முதன்முதலாக நடைபெறும் தேர்த்திருவிழா சைவ அடியார்களுக்கு தெய்வ அருளையும், மனஅமைதியையும் தருவதாகும். ஐஞான இருளை அகற்றி மெய்ஞான ஒளியைத் தருவது தேர்த்திருவிழா. எல்லோரும் ஒன்றாக இணைந்து இழுப்பது தேர்த்திருவிழா ஆகும். அது போல் ஒன்றுபட்டு வாழ்வதே உண்மை வாழ்வு என்பதை உணர்த்துவதாகும். தேரின் வடத்தை பிடித்து இழுக்கும் பொழுது ஒவ்வொரு மனிதனும் புண்ணியத்தை பெறுகின்றான். இப்புண்ணியத்தை ஒவ்வொரு மக்களுக்கும் கிடைக்கவும், இவ் ஆலயம் சிறந்து சமயத்திற்கும், தர்மத்திற்கும் தொண்டாற்றவும் விநாயகரை பிரார்த்திக்கின்றேன்.

" என்றும் வேண்டும் இன்ப அன்பு "

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக
ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துர்க்கா துரந்தரி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அன்னை அவர்களின் ஆசியுரை
" வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும் "

சைவ மக்களின் வழிபாட்டிலே முதல் வணக்கத்துக்குரியவராக விளங்குபவர் விநாயகர். எந்தக்கருமத்தைத் தொடங்கினாலும் தேங்காய் உடைத்து வழிபடுவதும், எதனை எழுதினாலும் பிள்ளையார் சுழிபோட்டு ஆரம்பிப்பதும் எமது சைவ மரபாகும். "ஓம்" என்ற பிரணவத்துக்கு உரியவராக விளங்குகின்ற பெருமான் இவர். அதனுடைய அர்த்தம் எல்லாவற்றையும் நல்ல முறையில் சாதகமாக நிறைவேற்றித்தருபவர் என்பது கருத்தாகும்.

ஆவணி மாதத்தில் வரும் விநாயக சதுர்த்தித் திருநாள் பெருமானை வழிபடுவதற்கு உத்தமமான ஒரு பெருநாளாகும். இந்நாளில் வட்டுக்கோட்டை பிரமனாச்சி தோட்டம் கற்பகப்பிள்ளையாருக்கு தேர் உற்சவம் நடைபெற இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. எம்பெருமான் தேரிலே ஆரோகணித்து வருகின்ற காட்சி எம்மை எல்லாம் வாழ வைக்கின்ற திருக்காட்சி ஆகும். இக்காட்சியைக் கண்டு ஆனந்தமடைய ஆயிரமாயிரம் பக்தகோடிகள் இங்கு கூடுவர்.

" விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான் " என்று பாடிப்பாடி ஆனந்தமடைவர். ஆகவே கற்பகப்பிள்ளையாரின் அருட்காட்சியை காணப்பெற்று, ஆனந்தமடைவது சைவமக்கள் அனைவரதும் இன்றியமையாத கடமையாகும்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேக, மகோற்சவ பிரதம குரு அவர்களின் ஆசியுரை

ஆலயத்தின் அண்மையைஆன்மா நெருங்க, நெருங்க ஜீவனுக்கு ஒரு பரிபூரண திருப்தி ஏற்படுகின்றது. பல விதமீ இன்னல்கள், துன்பங்களிற்கு மத்தியிலும் பசு, பதியை நோக்கிப் போகின்றது என்றால் அங்கு ஏதோ ஒரு திருப்தி இருந்து தான் ஆகவேண்டும். அதுதான் ஆத்ம திருப்தி. ஆலய அமைப்பை கூறப் புகும்போது பவிதசரீரத்தையே வைத்து திருக்கோயில் திருப்பணிகள் செய்ய ஆகமங்கள் வழிகாட்டி நிற்கின்றன. ஏன் அவ்வாறு ஆகமங்கள் சொல்ல வேண்டும்? "அண்டத்தில் உள்ளது பிண்டமத்தில் உள்ளது" என்று கூறும் பழமொழிக்கு ஏற்ப ஏன் பரிந்துரைக்க வேண்டும்? அதற்கும் காரணங்கள் உண்டு. ஆலயங்கள் யாருக்காக அமைக்கப் பட்டன? ஆன்மாவுக்காகவே. இந்த ஆன்மா எந்த நிலையில் இன்பம் பெறுகின்றது? ஆன்மலய நிலையில். எனவே ஆன்மா வடிவில் அமைந்த ஆலயங்களைக் கட்ட நிர்ப்பந்தித்தது. இந்த ஆன்மா ஆலயத்தினுள் நுழைகின்ற போது ஆன்மாவின் உடலினுள் இறைவன் என்ற பரமான்மா அருள் வடிவில் நுழைகின்றது. இதனால் மலங்கள் உள்ளிருந்து வெளியேற்றப்படுகின்றது. இந்த மலநீக்க நிகழ்வினால் இறைவனது திருவருட்சக்தி நம்மில் பதிகிறது. இதனை சத்தினிபாதம் என்பர் தென்னாட்டுச் சித்தாந்திகள். இந்த மலங்கள் அறுக்கப்பட்டு இறைவன் திருவருள் கிடைக்கவேண்டும் என்பதற்காகவே ஆலயங்களில் கிரியைகள், தினங்கள் என்பன இடம்பெறுகின்றன.

இறைவன் ஆன்மாவின் ஆக்கத்தில் அகப்பட்டு மலங்களை விலக்குவதற்கு பஞ்ச கிருத்தியங்கள் அவசியமாகின்றது. சிருஷ்டி, திதி, சம்காரம், திரௌபவம், அனுக்கிரகம் என்பன அவையாகும். இவ்வாறே தனு, கரண, புவன, போகங்கள் உண்டாக்கப் படுகின்றன. இவை காக்கப்படுகின்ற நிலையைத் திதி என்பர். இவ்வாறு படைக்கப்பட்ட பொருள்களுள் மாயா சக்தியினால் ஆன்மா மூழ்குதலை மறைத்தல் அல்லது திரௌபவம் என்பர். இதன் பின்பு மிக முக்கியமாகக் கருதப்படும் சம்காரம் கூறப்படுகின்றது. இந்த சம்காரத்துக்குப் பிறகே அதாவது மலநீக்கம் கிடைத்தபின்பே ஆன்மா இறை அருளை எதிர்பார்க்க முடியும். இதனாலே தான் சம்காரத்தின் பின்பு அனுக்கிரகம் சொல்லப்பட்டது. இந்த சம்காரத்தை நாம் ஆலயங்களில் நினைவு கூறிப் பாவனை செய்யும் தினமே தேர்த் திருவிழா ஆகிய இரதோற்சவ தினமாகும் . பஞ்ச கிருத்திய தினங்களுள் இந்த சம்காரம் முக்கியமானது என்பதனாலோ என்னவோ இந்த சம்காரத்தைக் குறிக்கும் இரத உற்சவத்தை எல்லோரும் பிரம்மாண்டமாகக் கொண்டாடுகிறார்கள். எது எப்படியாயினும் ஆன்ம ஈடேற்றத்திற்கு இரத உற்சவம் முக்கியமானது என்பது உண்மையானது ஆகும். இந்த விழாவைக் கொண்டாட தேர் அவசியம்.

ஒரு ஊரிலே தேர் ஒன்று அமைக்கப் பட்டால் அந்த ஊரிலே இருக்கின்ற தீமைகள் அனைத்தும் அன்றோடு அழிந்துவிடும் என்பர். இரதம் அமைக்கப்பட்டால் சம்கார தொழில் புரிய சுவாமி இரத ரூப சொருபராய் பவனி வந்து தீமைகள், மலங்கள் என்பவற்றை அழித்து ஆன்மாவுக்கு விடுதலையைக் கொடுப்பார் என்பதைப் புராணங்களின் வாயிலாக அறியலாம்.

ஒரு இரதம் அமைப்பதன் மூலம் ஒரு திருப்பணி நடைபெறுகின்றது என்றால் அது ஊருக்காக ஏற்படும் ஆத்மீகக் கீர்த்தி என்றுதான் சொல்ல வேண்டும். அன்று திரிபுவனங்களாகிய மும்மலங்களை அழிக்க பரமசிவன் பஞ்ச பூதங்களையும், சூரிய சந்திரனையும் உள்ளடக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களைக் குதிரைகளாக்கிப் பூட்டி, அதன் மூலம் அமைக்கப்பட்ட தேரில் சென்று சம்காரம் செய்ததால் ஆன்மீக விடுதலை பெற்றதாக சிவ புராணங்கள் பேசுகின்றன. அன்று போல் இன்றும் நம் ஊரில் ஒரு திருத் தேரை பல திருத்தொண்டர்கள் பெருந் திருமுயற்சியால் உண்டாக்கியிருக்கிறார்கள். அவர்களது இச்செயற்பாடு இவ்வூர் மக்களுக்கு மட்டும் உரித்தானது அல்ல. வையகம் முழுவதும் வாழ வைக்கக் கூடிய அரிய பெரிய பணியாகும். இவர்களது முயற்சியினால் உருவான இத் திருத்தேர் எம் விக்கினேஸ்வர மூர்த்தியைத் தாங்கிப் பவனி வந்து எம் பக்தர்கள் தாங்க முடியாத இன்னல்களையும், உலக மக்களின் துன்பங்களையும் போக்கட்டும். இப்பணியில்பங்கு கொண்ட அனைவருக்கும் விநாயகனது அருள் கிடைப்பதாக. அத்துடன் இவ்வாண்டு நடைபெற்ற இவ்வாலயக் கும்பாபிஷேகத்திற்கும், இக்கைங்கரியத்திற்கும் பல திசைகளிலிருந்து வருகை தந்து கலந்துகொண்ட சிவாச்சாரியப் பெருமக்களையும் பாராட்டுகின்றேன். மிகப் பெரிய இவ்விரண்டு பொது நல முயற்சிகள் எடுத்து அவற்றை செவ்வனே நிறைவு செய்த ஆலய முகாமையாளர் அவர்கட்கும், அன்பர்கள், அன்பளிப்புச் செய்தவர்கள், ஸ்தபதியார், சிற்பாசாரியார், இசை, நடனக் கலைஞர்கள் அனைவரையும் வாழ்த்தி பரிபூரணமான திருவருள் கிடைக்க தனிப் பெரும் தெய்வமாகிய கற்பகப் பிள்ளையாரின் பாதக் கமலங்களை உளமாரப் பிரார்த்திக்கின்றேன். இத்துடன் இத் தேர்ச் சிறப்பு மலர் நன்கு மலர்ந்து திருவருள் மணம் கமழுவதாக.

இம்மலரை வெளியிட்டோருக்கும் விநாயகன் திருவருள் கிடைக்க எனது நல்லாசியைக் கூறுகின்றேன்.

சுபம்.

சிவாகம கிரியா திலகம்
வேதாகம கியாகலாபமணி
கிரியாஜோதி
சிவஸ்ரீ.ச.மு. பாஸ்கர(ரவி)க் குருக்கள்
(விசவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தான பிரதம குரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவஸ்தான குருவின் அருளாசி

வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழ
பான்மை தரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்து கர மூன்று விழி நால்வா
ஆனை முகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

சைவமும், தமிழும் வளர்ந்த வட்டுமாநகரில் சித்தங்கேணிக் கிராமத்தில் பிரமனாச்சி தோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் கற்பகப் பிள்ளையாருக்கு இன்று தேர்த்திருவிழா நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாலயம் இப்பகுதி மக்களிடம் பெரும் தெய்வ நம்பிக்கையை வளர்த்து அவர்கட்கு இறை ஆசியைத் தரக் கூடியதாக அமைந்துள்ளது.

ஆன்மாவை முந்திப் பேரருளுக்கு அழைத்துச் செல்லும் தினமாகிய இன்றைய இரதோற்சவ தினத்தில் அடியார்கள் எல்லோரும் எல்லா இன்பமும் பெற்று வாழ எல்லாம் வல்ல கற்பகப் பிள்ளையாரை வேண்டி என் நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

"சுபம் அஸ்து"

பிரம்மஸ்ரீ - தி. கந்தசுவாமி ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வாழ்த்துச் செய்தி"

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற ஒளவை மூதுரையும் நாம் எண்ணிப் பார்க்கும் போது ஆலய வழிபாட்டில் இன்றியமையாமையை நாம் நன்கு உணருகின்றோம். ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருப்பவர்கள் நித்திய நைமித்திய பூசை, விழாக்களில் கலந்து கொண்டு இறைவனின் அருளைப் பெறுகின்றார்கள். இவ்வாறு வழிபடுபவர்களின் வழிபாட்டின் முக்கிய நாளாக சிறந்த நாளாக விளங்குவது தேர்த் திருவிழாவாகும். அத்தேர்த் திருவிழாவின் சிறப்புக்கு மூலகாரணமாக விளங்குவது தேரின் சிறப்பாகும். இத் தேரில் வட்டுக்கோட்டை பிரம்மனாச்சி தோட்டத்து கற்பகப் பிள்ளையார் ஆவணி மாதம் விநாயக சதுர்த்தி தினத்தன்று பவனி வருகிறார்.

அத் தேர்த்திருவிழா மலர் பல வகையிலும் சிறப்புற அமைய வேண்டுமென்று இறைவனை வணங்கி இம்மலருக்கு எமது வாழ்த்து செய்தியைத் தெரிவிக்கின்றோம்.

நன்மை விருத்தி சங்கம்
வட்டு வடக்கு,
சித்தன்கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரேறி அருள் சொரியும் கற்பகனைக் காண வாரீர்

கலாரத்னா, கலாபூஷணம், மகாவித்துவான்
பிரம்மஸ்ரீ - மா.த.ந. வீரமணி ஐயா அவர்கள்

சீரேறு வட்டுநகர் தனிலே மேவும்
சிறந்த தலப் பிரமனாச்சி தோட்டம் தனில்
தாரேறு ஆத்தியடிக் கோயில் கொண்ட
தந்திமுகன் கற்பகப் பிள்ளை யாரும்
தேரேறிப் பவனிவந்து தெய்வீ கஞ்சேர்
துதிக்கையால் அருள் அள்ளிச் சொரிந்தி டவே
காரேறு வண்ணத்துக் கணப தியின்
கமல மலர்ச் செஞ்சரணம் போற்றி செய்வாம்.

கொம்பொடித்து பாரதக் கதையை அன்று
கிரிமேரு தனில் எழுதித் தந்த ஐயன்
அம்புவியில் ஆத்தியடிப் பிரம னாச்சி
அழகுதலம் கோயில் கொண்டு அருளு பவன்
வெம்புமடி யவர்மகிழ வினைகள் தீர்ப்பான்
வேழமுகன் விநாயக சதுர்த்தி யன்று
உம்பர் தொழத் தேரேறிப் பவனி வரும்
உள்ள முருக் கும்காட்சி காண வாரீர்.

*விநாயக அர்ச்சனைக்குரிய 16 நாமங்கள்*

1) ஓர் சுமுகாய நம
2) ஓம் ஏகதந்தாய நம
3) ஓம் தூமகேதவே நம
4) ஓம் கணாத்கஷாய நம
5) ஓம் கபிலாய நம
6) ஓம் ககர்ண காய நம
7) ஓம் லம்போதராய நம
8) ஓம் விகடாயநம
9) ஓம் விக்னசாராய நம
10) ஓம் கணாதிபதயே நம
11) ஓம் பாலசந்த்ராய நம
12) ஓம் கஜாந நாய நம
13) ஓம் வக்ரதுண்டாய நம
14) ஓம் சூர்ப்பகர்ணாய நம
15) ஓம் ஹேரம்பாய நம
16) ஓம் ஸ்கந்த பூர்வ காய நம

மனிதன் வாழும் வழிவகைகளை நன்கு
தெரிந்து கொள்ள வேண்டும்
சிந்தனையும், தெய்வ வந்தனையும்
மனிதனுடைய வாழ்வை உயர்த்துகின்றன.

- வாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "எல்லாம் அவன் செயலே"

எமது குலதெய்வமாய் விளங்கி எம்மை எல்லாம் வழி நடாத்தும் கற்பகப் பிள்ளையாரின் திருப் பெருங் கருணையை எண்ணி மகிழ்ந்து அவன் தாளினைப் போற்றி வணங்குகின்றேன்.

அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற உண்மைக்கமைய எம் பெருமான் திருவருளால் எமது இப்பிறவிக் காலத்தில் 01-06-87 இலும் 04-07-99 இலும் மகா கும்பாபிஷேகத்தை கண்டு களிக்கும் பேறு எமக்கு கிடைத்துள்ளது. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மகா கும்பாபிஷேகம் ஆலயங்களில் நிகழ்வது உத்தமமாகும் என ஆகமங்கள் கூறுகின்றன. இந்த வகையில் கும்பாபிஷேகம் நடைபெற்று பன்னிரண்டு ஆண்டு நிறைவில் விநாயகப் பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றமை அவன் அருளேயன்றி வேறொன்றுமில்லை.

எமது மூதாதையர்களால் பக்தியுடன் பேணப்பட்டு வளர்ந்த இவ்வாலயம் எமது தந்தையாரான ஆறுமுகம் புண்ணியமூர்த்தி அவர்களது காலத்தில் பூசைகள் சைவ ஆகம முறைப்படி சிறப்பாக நடைபெறவும், திருவிழாக்கள் பக்தி பூர்வமாக நடைபெறவும் பெருமாள் அருள் கைகூடியது. சிறு பராயத்திலே எமக்கெல்லாம் இறை உணர்வூட்டி தொடர்ந்து இறை பணி ஆற்ற எம்மை ஆளாக்கிய எம்மினிய தந்தையை வணங்குகின்றோம்.

எம் தந்தைக்குப் பின்னர் இறைபணியைத் தொடர்ந்த எம் மூத்த சகோதரன் பு.ஸ்ரீனிவாசன் காலத்தில் ஆலயத்தில் பல திருப்பணிகள் நடைபெற திருவருள் கைகூடியது. இவற்றுள் இருதள விமானம் ஸ்தாபிக்கப் பெற்று மகா கும்பாபிஷேகமும், தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர்களின் ஆசீர்வாதத்தோடும், விநாயகனின் திருவருளோடும் இறை பணியைத் தொடர்வதே நம் கடனாகும்.

இந்த வருடம் எம் பெருமானின் பாலஸ்தாபனம் நிகழ்ந்து 72 நாட்களில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றமை கணேசனின் திருப் பெருங் கருணையேயாகும். அத்துடன் ஆலயத்தில் மஹோற்சவம் நடைபெறுவதற்கான கொடிமரம், யாகசாலை என்பன இக் கும்பாபிஷேக தினத்தில் ஸ்தாபிக்கப்பட்டமை இந்நன்நாளினை மேலும் சிறப்புடையதாக்கியுள்ளன.

தேரில் எம் பெருமான் திருவுலா வரும் திருக்காட்சியை எமது இப்பிறவியில் காண வேண்டும் என்பது எம் நீண்ட காலப் பெரு விருப்பாக இருந்தது. இவ் விருப்பத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென சென்ற வருடம் விநாயக சதுர்த்தித் திருவிழாவில் வேழமுகத்து விநாயகனிடம் வேண்டிக் கொண்டோம். இந்த வருடம் அதே நன்நாளில் தேரேறி அருள் சொரியும் திருக்காட்சியை நாம் எல்லோரும் கண்டு மகிழும் பேற்றைத் தந்த கற்பகனை போற்றித் துதிக்கின்றோம். இக் கைங்கரியத்திற்கு எம்மை நெறிப்படுத்தி வழிகாட்டிய எங்கள் பெருமதிப்புக்குரிய கும்பாபிஷேக, மஹோற்சவப் பிரதமகுரு ஸ்ரீலஸ்ரீ க.மு. ரவிக்குருக்கள் அவர்களையும் நன்றியுடன் வணங்குகின்றோம். இத் திருப்பணிக்கு பல வகைகளிலும் உதவிய விநாயகனின் மீளா அடியவர்கள் அனைவர்க்கும் எம் பெருமான் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

இப்புனிதப் பொன்நாளில் இத் தேர்ச் சிறப்பு மலரை வெளியிடுவதில் ஆனந்தம் அடைகிறோம். இவ்வரிய மலர் என்றும் தெய்வீக மணம் கமழும் என்பது எமது நம்பிக்கையாகும். கற்பகன் தேரேறி எம் வினை தீர்க்க வீதியுலா வந்த இந்நன்நாளில் அவன் அருள்பெற்று அவன் தாளினை வணங்கி இனிது வாழ்வோமாக.

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

கற்பகன் திருப்பணியில் **புண்ணியமூர்த்தி- ஸ்ரீகாந்தன்** தேவஸ்தான முதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் சமூக வாழ்வும்

சிவத்தின் தொடர்புடையது சைவம். சிவனை வழிபடு கடவுளாகக் கொண்ட நல்வாழ்க்கைக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழிகாட்டுகின்ற நெறியே சைவநெறி அல்லது சிவநெறி ஆகும். இந்நெறி எப்போது தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியாதது. பழமைக்குப் பழமையானது. அப்பாலுக்கப்பாலாய் நிற்பது நம் சிவ நெறி.

சமயம் என்பதன் பொருளை நோக்குவதும் இன்றியமையாதது. சமயம் நெறிப்படுத்தப்பட்டது எனப் பொருள்படும். சமயக் கொள்கைகளும் பழக்கவழக்கங்களும் மிகப் பழங்காலத்திலேயே பெரியோர்களால் நெறிப்படுத்தப்பட்டன, சமைக்கப்பட்டன என்பதை இச்சொல் உணர்த்தி நிற்கின்றது. மனித மனத்தைப் புனிதமாக்க நல்ல மனப்பாங்கை அமைத்துக் கொடுப்பதில் சமயமானது முக்கிய இடத்தை வகிக்கின்றது. இறைவழிபாடு, தியானம் மற்றும் பல்வேறு சமயசம்பிரதாயங்களும் மேற்குறிப்பிட்ட தன்மையை மனிதனில் உருவாக்க முயல்கின்றன. மனிதன் இவற்றின் உபயோகத்தை நன்கு பயன்படுத்தி முக்கிய நோக்கான தனது உள்ளத் தூய்மையை வலுவடையச்செய்ய முயலுதல் வேண்டும். சமயங்களின் உட்கிடைதான் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகொடுத்து உதவுகிறது. ஒவ்வொரு மனித உள்ளத்தின் புனித பயணத்தின் முன்னேற்றமே சமயம் ஆகும். ஆன்ம ஈடேற்றத்திற்கு அவசியமானதெனக் கருதப்படுவதும் இதுவேயாகும். எவ்வெவ் வழிகளின் மூலம் உங்கள் மனதைத் தூய்மையானதாக்க முடியுமோ அவ்வவ் வழிவகைகளை மேற்கொள்ளுங்கள் எனப்போதிக்கின்றது இந்துசமயம். இது, நதிகள் பலவாயினும் அவை இறுதியில் சமுத்திரத்தில் சங்கமிப்பது போல் அல்லது விளக்குகள் பலவாயினும் ஒளி ஒன்றே என்பது போல வழிகள் பலவாயினும் அடையும் இலக்கு ஒன்றே என்பதனை அடிநிலையாகக் கொண்டு திகழ்கின்றது.

சமூக வாழ்வின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் சைவம் இரண்டறக் கலந்து விளங்குகின்றது. இவ்வகையில் விருந்தோம்பல் பண்பில் சைவம் வாணிகத்தில் சைவம், மருத்துவத்தில் சைவம், அலுவல் துறையில் சைவம், பிள்ளை வளர்ப்பில் சைவம், மாணவ வாழ்க்கையில் சைவம், மங்கையர் வாழ்வில் சைவம் ஆசிரியர் வாழ்வில் சைவம் எனும் பல செயற்பாடுகளிலும் சைவத்தின் இணைப்பை நாம் கொள்ள முடிகின்றது.

## விருந்தோம்பலில் சைவம்:-

இல்லறத்திற்கு வருகின்ற விருந்தினர்களை உபசரித்து அவர்களுக்கு வேண்டிய உபகாரம் செய்வது அன்புடைய கணவனும் மனைவியும் சேர்ந்து நடாத்தும் இல்லறத்தின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். இது பற்றி திருவள்ளுவரும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். மனைவியே குடும்பத்தின் தலைவி. இச் சொல்லிற்கு நேரான ஆண்பாற் சொல் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறே "கணவன்" என்ற சொல்லுக்கும் நேரான பெண்பாற் சொல் இல்லை. கணவன் மனைவி ஆகிய இருவரும் "ஓர் ஆவிற்கு இருகோடு பூத்தாற் போல" இணைந்து வாழத்தக்கவர்கள். இருவரும் இருவேறுபட்ட செயல்களைச் செய்து முடிக்கவே கடமைப்பட்டவர்கள். இருவரும் கருத்தொருமித்து சமநிலையில் நின்று செயலாற்றினால் தான் இல்லறம் நல்லறமாக இயங்க முடியும். இந்த உண்மையை உள்ளவாறு கண்டு கொண்டவன் சைவன் என்று கூறலாம். ஏனெனில் சைவன் தனது கடவுளை அம்மையும் அப்பனுமாக சமமாக இணைந்திருக்கின்ற நிலையை "மாதொரு பாகன்" என்று பெயர் சூட்டி வணங்கத் தொடங்கினான்.

செல்வி விக்னேஸ்வரி சிவசம்பு,

விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சிவநெறியின் உயிர்த்தத்துவத்தை விளக்குவதற்கு இத்திருவுருவம் ஒன்றே போதுமானது. கணவனும் மனைவியும் சரிநிகர் சமனானவர் எனும் உண்மையை சைவர்களாகிய நாம் உள்ளத்தில் இருத்துதல் வேண்டும். கணவனுடன் ஒருயிரும் ஈருடலுமாக இயங்கும் நிலையே சைவப் பெண்களுக்கு ஏற்றது. கருத்தொருமித்த குடும்ப வாழ்வே சைவ வாழ்வாகும். ஆண்கள் பொருள் ஈட்டுவதற்காகவோ வேறு தேவைகளுக்காகவோ வீட்டைவிட்டு வெளியே செல்ல வேண்டிய கடப்பாட்டிற்கு உரியவர்கள். ஆனால் பெண்கள் வீட்டிலே இருந்து வீட்டுக்குரிய அறத்தைச் செய்வதில் முக்கிய பங்கினை வகிப்பவர்கள். எனவே வீட்டுக்குரியவர்கள் பெண்களே என்று கூறலாம். இதனால் தான் வீட்டுத் தலைவிக்கு இல்லாள், மனையாள், மனைவி எனும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. ஒரு பெண்ணின் துணையின்றி ஓர் ஆண்மகனால் விருந்தினர்களை உபசரிக்க முடியாதென்றே எமது முன்னோர்கள் கருதினார்கள். எடுத்துக்காட்டாக இராவணனால் அசோகவனத்தில் சிறைவைக்கப்பட்ட சீதை "இராம பிரானிடம் யாரேனும் அதிதிகள் வந்தால் யான் அருகில் இல்லாமையால் அவர்களை உபசரிக்க முடியாது துன்பப்படுபவரே" என்று வருந்தினார். இதனையே "விருந்து வந்தபோது என்னுறுமோ என விம்மும்" என்று சீதை வருந்துவதற்காக கம்பர் அமைத்துக் காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் சிறந்த சைவ வாழ்வு வாழ்ந்த பெண்ணடியார்களையும் நாம் இங்கு சுட்டிக் காட்ட முடிகின்றது. தன் ஒழுக்கத்தில் தன் கணவன் ஐயங்கொள்வான் என்பதையும் எண்ணிப்பார்க்காது தன் வீடு தேடிவந்திருந்த சிவனடியாரை உபசரித்து அனுப்பிய காரைக்காலம்மையாரது பண்பினையும், சிறுத்தொண்டருடைய மனைவியாராகிய திருவெண் காட்டு நங்கை விருந்தினரை மகிழ்விப்பதற்காகச் செய்த செயலையும் எண்ணும்போது விருந்தோம்பலின் சிறப்பினை நாம் அறிய முடிகின்றது.

இவ்வாறாகச் சைவ ஒழுக்கத்தில் விருந்தோம்பல் ஓர் இன்றியமையாத அங்கமாகக் கருதப்பட்டு வருகின்றமை தெளிவாகின்றது.

## வாணிகத்தில் சைவம் :-

வாணிகத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களாலும் சைவம் கடைப்பிடிக்கப்பட வேண்டியது. பண்டைய வணிகர்கள் வரையாது கொடுக்கும் வள்ளல்களாக இருந்தனர். எண்ணற்ற அற நிலையங்களையும் கல்வி நிலையங்களையும் புரிந்தவர்கள் வணிகர்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. பண்டைய நாளில் வாணிகம் செய்தோர் பழிபாவத்திற்குப் பயந்து பதுக்கல் போன்ற பாவச் செயல்களை மேற்கொள்ளாது நியாயமான முறையில் "கொள்வதூம் மிகைகொளாது கொடுப்பதூம் குறைபடாது" வாணிகம் செய்து வந்ததை அறியமுடிகின்றது. இது பற்றியே வள்ளுவப் பெருந்தகை சான்றோர் எவ்வாறு நடுவு நிலையில் இருப்பர் என்பதற்கு வாணிகம் செய்வோரின் துலாக்கோலையே குறிப்பிட்டு "சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல்" என்று கூறுகிறார். எனவே அக்காலத்தில் வாணிகம் செய்தோரிடத்தில் அத்தகைய வாய்மை இருந்ததே அதற்குக் காரணமாக இருக்க வேண்டும்.

வாணிகத்தில் ஈடுபட்டுள்ளோர் அன்புள்ளம் கொண்டவர்களாக இருந்தால் பேராசை என்னும் அரக்கன் அவர்களை அணுகமாட்டாது. பேராசை இல்லாத இடத்தில் நியாயம் இருக்கும். வணிகர்களிடத்தில் நியாயம் பேணப்பட வேண்டுமாயின் வாணிகத்தில் சைவம் தழைத்தலே அதற்கான வழியாகும். வாணிபம் தவிர்ந்த பிறதுறைகளில் ஈடுபட்டுள்ளோர் பெரும்பாலும் பிறரின் கட்டளைக்குக் கீழ் படிந்து நடப்பவர்கள். ஆனால் வணிகர்கள் தமது விருப்பப்படி காரியமாற்றுகின்றனர். அதனால் அவர்தம் தொழிற்துறை பொதுமக்களைப் பாதிப்பதாக உள்ளது. எனவே தான் அவர்கள் நல்ல உள்ளம் படைத்தவர்களாக இருத்தல் அவசியமாகின்றது. வாணிகம் செய்வோரிடத்தில் வாய்மை வேண்டும். வாணிபத்தில் வாய்மை தவறியதால் ஏற்பட்ட கொடுமையை சிலப்பதிகாரம் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணிகம் தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கையை மட்டும் பாதிக்கக் கூடியது அன்று. அது ஒரு சமுதாயத்தையே பாதிக்கக்கூடியது. ஆகவே சமுதாயத்தவரின் வாழ்வும் தாழ்வும் பிணிக்கப்பட்டுள்ள வாணிபம் நல்ல முறையில் நடைபெற வேண்டும் வாணிபத்துறையில் ஈடுபட்டுள்ளோர் நல்லொழுக்கம் உடையோராகவும் அன்புள்ளம் கொண்டவர்களாகவும் அமைதல் வேண்டும். அந்த அன்பைப் போதிப்பது சைவம். எனவே சைவம் வாணிகம் செய்வோரால் கடைப்பிடிக்கப்பட வேண்டும். வாணிகர் தம் வாழ்க்கையில் வாய்மை இடம் பெறவேண்டும். "அன்பே சிவம்" எனும் கொள்கை கொண்ட சிவநெறி வாணிகர்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டும். சிறந்த முறையில் பழிபாவங்கள் சேராத வகையில் செல்வத்தை ஈட்டவும் அவ்வாறு ஈட்டிய செல்வத்தைப் பலருக்கும் பயன்படும் வகையில் செலவிடவும் சைவ உணர்வு வழிகோலுகிறது. எனவே வாணிகத்தில் சைவம் வேண்டும்.

அன்பு எனும் ஆண்டவன் உள்ளம் எனும் கோயிலில் ஆட்சி செலுத்த வேண்டும். அப்போது தான் வஞ்சகம் அற்ற வாணிகம் வளரவும் அந்த வாணிகத்தில் வந்த பெருஞ்செல்வத்தை வாழ்வளிக்கும் காரியங்களுக்கு வரையாது அளிக்கவும் மக்கள் நலமடையவும் இந்த மாநிலம் சிறக்கவும் வழி ஏற்படும்.

## மருத்துவத்தில் சைவம் :-

மருத்துவத்திற்கும் சைவ உணர்விற்கும் உள்ள தொடர்பினை திருஞானசம்பந்தரது பின்வரும் பாடல் விளக்குகின்றது.

"மருந்தவை மந்திரம் மறுமைநன்
னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடும் அவர் நாமமே
சிந்தை செய் நன்னெஞ்சமே"

பண்டைய மக்கள் தூய்மையான இயற்கை வாழ்வைக் கடைப்பிடித்தனர். செயற்கை நாகரிகச் சிறுமைகள் அவர்களைப் பற்றவில்லை. பாவபுண்ணியங்களுக்கு அஞ்சி நடந்தனர். ஒழுக்கத்தை உயிர் எனப் போற்றி வாழ்ந்தனர். எண்ணங்களின் தூய்மையால் சொல்லும் செயலும் தூய்மைப்பட்டு உடலும் அவர்கட்கு நோய் இன்றித் தூய்மையாக விளங்கின. மருத்துவர்களுக்கெல்லாம் மருத்துவனாக இறைவன் விளக்குகின்றான். எனவே தான்.

"மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி
தீராத நோய் தீத்தருள வல்லான்"

ஆக வைத்தியநாதன் என விளங்கும் அவனே உண்மையில் மக்களின் நோய்களை எல்லாம் தீர்த்தருளுகிறார்.

இறைவனே தன் பேரருட்திறத்தினால் இயற்கையைப் படைத்து வைத்தருளினார். எத்தனை சிறப்புமிக்க அறுவைச் சிகிச்சை மருத்துவ நிபுணர்களாயினும் அவர்களால் உடலுறுப்புக்களை அறுக்க முடியுமே தவிர அறுபட்ட உடலுறுப்புக்களை ஒன்று சேர்த்து ஒட்டி வளரச் செய்யும் ஆற்றலை உண்டாக்க முடியுமா? அவ்வாற்றலை இறைவனே அருள வேண்டும். எனவே இவற்றையெல்லாம் எண்ணிப்பார்க்கும் போது மருத்துவர்களின் சமய உணர்வினை அறிய முடிகின்றது. இதனால் தான் உலகப் புகழ் பெற்ற மருத்துவர்கள் பலர் மருத்துவத்துறையில் தமது அனுபவம் பெருகப் பெருக நாளடைவில் தன் முனைப்பு நீங்கிச் சமய உணர்வு மேலோங்கி கடவுள் நம்பிக்கையிலும் அன்பிலும் கருத்தூன்றி நிற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக இந்தியாவிலே வேலூர், தெய்யூர், டோணாவூர் முதலிய இடங்களில் உள்ள மருத்துவ மனைகளில் சமய உணர்வு பெரிதும் போற்றப்படுதலை அறியமுடிகின்றது. நோயாளிகள் தமது நோய்தீர இறைவனை வேண்டுதல் புரியுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். நோயாளிகளின் சார்பில் பிறரும் பிரார்த்தனை செய்கின்றனர். மருத்துவரும் பிரார்த்தனை செய்தே தம்பணியைத் தொடங்குகின்றனர். தமது மருத்துவம் ஒன்றே நோயாளியின் நோயினைப் போக்கி விடும் என அவர்கள் எண்ணுவதில்லை. இறைவன் திருவருளே குணப்படுத்துவதாக அவர்கள் நம்பிச் செயல் புரிகின்றனர்.

## மங்கையர் வாழ்வில் சைவம்:-

'மங்கையர்' எனும் சொல் மங்கலம் எனும் பெயர் அடியாகத்தோன்றியது. மங்கலம் என்பது நன்மை இன்பம், முதலாய பல பொருள்களைத் தருவது. எனவே அவை அனைத்தையும் உடையவர் மங்கையராவர். வாழ்வு என்பது அனைத்துயிர்க்கும் இன்பம் உண்டாவதற்குரிய துணையாக நிற்பது என்பதாகும். சுருங்கக் கூறினால் பிற உயிரை வாழ்விப்பதே வாழ்வாகும்.

ஒருவர் தனித்து இருக்கின்ற போது அவரது நிலையை வாழ்வு எனக் கூறமுடியாது. மனைவி மக்கள் முதலிய குடும்பத்தோடு வாழ்வதே வாழ்வு எனப்படும். எனவே பிறரைப் பேணும் தன்மை இயல்பாகப் பிறப்பிலேயே அமைந்த சிறப்பினை உடைய மங்கையர் வாழ்வில் சைவம் நிலைத்திருக்கின்றது என்பதனை அறிய முடிகின்றது.

சிவபெருமானின் திருவடித் தொண்டாம் சைவம் பரப்பும் சிறப்பினை அவனருளால் நாயன்மார்களும் பொன்னாலும் பெண்ணாலும் இவ்வுலகத்திற்கு உணர்த்தி உலகத்தை உய்வித்தனர் என்பதை திருத்தணிகைப் புராணப் பாடல் விளக்குகிறது.

"முன்னாலும் துளைக்கரத்தோன் முருகவேள்
பிடித்திழுத்து மொய்ம்பில் தாவப்
பின்னாலும் கதிர்ச்சலடிப் பிஞ்ஞகனார்
திருத் தொண்டின் பெருக்க வீறு
பொன்னாலும் பெண்ணாலும் அறிவுறுத்திவ்
வுலகினிடர் பொன்றி ஆண்ட
அந்நால்வர் பதகமலம் புகழ்ந்திறைஞ்சி
அரந்தை தீர்வாம்"

இங்கு பெண்ணாலும் என்பதனால் சம்பந்தர் திருமருகலில் செட்டிப் பெண்ணின் பாம்பு கடித்திருந்த மணவாளனை உயிர்ப்பித்தும், திருமயிலாப்பூரில் பூம்பாவை அம்மையாரை என்பு வடிவத்தினின்றும் எழுப்புவித்ததும், மங்கையர்க்கரசியாரை கருவியாகக் கொண்டு சைவம் பரப்பியதும் ஆகும்.

திருநாவுக்கரசர் திலகவதியாரால் சைவத்திற்கு மாறிய பெருமையும் சுந்தரர் பரவையாருடன் கூடி வாழ்ந்தமையும் மாணிக்கவாசகர் தில்லையின் கண் புத்தரோடு வாதிட்ட போது வந்திருந்த இலங்கை மன்னனது மகளது ஊமையை நீக்கியமையாலும் அறிய முடிகின்றது. இதுபோல் மங்கையர் வாழ்வினிடத்தில் சைவம் அன்றும் இன்றும் என்றும் நிலைத்திருப்பதற்கு பல வரலாறுகளைக் காணலாம். சைவத்தின் கொள்கை "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின் நமனில்லை" என்பதாகும்.

திருநீல கண்டத்துக் குயவனார் சைவச் செந்நெறியில் நின்ற பெருமை அவர் தம் மனைவியாரின் வாழ்வால் வாய்த்ததாகும். கற்பின் ஆற்றலால் கடந்த இளமையை மீண்டும் பெற்ற கற்பரசி அவராவர். அந்நாயனார் செய்த பிழையின் பொருட்டு அவரை மட்டுமன்றி தன்னையும் ஒறுத்துக் கொண்டமை செயற்கரிய செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போல் திருநீலநக்க நாயனாரின் மனைவியார் அவர் தம் இல்வாழ்விற்கும் சிவபூசையாம் சிறப்புத்தொண்டிற்கும் துணைநின்று தம் வாழ்வில் சைவத்தை நிலைநாட்டினார். இளையான் குடிமாறரின் மனைவியார் நள்ளிரவில் சிவனடியாருக்கு அமுதளித்த நங்கையாவார். நள்ளிரவில் வந்த சிவனடியார்க்கு நல்லமுதாக்கிய முறைமையால் தம்வாழ்வில் சைவம் நிலைத்திருப்பதைக் காட்டினார். இவ்வாறே குங்குலியக்கலையரின் மனைவி, சிறுத்தொண்டரின் மனைவியார், அப்பூதி அடிகளாரது மனைவியார், மானக்கஞ்சாறரின் மகள் போன்றோர் சிறந்திருந்து அவர்களால் சைவத்தின் பெருமை நிலைநாட்டப்பட்டது.

## பிள்ளைவளர்ப்பில் சைவம்:-

நன்கலமாகிய மக்கட்பேற்றினைக் கொண்ட மங்கலமாய மனைமாட்சி சிறவாத எந்த நாடும் செழிப்புற்று இருக்க முடியாது. இத்தகைய குடும்பத்தில் தான் வருங்கால மக்களாகிய குழந்தைகள் தங்கள் வாழ்க்கையின் ஆரம்ப நாட்களைக் கழிக்கின்றனர். அந்நாளில் அவர்களது பிஞ்சு உள்ளம் பசுமரத்தாணிபோல் பழக்க வழக்கங்களை ஏற்றுக் கொள்ளும். எனவே குடும்பமே சமுதாயத்தின் செல்வங்களாகிய குழந்தைகளின் உடல் உள உயிர்ப்பண்புகளை உருவாக்கும் உலைக்களம்.

இந்தத் தலைமுறையில் குழந்தைகளாயிருப்பவர்கள் அடுத்த தலை முறையில் பெற்றோர்களாயிருப்பர். இன்றைய குழந்தைகளது மனத்தெளிவையும் உடல் திண்மையையும் பொறுத்தே நாளை அவர்கட்குப் பிறக்கும் மக்கள் மனத்தெளிவும் உடல் திண்மையும் அமையும். அதனால் குழந்தைகளின் உடல் வளர்ச்சியிலும் மனவளர்ச்சியிலும் ஒழுங்கும் ஒழுக்கமும் ஊறி நிற்றல் வேண்டும். அந்த ஒழுங்கும் ஒழுக்கமும் கடவுள் நெறியின் அடிப்படையிலேயே கற்பிக்கப்படுதல் இன்றியமையாதது.

பண்பும் பயனும் செறிந்த பிற்கால வாழ்விற்கு பிள்ளைப் பருவம் ஒரு ஒத்திகை. எனவே அதில் அமையும் ஒழுங்கும் ஒழுக்கமும் உறுதியும் ஊக்கமுமே வாழ்விற்கு இன்பமும் ஒளியும் வழங்கும். பிள்ளை வளர்ப்பில் சைவநெறி தழைத்தோங்கச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அற்புதத்திருவந்தாதி பாடிய காரைக்காலம்மையாரின் குழந்தைப் பருவ வாழ்க்கை பிள்ளை வளர்ப்பில் சிவநெறியைப் போற்றுவதன் வாயிலாக அத்தொண்டைச் செய்கின்ற பெற்றோர்களும் பெரியோர்களும் சிவநெறியை வளர்ப்பதிலும் சிவநெறியில் வாழ்வதிலும் சிறந்த பங்கு கொண்டவராகின்றனர். எனவே பிள்ளை வளர்ப்பிலேயே சிவநெறி சேர்ந்தால் தான் பின்னர் அப்பிள்ளைகளால் உருவாகும் பெரியவர் உலகிலும் சிவநெறி தழைக்கும். குழந்தையே கடவுள் கடவுள் நெறியே சைவம்.

## மாணவ வாழ்க்கையில் சைவம்:-

மாணவ வாழ்க்கை மானிட வாழ்க்கையில் வளமான ஒரு பகுதியாகும். அது மனிதவாழ்வினைச் செப்பனிடும் பகுதி. மழலைப் பருவம் கடந்து பாலப் பருவம் தொடங்கும் நேரத்திலே மாணவ வாழ்க்கையும் தொடங்குகின்றது. மாணவ வாழ்க்கை ஏனையவர்களது வாழ்க்கையினின்றும் முற்றிலும் மாறுபட்டதாகும். மாண்புமிக்கோரே மாணவர். மாணவர் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி. இன்றைய மாணவர் வருங்காலத் தலைவர்கள். இவர்களே ஆசிரியர்களாகவும், பேராசிரியர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், சான்றோர்களாகவும் விளங்கப்போகின்றவர்கள்.

மாணவர்கள் சைவ நெறியின் மீது பற்றுடையவராக இருத்தல் வேண்டும். சைவம் என்பது அன்பு, அறிவு, அறம் ஆகிய மூன்றும் சேர்த்த ஒரு தத்துவமே ஆகும். அன்பு என்பது எல்லாம் வல்ல இறைவனிடத்தில் கொள்ளும் பக்தியும் பிற உயிர்களிடத்தில் காட்டும் இரக்கமுமே ஆகும். மக்கள் கடவுளிடத்துச் செலுத்தும் பக்தி, பிள்ளைகள் பெற்றோரிடத்தில் கொள்ளும் அன்பினைப் போன்றதே. இவ்வகையிலேயே உலகில் தோன்றிய எல்லாச் சமயாசாரியார்களும் அன்பு, அறிவு, அறம் ஆகிய சைவத்தின் பாற்பட்ட நெறிகளை வற்புறுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைப் பிறவிப் பெருங்கடலினின்றும் கரையேற்றி நித்திய இன்பத்தைத் தரவல்ல இறைவனை மாணவர்கள் இளமையில் இருந்தே தியானம் செய்தல் வேண்டும். இதனையே எமது சான்றோர்கள் கடைப்பிடித்துக் காட்டியுள்ளனர். தன்மையறியாப் பிள்ளைப் பருவம் முதலே உள்ளங்கவர் கள்வனைக் கண்டவர் சம்பந்தர். இறைவனின் பேரருளால் தான் திருவும் ஞானமும் பெற்று 'திருஞானசம்பந்தர்' எனப்பட்டார். பெரியபுராணம் கூறுகின்ற 63 நாயன்மாருள்ளும் சம்பந்தர் தான் பிள்ளைப் பருவத்திலேயே மெய்ஞ்ஞானியாக விளங்கிய அருளாளர்.

அறத்தினை மேற்கொள்ளுவதற்கு மாணவப்பருவம் மிகவும் பொருத்தமானது. எந்நிலையிலும் எக்காலத்தும் எவ்விடத்தும் தவறாமல் செய்ய வேண்டுவது அறச் செயலே ஆகும் என்பதனைச் சிவ சிந்தனை உடைய மாணவர்கள் இயல்பாக மேற்கொள்வர். மாணவர்கள் யாவரிடமும் அன்புடையவராதல் வேண்டும். அன்புடையார் பிறர்க்குப் பயன்படுவர். அன்பு அறத்திற்கு மட்டுமன்றி வீரத்திற்கும் துணையாக நிற்கின்றது. அன்பில்லாதவர்களை அறக்கடவுள் வருத்துவார். அன்பில்லாத வாழ்வு பாலைவன வாழ்வுக்கு ஒப்பானது. எனவே மாணவர்கள் அன்பு வழிகளைப் பின்பற்றுவதன்றால் சைவ நெறியில் நின்றவராவர்.

இவ்வாறாக மாணவ மணிகள் அன்றாட வாழ்வில் ஒழுக்க சீலர்களாகவும் பெற்றோர்க்கும் பெரியோர்க்கும் கீழ்ப்படிகின்றவர்களாகவும் உயிர்களிடத்து அன்புடையவர்களாகவும் சிவ சிந்தனையுடையவர்களாவும் செயற்படுவார்களாயின் மாண்புமிக்கவர் மாணவர் என்பதனை மெய்ப்பிக்க முடியும்.

## ஆசிரியர் வாழ்வில் சைவம்:-

அளவும், நெறியும் உடைய வேகமும் நெறியும் அற்ற சமயத்தை வாழ்வில் கடைப்பிடித்து தெய்வீக ஒளியோடு ஆசிரியர் திகழ வேண்டும். வளரும் சமூகத்தை உருவாக்கும் பணியோடு வளர்ந்த மக்கள் குழுவிற்கும் வழிகாட்டும் பொறுப்பை ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே தான் தெய்வத்தோடு ஒப்ப வைத்து எண்ணும் நிலையும் ஏற்படலாயிற்று.

சமய மெய்ப்பொருளின் தெளிவே ஆசிரிய வாழ்விற்குத் தேவையானது. ஆசிரிய வாழ்வு மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்டு தான் மலர்கிறது. எனவே ஆசிரியருக்கு விருப்பு வெறுப்புக்களால் பாதிக்கப்படாத உள்ளம், இன்ப துன்பங்களால் அலைக்கழிக்கப்படாத உள்ளம் வேண்டும். "மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும்" பெரிய இலட்சிய நிலைக்குத் தன் உள்ளத்தை ஆசிரியன் பழக்கிக் கொள்ள வேண்டும். ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் துறவு நிலைக்குத் தன் உள்ளத்தைப் பண்படுத்தி உயர்த்துதல் வேண்டும். துன்பத்தைக் கண்டு ஓடிக்கலங்காது அதனையே இன்பமாகக் கொண்டு மகிழும் ரகசியத்தை அவன் கற்றுக்கொண்டு விட வேண்டும்.

## பரந்த நோக்கம்:-

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்' என்பதும் சிறப்பெய்துவது சைவநெறியைப் பின்பற்றி நடப்பதால் ஏற்படும் ஒரு பேறு என்பதும் சைவ சமய நாயன்மார்கள் வாழ்க்கை வரலாறு விளக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கை வார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்பது நாவுக்கரசர் வாய்மொழி. எனவே சிவனை வழிப்பட்டவர் அதாவது சைவர் சமூகத்தில் சமத்துவம் கண்டனர். இதனால்தான் எல்லோரும் ஓர் குலம் எனப் பாரதியார் பாடினார்.

சைவர்கள் சைவ சமூகமே அன்றிப் பிற சமூகமும் இனிதே வாழ வேண்டும் என விரும்பினார்கள்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

"தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

"சர்வே ஜனாகா சுகினோபவந்து" (எல்லா மக்களும் இன்புற்றிருப்பார்களாக)

என்ற சொற்றொடர்கள் எல்லாம் சைவர்களது பரந்த நோக்கத்தையும் இன்றைய பஞ்ச சீலக் கொள்கைகளையும் விளக்கி நிற்கின்றன.

சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கை 'அன்பு' ஆகும். இதனையே அளவிற்கும் இடத்திற்கும் ஏற்ப கருணை, இரக்கம், பாசம், காதல் என்பர்.

இன்று விஞ்ஞானத்தில் மூழ்கியுள்ள சமூகத்தில் சைவம் முந்திக் கொள்கின்றது. அணுக்கள் பல நுண்பொருள்களால் ஆனதென்றும் ஒரு அணுவின் நடுவே ஒரு முக்கிய பொருள் உண்டு என்றும் அதைச் சுற்றி வேறு நுண்பொருள்கள் ஒரு குறிப்பிட்ட திசையிலும் விசையிலும் சுற்றி வருவதாகவும் இவைகளின் சுற்றுதல் நின்றுவிட்டால் உலகம் அழிந்து விடும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றன. சைவர்களே தில்லை இறைவன் ஓர் வட்டத்திற்குள் குறிப்பிட்ட முறையில் எப்போதும் நடனமிடுவதாகவும் அவரது ஆட்டம் நிற்கும் காலமே உலக முடிவு என்றும் கூறுகின்றனர்.

சைவ சமயம் சமரசக் கொள்கையை விதந்து பேசுகின்றது. இவ்வகையில்,

"யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்"
என்ற சிவஞான சித்தியார் அடிகளும்

"விரிவிலா அறிவினோர்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்"

என்ற அப்பர் சுவாமிகளது அருள் வாக்கும் குறிப்பிடத்தக்கவை.

அடியார் வணக்கமும் திருக்கோயில் வழிபாடும் சைவ சமயத்தின் அடிப்படைக்கொள்கைகள் என்பதையும் அதன் வழியே பேரின்பத்தை அடைய முடியும் என்பதையும் உணர்ந்தே எம்முன்னோர்கள் பெரியளவிலான திருக்கோயில்களையும் வழிபாட்டு முறைகளையும் ஏற்படுத்தி வைத்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞான போதத்தின் இறுதிச் சூத்திரமாகிய பின்வரும்பாடல் இதனை தெளிவாக விளக்குகிறது.

"செம்மலர் நோன்றான் சேரலொட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

ஆலய வழிபாட்டின் அவசியத்தையும் பயனையும் ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் தத்துவங்களையும் திருவிழாக்களின் விளக்கங்களையும் அறியாத மக்களிடையே சமயப்பற்று குறைவதற்கு முக்கிய காரணம் எமது சமய உண்மைகளையும் மூர்த்தி, தலம், தீர்த்தம், விழாக்கள் இவைகளின் தத்துவங்களையும் சைவ மக்கள் அறியும்படி செய்யாததே ஆகும். எனவே இதனை உணர்ந்து நாம்அக்குறையைப் போக்க வேண்டும்.

இவ்வாறாக சைவம் சமூக வாழ்க்கையின் செயற்பாடுகள் யாவற்றிலும் ஒன்றி இருப்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

'வாழ்க உலகமெலாம்'

## உசாவியவை:-


1.கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் — இந்துப் பண்பாட்டு மரபுகள், வித்தியா வெளியீடு, யாழ்ப்பாணம் - 1992

2. சைவ சமயச் சொற்பொழிவுகள், சைவ சித்தாந்த மகாசமாசம், சென்னை - 1959

3.டாக்டர். M.S. சாந்தா — காரைக்காலம்மையாரும் அக்கமாதேவியும் ஓர் ஒப்பாய்வு, வித்யா பதிப்பகம், சென்னை – 1994

4. சுவாமி விவேகானந்தர் — இந்தியப் பெண்மணிகள், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை

5.டாக்டர் ரா. சேதுப்பிள்ளை — தமிழகப் பெண்மணிகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் - 1984

6.வாழ்வியற் களஞ்சியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமக்களும் ஆலயங்களும்

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்கள் (பொன்னாலை பிள்ளையார் ஆலய குரு)

சைவ மக்கள் கடவுளை வணங்கவும், கடவுளுக்குத் தொண்டு செய்து பாவங்கள் நீங்கி இறையருள் பெறவுமே சைவாலயங்கள் சைவாலயங்கள் அமைந்துள்ளன. அமைக்கும் விதியையும், பூசை முதலியன நிகழும் முறைகளையும் சைவாகமங்கள் விளக்கமாக கூறுகின்றன. சைவாகம விதிப்படி கும்பாபிஷேகம் நிகழ்ந்த ஆலயத்தில் இறைவன் சிறப்பான கருணையுடன் எழுந்தருளியிருப்பார். இப்படியான ஆலயங்களை அமைப்பதிலும், நித்திய பூசை திருவிழா முதலியன நிகழச் செய்வதிலும், ஆலயங்களில் பல்வேறு தொண்டுகள் புரிதலிலும் சைவமக்கள் ஆர்வத்துடன் ஈடுபடவேண்டும்.

இக் காலத்தில் பல சைவமக்கள் தினந்தோறுமோ, வாரம் தோறுமோ ஆலய வழிபாட்டில் ஈடுபட்டாலும், கோயிலுக்குப் போதல், பூசை வேளையில் தரிசித்தல், தம் இயல்புக்கேற்ப அர்ச்சனை செய்வித்தல் ஆகியவற்றிலேயே அக்கறை உள்ளவர்களாக காணப்படுகிறார்கள். இத்துடன் ஆலயப் பணிக்கு தம்மாலியன்ற பொருள் உதவியும் செய்து விட்டால் தம் கடமை நிறைவேறியதாக நம்புகிறார்கள்.

சைவமக்கள் ஆலய வழிபாட்டின் போது திருமுறைகளை ஓதி வழிபடுதலும், ஆலயத்தில் கூட்டுதல், கழுவுதல் முதலிய பணிகளைத் தாமே அக்கறையுடன் செய்தலும் மிக மிக அவசியம். இவையின்றி நாம் பூசை வேளையில் வழிபடுதல், அர்ச்சனை செய்வித்தல், திருப்பணிக்கு உதவுதல் என்பன மட்டும் போதாது.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து உறுப்புக்களாலும் கடவுள் வழிபாடு செய்ய வேண்டும் என நம் சைவ சமயம் போதிக்கின்றது. உடம்பினால் தொண்டு செய்தல், வாயினால் துதித்தல், செவியினால் இறை புகழ் கேட்டல், கண்ணால் ஆலயத்திலுள்ள மூர்த்திகளைத் தரிசித்தல், மூக்கினால் ஆலயத்தில் உள்ள தூய வாசனைகளை நுகர்தல் என எல்லா வழியாலும் வழிபாடு செய்ய வாய்ப்பாக நம் சைவ ஆலயங்கள் அமைந்துள்ளன.

எமது சமய குரவர் நால்வருள் திருநாவுக்கரசு நாயனார் உழவாரத் தொண்டையும், தேவாரத் தொண்டையும் விசேடமாக செய்து காட்டியவர். கயிலைக்கு நடந்தே சென்றவர். எனவே சைவமக்கள் அனைவரும் ஆலயத்தில் தம்மாலியன்ற உடற் தொண்டையும் செய்தல் அவசியம். இப்படிச் செய்வதால் நம் உடல் முழுவதும் பாவம் நீங்கி புனிதமடையும். நமக்கு இறையருள் அதிகரிக்கும்.

மக்கள் மெய், வாய் முதலிய ஐந்து வழிகளாலும் பாவம் செய்வதாலும், துன்பம் அனுபவிப்பதாலும் மக்கள் இந்த ஐந்து வழிகளாலும் வழிபாடு செய்ய வேண்டும் என்று நம் சமய சாஸ்திரங்கள் வலியுறுத்தியுள்ளன. திருநாவுக்கரசர் ஒருவரேயன்றி பல அருளாளர்கள் ஆலயத் தொண்டினால் இறையருள் பெற்றிருக்கிறார்கள். அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவர் கணநாத நாயனார். இவர் ஆலயத்திற்கு செல்லும் அன்பர்களை ஆலயத் தொண்டு புரிய பழக்குவதையே தன் கடமையாகக் கொண்டு வாழ்ந்தவர் என்று பெரியபுராணம் கூறுகின்றது. கணநாத நாயனார் மட்டுமன்றி தண்டியடிகள் என்ற நாயனாரும் தொண்டு புரிந்தே இறையடி சேர்ந்தவர். தண்டியடிகள் நாயனாரோ பிறப்பிலேயே இரு கண்ணும் குருடானவர். அப்படியிருந்தும் தமது ஊர் ஆலயத்துக்குளம் தூர்ந்து இருப்பதைக் கேள்வியுற்று அக்குளத்தை வெட்டும் பணியில் ஈடுபட்டார். தனக்குக் கண் தெரியாத படியால் தடிநாட்டிக் கயிறுகள் கட்டித்தான் குளத்துள் இறங்கவும், வெளியே சென்று மண் கொட்டவும் ஆயத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தபின் கண்பார்வை இல்லாததையும் பொருட்படுத்தாமல் குளம் வெட்டியிருக்கிறார். அவருக்கு சமணர் துன்பம் செய்து, போட்டி போட்டதால் அக்குளத்தில் நீராடியே தன் கண்பார்வையையும் பெற்றார் என்று இவர் வரலாறு உள்ளது.

ஆதலால் ஆலயத் தொண்டு செய்வதால் எந்நோய்களும் நீங்கப்பெற்று, நற்பேறுகளையும் எளிதில் அடையலாம்.

## அற்புதச் சிற்பங்களால் பொற்பதம் கணபதி

(சிற்பநூல்களில் சிறப்பாகக் கூறப்படும் விநாயகரின் 32 திருவுருவங்கள்)

1) பால கணபதி
2) தருள கணபதி
3) பக்த கணபதி
4) வீர கணபதி
5) சக்தி கணபதி
6) துவஜ கணபதி
7) சித்தி கணபதி
8) உச்சிஷ்ட கணபதி
9) விக்கினராஜ கணபதி
10) சஷிப்ர கணபதி
11) ஹேரம்ப கணபதி
12) லட்சுமி கணபதி
13) மகா கணபதி
14) விஜய கணபதி
15) நிருத்த கணபதி
16) ஊர்த்துவ கணபதி
17) ஏகாட்சர கணபதி
18) வர கணபதி
19) திரியட்சர கணபதி
20) சஷி ப்ரப்பிரசாத கணபதி
21) ஹரித்திரா கணபதி
22) ஏக தந்த கணபதி
23) சிருஷ்டி கணபதி
24) உத்தண்ட கணபதி
25) ரிண மொச்சக கணபதி
26) துாண்டி கணபதி
27) துவிமுக கணபதி
28) திரிமுக கணபதி
29) சிம்ம கணபதி
30) யோக கணபதி
31) துர்க்கா கணபதி
32) சங்கட ஹர கணபதி

**மரணம் எந்த இடத்தில், எப்போது வரும் என்று எவராலும் அறிந்து கொள்ள இயலாது. அது எந்த விநாடியிலும் வரும். ஆதலால் நல்ல அறங்களைச் செய்து, தவம், தியானம் புரிந்து செல்கதிக்கு வழி தேட வேண்டும்.**

- வாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீபூதியின் மகிமை

பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜ சர்மா அவர்கள்

உலகத்தில் உள்ள ஏனைய மிருகங்களுக்கு இல்லாத விசேட மகிமை பசுவுக்கு உண்டு. கோசலம், கோமயம் பூரணத்துவமான கிருமிநாசினி ஆகும். பொலிடோல் பயன்படுத்திக் கட்டுப்படுத்தும் குருமன் நோயைக் கூடக் கோசலம் கட்டுப்படுத்துகின்றது. யாழ்ப்பாணத்தில் விவசாய இரசாயனப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவும் வேளையில் பல விவசாயிகள் கோசலத்தை மருந்து போல உபயோகித்து தோட்டங்களில் ஏற்படும் அனைத்து நோய்களையும் கட்டுப்படுத்துகின்றார்கள். இதே போல் கோமயத்தை நீரில் கரைத்து முற்றம் போன்ற இடங்களுக்குத் தெளிப்பதன் மூலம் பெற்ரோல் செய்கின்ற வேலையை இது செய்கின்றது. மிகச் சிறந்த பலன் சாணத்தால் மெழுகிய வீடுகளிற் கிடைக்கின்றது. பால் மிகச் சிறந்த ஊட்டச்சத்து மிக்க பானம். குழந்தைகள் முதல் பெரியோர் வரை நெய், தயிர் விரும்பிச் சாப்பிடுவார்கள். இப்படியாக பசு ஒரு பூலோக காமதேனுவாக விளங்குகின்றது. பால், தயிர், நெய், கோசலம், கோமயம் முதலியன எங்கள் சைவக் கிரியைகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றில் மருத்துவக் குணங்கள் ஏராளம். இவை சித்த மருத்துவத்திலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இத்துணை மருத்துவக் குணங்கள் படைத்த கன்று போட்டுப் பத்து நாட் கழிந்த பசுவின் கோமயம் சுத்தமான முறையில், நிலத்தில் விழாமல் பெறப்பட்டு, அதற்குரிய மந்திரங்கள் ஜெபிக்கப் பெற்று அல்லது பஞ்சாட்சரமந்திரம் மட்டுமென்றாலும் ஜெபிக்கப்பெற்று, அத்துடன் வீபூதிப்பச்சை (ஒரு வகைத் துளசிக் குடும்பத்தாவரம்) இலையும், நெற்பதரும் சேர்த்து அட்டமி, சதுர்த்தசி, பூரணை, அமாவாசை போன்ற திதிகளில் ஒன்றில் வில்லையாகத் தட்டி வெயிலில் காய வைத்துப் புடமிடுவார்கள். இதனை விட வேறு பல விஸ்தாரமான முறைகளும் உண்டு. இவ்வாறு தயார் செய்யும் வீபூதியைப் பின்னர் பாலில் கழுவிக் காய வைப்பார்கள். இவ்வீபூதியில் பஞ்சாட்சர ஜபமும், சாணத்தின் மருத்துவப் பயன்களும், வீபூதிப்பச்சை மரத்தின் விசேட மருத்துவ இயல்பும் ஒன்று திரள்கின்றது.

இப்படியான சிறப்புக்கள் உள்ள வீபூதி சுவாமிக்குச் சாத்தப்பட்டு தெய்வ அனுக்கிரகமும் மேலதிகமாகச் சேர்த்து ஓர் குரு கையால் வாங்கும் பொழுது அவரின் ஆத்ம சக்தியும் திரண்டு வருகின்றது. திருஞான சம்பந்தர் பாண்டியனின் வெப்பு நோய் தீரப் பதிகம் பாடித் தன் கையால் திருநீறிட்டமை எண்ணி உணரத்தக்கது. இப்படியாக ஆத்மிக, விஞ்ஞான சிறப்பு மிக்க வீபூதியைக் குருவின் ஆசீர்வாதத்துடன், இரண்டு கைகளாலும் வாங்கிச் சிறிது வாயில் போட்டு, சிரசிலும், நெற்றியிலும் தரிசிக்கும் பொழுது தரிசிப்பவர்களுக்குள்ள தீராத நோய்கள் யாவும் பறந்து ஓடிவிடுகின்றன. இதனாற்றான் நோயாளியை வீபூதியால் உடம்பு முழுவதும் குளிப்பது போலப் பூசச் செய்தால் அவர்கள் உடம்பு மிகுந்த புத்துணர்ச்சி அடைகின்றது. சாதாரணமாக நாய், கோழி என்பன வருத்தம் வரும் போது சாம்பல் குளிப்பதை அநேகர் பார்த்திருப்பீர்கள். உடனே அவற்றின் வருத்தம் மாறுவதையும் அவதானித்திருப்பீர்கள். சாதாரண சாம்பலுக்கே அவ்வளவு மகிமை எனில் எங்கள் வீபூதியின் மகிமையை சொல்லவும் முடியுமா?

---

நமக்கு எது மகிழ்ச்சியைத் தருகின்றதோ,அதனை நாம் மனம், வாக்கு, காயங்களால்பிறருக்குச் செய்ய வேண்டும். நமக்கு எது வெறுப்பைத் தருகின்றதோ அதனைநாம் மறந்தும் பிறருக்குச் செய்யக் கூடாது.

வாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் தத்துவம்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மதம் எங்கள் இந்துமதம். எம் மதமானது ஆரம்ப காலத்திலே சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்று ஆறு பிரிவுகளைக் கொண்ட அறுவகைச் சமயம் என்று போற்றப்பட்டது. பிற்பட்ட காலங்களில் இவை அனைத்தும் ஒன்றாக இணைந்து காணப்படுகின்றது. ஆனாலும் ஒவ்வொரு தெய்வமும் அதற்குரிய வழிபாட்டு நெறிகளுக்கு அமைய வழிபடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் கணபதி வழிபாடு சிறப்பு பெற்று காணப்படுகின்றது. இந்துக்களாகிய நாம் எக் காரியத்தை தொடங்கும் முன்பும், விநாயகரை வணங்குவதும், எந்த விடயத்தை எழுத்தில் வடித்தாலும் தொடக்கத்தில் பிள்ளையார் சுழி இடுவதும் தொன்று தொட்டு வழங்கிவரும் மரபாகும். ஓம் என்னும் பிரணவ மந்திரத்தினூடாகவும் விநாயகப் பெருமானை வழிபடலாம்.

இவ்வாறாக சிறப்புப் பொருந்திய விநாயகப் பெருமானுக்கு முதன் முதலில் நடைபெறும் பூசை விநாயகர் பூசை என்று அழைக்கப்படும். இப் பூசையிலே எம்பெருமானுக்கு தேங்காய் உடைத்து வழிபடுவது வழக்கமாகும். இந்த தேங்காயும், அதனை உடைப்பதன் தத்துவத்தையும் நோக்கின் வெகு சுவாரசியமாக இருக்கும். அதாவது தேங்காயினது வெளிப்புறத்தில் இருக்கும் மட்டை மும் மலங்களில் ஒன்றான மாயையையும், அதனை அடுத்து இருக்கும் தும்பு கன்ம வினையையும், தும்பினுள் இருப்பது மூல மலமாகிய ஆணவத்தையும், ஓட்டினுள் இருக்கும் தித்திப்பான நீர் இறைவனின் அருட்கடலையும், இறுதியாக வெள்ளை வெளீரென காட்சி கொடுக்கும் பருப்பு ஆன்மாவிடத்து காணப்படும் தூய நிலையாகவும் கூறப்பட்டு தேங்காய் உடைத்தலின் தத்துவத்தை மும் மலங்களினால் கட்டுண்ண ஆன்மாவானது அருட்கடலாகிய இறைவனது ரூபத்தை அறிந்து அவர் பால் ஈடுபடுதலைக் குறித்து நிற்கின்றது.

விநாயகப் பெருமானை நாம் நினைத்த மாத்திரத்திலோ அல்லது நினைத்த பொழுதிலோ சாணியினாலும், மஞ்சள் தூளினாலும் அல்லது அரிசிமாவினாலும் பிடித்து வழிபடலாம். வேறு சின்னங்கள் எதுவுமே அகப்படாதவிடத்து அறுகம்புல் அவருக்குரிய அறிகுறியாக கொள்ளப்படும். விநாயகப் பெருமானுக்கு விருப்பமான உணவாக மோதகம் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட விநாயகக் கடவுளை வழிபடுவதிலே ஒரு விசேடம் உண்டு. அதாவது நாம் மற்றைய தெய்வங்களின் முன் கை கூப்பி சாஷ்டாங்கமாக வணங்கி எமது பிரார்த்தனையை செய்கின்றோம். ஆனால் இப் பெருமானின் முன் இரண்டு கைகளாலும் தலையில் குட்டி, காதுகள் இரண்டையும் பற்றிக் கொண்டு தோப்புக் கரணம் போட்டு வணங்குகின்றோம். இவ்வாறு வணங்கும் வணக்கத்தின் தத்துவம் அறிவு வளர்ச்சியும், உடல் நலமும் உண்டாவதோடு விநாயகரது பெருங் கருணைக்கும் உரியவராக கொள்ளப்படுவர் என விளக்கப்பட்டுள்ளது.

விக்கினேஸ்வரப் பெருமானை சிற்ப சாஸ்திர முறைப்படி மனித உருவ அம்சங்களை கொடுத்து அவருக்கென ஆலயம் அமைத்தும் நாம் வழிபட்டு வருகின்றோம். இவ் விநாயக வடிவமானது ஒரு அசாதாரண உருவமாகக் காணப்படுகின்றது. ஒற்றைக் கொம்புடைய யானைமுகத் தலையுடனும், மனித சரீரத்தினையும் கொண்டு காணப்படுவதோடு நான்கு கைகளும், பூதம் மாதிரியான கனத்த கால்களும் பெருத்த வயிற்றுடன் பெருச்சாளி மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலது காலை கீழே தொங்கவிட்டு இடது காலை மடக்கிய வண்ணம் அமர்ந்திருக்கும் நிலையும், தனது மேல் வலது கையில் யானையை அடக்கும் ஆயுதமாகிய மழுவையும், மேல் இடது கையில் பாசக்கயிற்றினையும், கீழ் வலது கையில் தன் ஒடித்த தந்தத்தையும், கீழ் இடது கையில் அடிப்பக்கம் உருண்டையும், மேற்பக்கம் கோபுரமுமான உருவமுடைய மோதகமெனும் தித்திப்பான தின்பண்டத்தையும், துதிக்கையில் ஒரு குடத்தில் நீரையும் தாங்கிய வண்ணம் சலனம் அற்ற நேர் பார்வையுடனும் காட்சி நல்குகின்றார்.

இப்படியாக காட்சியளிக்கின்ற விநாயகர் உருவத்தின் தத்துவத்தை நோக்கினால், அறுகம்புல்லினால் பூசிக்கப்பட்டு பெருச்சாளி வாகனத்தின் மேல் மோதகத்துடனும் யானைத் தலையுடனும், மனித சரீரத்துடனும் இருக்கும் இவ்வடிவமானது ஓரறிவு முதல் ஆறறிவு படைத்த ஜீவன்கள் அனைத்திலும் இறைவன் இருக்கின்றார் என்று உணர்த்துகிறது. அவரது கையில் இருக்கும் மோதகமாகிய தின்பண்டம் இறைவன் அருவம், உருவம், அருவுருவமாக உள்ளார் என விளக்குகிறது. ஒற்றைத்தந்தமானது ஆண், பெண், அலி என்பவற்றைக் கடந்தவர் என்று கூறுகிறது. கையில் இருக்கும் ஒடித்த தந்தம் கல்வி பயிலுதலுக்கு அறிகுறியாகிறது. விலங்குத்தலையும், மனித உடலும் தேவர்கையும், பூதக் கால்களையும் உடைய விநாயக தேவர் தேவர், மக்கள், நரகர், விலங்கு முதலிய எல்லா ஜீவராசிகளிலும் இருக்கிறார் என்கிறது. இவரது முகத்தின் வடிவம் 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தை சுட்டி நிற்கின்றது. இந்த ஓம் எனும் எழுத்தானது அ, உ, ம் எனும் எழுத்துக்களினால் பின்னிப்பிணைந்துள்ளது. இந்த மூன்று எழுத்துக்களும் படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களை செய்கிறார் என்பதைக் குறிக்கிறது. இவரது விரிந்த காதுகள் உலகத்து மக்களது குறைகளைக் கேட்டு அவற்றை நிவர்த்தி செய்யும் வண்ணம் அமைந்து காணப்படுகின்றது. பெருத்த வயிறு உலகங்கள் எல்லாம் அவரது வயிற்றினுள் அடக்கம் என்று கூறுகின்றது. தொங்க விடப்பட்டிருக்கும் வலதுகால் ஆன்மாவிற்கு தற்கால முடிவு வந்தவிடத்து அவ் ஆன்மாவின் கன்மத்திற்கு ஏற்ப மறு பிறப்புக் கொடுத்து பூமியில் மறுபடி சஞ்சரிக்கவிடுவதை உணர்த்துகிறது. மேலே மடித்து வைத்திருக்கும் இடது காலானது நற்கருமங்களினால் பக்குவம் பெற்ற சீவன்களுக்கு முத்தியை கணபதி கொடுக்கிறார் என்றும் அப்படியாக தன்னிடம் முத்திப் பேற்றுக்காக வந்த ஆன்மாக்களுக்கு இடது கையில் இருக்கும் தித்திப்பான மோதகத்தைக் கொடுத்து இனிப்பான ஆனந்தத்தை நல்குகின்றார் என சித்திரிக்கப் படுகின்றது.

யானை என்ற மிருகம் ஆணவம், கன்மம், மாயை எனும் மும் மலங்களும் உள்ள பிராணி. இதே போலவே சீவனும் மும்மலங்களினால் கட்டுண்ட வண்ணம் காணப்படுகிறது. ஆன்மாவினது மல நீக்கம் கருதியே கணபதி இடது கரத்தில் பாசக்கயிற்றினையும், வலது கரத்தில் அங்குசத்தையும் தாங்கியுள்ளார். மதங் கொண்ட யானையை பாசக்கயிற்றினால் கட்டி அங்குசத்தினால் குத்தி அடக்குவது போல் நாம் நமது மதங்களை அடக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. அத்துடன் துதிக்கையில் இருக்கும் தண்ணீர்க்குடம் நாம் கடவுளை பூசை செய்து பக்தி செய்ய வேண்டும் என்பதை உணர்த்துகிறது. மற்றொரு கையில் கெட்டியாக இருக்கும் கூர்மையான ஆயுதம் அஞ்ஞானத்தை கொன்று ஞானத்தை அடைய வேண்டும் என்கிறது. விநாயகர் சித்தி புத்தி என்று சொல்லப்பட்ட இரண்டு மனைவிகளை மணக்காமல் மணந்தார் என்று கூறப்படுகின்றது. இந்த இரு மனைவிமாரும் சித்தம், புத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லப்படுகின்ற நல்ல சித்தமும் சரியான புத்தியையும் உணர்த்துகிறது. நற் சித்தத்துடனும் சரியான புத்தியும் இருந்தால் ஞானம் உண்டாகும் என்பதே அதன் தத்துவம் ஆகும்.

கணபதிக்கு 32 திருவுருவங்கள் உண்டு எனக் கூறப்படுகிறது. விநாயகப் பெருமானை வெவ்வேறு பெயர்களினால் மக்கள் அழைத்து வழிபடுகின்றனர். விநாயகர் என்னும் பெயரை வி+நாயகர் என்று பிரித்து தனக்கு மேல் தலைவன் இல்லாதவன் என்று கூறப்படுகிறது. கஜானனன் என்னும் பெயரினது தத்துவமானது யானை முகத்தினை உடையவன் என்று அமைகிறது. விக்கினேஸ்வரன் என்பது விக்கினங்களை தீர்ப்பவன் என பொருள் படுகின்றது. லம்போதரர் என்னும் பெயரானது பருத்த திருமேனியையும், பேழை வயிறு படைத்தவர் எனும் கருத்துப்பட அமைகின்றது. ஐங்கரன் என்னும் பெயரானது ஐந்தாவது கரமாகிய துதிக்கையை உடையதால் ஏற்பட்டுள்ளது. ஒற்றைக் கொம்பன் எனும் பெயர் தியாக உள்ளத்தை குறித்து நிற்கிறது. கணபதி என்ற பெயரானது கணங்களுக்கு தலைவன் என்ற கருத்துப்பட அமைந்து அதன் தத்துவங்களை குறித்து நிற்கின்றது.

விநாயகப் பெருமானை மனத்தினில் இனிய முறையில் இருத்தி அவரை அன்போடு வழிபட்டு அவரது உருவத்தினுள் பொதிந்துள்ள தத்துவக் கருத்துக்களை புரிந்து விநாயகப் பெருமானிடம் இருந்து வேண்டிய வரங்களைப் பெற்று நாம் இப்பிறவி எடுத்த பயனையும் இப்பிறவியில் இருந்து விடுபட்டு முத்திப் பேற்றினையும் பெற்று உய்வோமாக.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்'

செல்வி. நிரோஜினி ஸ்ரீகாந்தன்

---

## விநாயகரின் பூசைக்குரிய மலர்கள் (21)

மாசிப்பச்சை, கையாந் தகரை, வில்வம், ஊமத்தை நொச்சி,
நாயுருவி, கத்தரி, வன்னி, அலரி, காட்டு அத்தி, எருக்கு,
மருது, விட்ணுகரந்தை, மாதுளை, தேவதாரு, மரு, நெல்லி,
சிறுசெண்பகம், செந்தாளி, பாதிரி, அருகு.

அருகும், வன்னியும் இவற்றில் சிறப்பானவை. அருகம்புல் எப்பொழுதும் ஆனைமுகனை ஆனந்தப்படுத்தி விடும்.

---

கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு
எல்லாந் தெரிந்தவர்களும், ஏதும்
தெரியாதவர்களும் உலகில் இல்லை.
ஆதலால் அடக்கமும், பணிவும் உள்ளவர்களாக
இருத்தல் வேண்டும். பணிவு மனிதனுடைய
வாழ்வை உயர்த்தும்.

- வாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாபத்திய நெறி தோற்றமும் வளர்ச்சியும்

திரு.தி.மதிவதனன், ஆசிரியர்,யாழ்ரன் கல்லூரி

இந்து சமயத்தில் காணப்படும் வழிபாட்டு முறைகளுள் விநாயகரை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் காணாபத்தியம் ஆகும். விநாயகர் சிவனுக்கும், பார்வதிக்கும் புதல்வராக அவதரித்தவர் எனக் குறிப்பிடப்படுகின்றார். விநாயகரின் தோற்றம் பற்றி பலவித கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. விநாயகக் கடவுளின் பிறப்புப் பற்றிய செய்திகள் சிவபுராணம், மச்சபுராணம், வராக புராணம், கந்தபுராணம் முதலிய வடமொழிப் புராணங்களில் காணப்படுகின்றன.

விநாயகர் வழிபாட்டின் தோற்றம்பற்றி பல்வேறு கருத்துக்கள் உள்ளன. வடமொழி முதல் நூலாகிய ரிக் வேதத்தில் கணங்களின் தலைவனாகிய கணபதியைப் பற்றிய குறிப்புக்கள் வருதலால் விநாயக வழிபாடு வேத காலத்தில் இருந்தது என்று கூறப்படுகிறது. கி.மு. 5 ஆம் நூற்றாண்டிற்கு பின்னர் தோன்றிய வடமொழி இலக்கியங்களில் கணேசரைப் பற்றிய சில குறிப்புக்கள் காணப்படுகின்றன.

தமிழகத்தில் விநாயக வழிபாடு சதுக்கப் பூதத்தில் இருந்து தோன்றியது என்றும், உழவர்களின் தெய்வமாக பூசிக்கப்பட்டதென்றும் யானைகள் மிகுந்த பண்டைத் தமிழ் நாட்டில் விலங்கின வழிபாட்டின் அடிப்படையில் வேழமுகன் வழிபாடு தோன்றியது எனவும் ஓம் என்ற பிரணவ ஒலிக்கு இறைவடிவம் கொடுத்துத் தமிழர் விநாயகரை வணங்கினர் எனவும், இவ்வழிபாடு தமிழருக்கே உரியது எனவும் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகிறது.

இலக்கிய, சிற்ப சான்றுகளின் அடிப்படையில் நோக்கும் போது, விநாயகர் வழிபாடு பல்லவர் காலத்தில்தான் தமிழகத்திற்கு கொண்டு வரப்பட்டது என்பது தெளிவாகின்றது. சங்க இலக்கியங்களிலோ, சங்கமருவிய கால இலக்கியங்களிலோ, இரட்டைக் காப்பியங்களிலோ விநாயகர் வழிபாடு இடம் பெற்றதாகத்தெரியவில்லை. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் நரசிம்மவர்ம பல்லவன், மேலைச் சாளுக்கியரின் தலைநகரான வாதாபியை வெற்றி கொண்டு அழித்த போது அவனுடைய சேனாதிபதியான பரஞ்சோதி (சிறுத்தொண்டர்) வாதாபியிலிருந்த கணபதி விக்கிரகத்தை தம்முடைய ஊரான திருச் செங்கோட்டங்குடிக்கு கொண்டு வந்து பிள்ளையார் வழிபாட்டை தமிழ் நாட்டில் தொடக்கி வைத்தார் என்பது அறிஞர்களின் கருத்தாகும். சாளுக்கிய நாட்டில் கி.பி. 6, 7 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த விநாயகர் சிறபங்கள் பல உள்ளன. இவற்றில் விநாயகரை சப்த கன்னியருடன் அமைத்தல் வழக்கமாகும். இராசசிம்மனால் காஞ்சியில் கட்டப்பட்ட கைலாசநாதர் கோயிலில் இத்தகைய சிற்பம் இடம் பெற்றுள்ளதை நோக்கும் போது, சாளுக்கிய நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு விநாயகர் வழிபாடு கொண்டு வந்திருக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகும் என டாக்டர் ஏகாம்பரநாதன் குறிப்பிட்டுள்ளார்.

அப்பர் சம்பந்தர் பதிகங்களில் முதன் முறையாக விநாயகர் பற்றிய குறிப்புக்களைக் காண முடிகிறது. அப்பர் திருவதிகை வீரட்டானத்தை பாடியுள்ள பதிகத்தில்,

’பலபல காமத்தராகி பகைத் தொழுவார் மனத்துள்ளே
கலமலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்

என்றும், திருவீழிமிழலைப் பதிகத்தில்,

’கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயா சுரனை யவனாற் கொல்லத்தார் போலும்

எனவும் குறிப்பிட்டுள்ளமையால் அப்பர் காலத்தில் விநாயக வழிபாடு இருந்தது என்பது புலனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தர் தமது பதிகம் ஒன்றில் கரியான் மா முக முடைய கணபதி' என்றும் திருவலிவலத்து இறைவனைப் பாடுங்கால்

'பிடியதனுரு உமை கொள மிகு கரியது
வடி கொடு தன தடி வழிபடு மவரிடம் )

கடி கண பதி வர...' என்று கூறியுள்ளார். இப்பாடலில் இறைவன் கடகளிறாகவும், இறைவி மடப்பிடியாகவும் இணைந்ததால் வேழமுகத்தானாகிய கணபதி தோன்றினான் என்றும் சுப்பிரபேதாகமக் கதை கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சோழர் காலத்தில் மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை, மூத்த பிள்ளையார் மும்மணிக் கோவை, திருநாரையூர் விநாயகர், இரட்டை மணிமாலை, விநாயகர் அகவல் போன்ற இலக்கியங்கள் விநாயகரை முழுமுதற் கடவுளாகக் கொண்டு எழுந்தமையை நோக்கும் போது அக்காலத்தில் விநாயக வழிபாடு மிகச் சிறந்த நிலையில் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. நாயக்கர் காலத்தில் கணேசரின் பலவேறு வகையான சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும் ஆலயங்களில் இடம் பெறலாயின. அவற்றுள் சக்தி கணபதி, நாட்டிய கணபதி, உச்சிஷ்ட கணபதி, வீர கணபதி, ஏரம்ப கணபதி போன்றன முக்கியமானவைகளாக விளங்குகின்றன.

தற்காலத்தில் விநாயகருக்குத் தனியாகப் பல கோயில்கள் கட்டி விழா எடுத்து வருகிறார்கள். தமிழகத்திலும், ஈழத்திலும் விநாயகர் வழிபாடு சிறப்புடன் விளங்குகின்றது.

மிகப்பழைய காலத்தில் விநாயகர் ஒரு பிரமச்சரிய தேவராகக் குறிப்பிடப்படுகிறார். பிற்கால சமய மரபுகளில் ஞானத்திற்கும், வெற்றிக்கும் அவர் தலைவராகிறார் என்ற கருத்தில் புத்தி, சித்தி என்ற இரு துணைவியர்கள் உள்ளார்கள் என்றும் கூறப்படுகிறது. கி.பி. 6ம் நூற்றாண்டளவில் தோன்றிய காணாபத்தியக்கோட்பாட்டின் படி கணபதிக்கு ஒரு தேவி உண்டு என்றும் அவள் அவர் பின்னே இருப்பவளாகவும் குறிப்பிடப்படுகிறது. அத்துடன் சிவன், விஷ்ணு, பிரமா ஆகிய மும் மூர்த்திகளிலும் உயர்ந்தவர் ஆகிறார். தேவர்கள் தமது இலட்சியங்கள் ஈடேற முதலில் விநாயகரை வணங்கும் நிலை காணப்படுகிறது. ஒரு புராணத்தில் சிவபெருமான் 'உன்னிடத்தில் வெற்றி,தோல்வி பெறப்படட்டும். மற்றத் தேவர்களை வழிபடுவதற்கு முன்னர் மக்கள் உன்னை வணங்கி உன்னருளை வேண்டி நிற்கட்டும் அவ்வாறு செய்யாது விட்டால் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியில் தோல்வி அடையட்டும்' என விநாயகருக்குக் கூறியதாகக் குறிப்பிடப்படுகிறது.

கணபதிக்கு 32 வடிவங்கள் உண்டு எனக் கூறப்படுகிறது. அவற்றுள் 16 வடிவங்கள் மிகச் சிறப்பானவை எனக் கருதப்படுகிறது. பதினாறு உருவங்களையும் கொண்டு சோடஷ கணபதியாகி பக்தர்களுக்கு அருள்புரியும் விநாயகர் பஞ்ச பூதங்களையும் தன்னுள் அடக்கியவர் என்பதையே வெளிப்படுத்துகின்றார். அவரின் மடித்து வைத்துள்ள பாதங்கள் பூமியையும், வயிறு நீரையும், மார்பு நெருப்பையும், புருவங்கள் சேர்ந்த பகுதி காற்றையும், புருவங்களின் நடுவேயுள்ள வளைந்த கோடு ஆகாயத்தையும் உணர்த்துவதாகக் குறிப்பிடுவர்.

கணபதியை வழிபடுவோர் சக்தியோடு கணபதியைச் சேர்த்தும் கொள்வர். சக்தி கணபதிக்கு ஐந்து பிரதான வடிவங்கள் குறிப்பிடப்படுகின்றன.

1. மகா கணபதி
2. உச்சிஷ்ட கணபதி
3. உமாத்துவ கணபதி
4. பிங்கள கணபதி
5. லட்சுமி கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காணாபத்திய வழிபாடு ஆறு வகைப்படும் எனக் கூறப்படுகிறது. அனர்த்தகிர் என்பவரால் எழுதப்பட்ட 'சக்கர திக்' என்ற நூலில் இவ் ஆறு வழிபாடுகளும் கூறப்பட்டுள்ளன. முதல் வழிபாடு மகாகணபதியை வழிபடுதலாகும். இவ்வழிபாட்டில் கணபதி தம் சக்தியோடு கூடி பத்துக் கரங்களைக் கொண்டு, செம்மை நிறம் பெற்று இருப்பவராகக் குறிப்பிடப்படுகிறார். இரண்டாவது வழிபாடு 'ஹரித்திரா' வழிபாடு ஆகும். இதில் கணபதி மூன்று கண்களையும், நான்கு கரங்களையும் கொண்டு மஞ்சள் நிறத்தோடு காணப்படுபவராகக் குறிப்பிடப்படுகிறார். இவரை வழிபடுபவர்கள் யானை முகத்தை ஒரு தந்தத்தோடு பச்சை குத்திக் கொள்வர். மூன்றாவது வழிபாடு உச்சிஷ்ட கணபதியை வழிபடுதலாகும். இவர் சக்தியோடு கூடிய நான்கு கரங்களை உடையவராகக் கூறப்படுகிறது. இவரை வழிபடுவோர் நெற்றியில் சிவப்பு அடையாளம் இட்டுக் கொள்வர்.

ஏனைய மூன்று வழிபாடுகளான நவனீத கணபதி, சுவர்ணா கணபதி, சந்தான கணபதி ஆகியவை வேத மார்க்கத்தைப் பின் பற்றுவனவாக கூறப்படுகிறது. இங்கும் கணபதியே உயர்ந்த தேவராகவும், மற்றைய தேவர்கள் எல்லாம் அவரது அங்கமாகவும் கொள்ளப்படுகிறது. காணா பத்தியக் கோட்பாடு இந்து சமயத்திற்கு மட்டும் உரியதன்று. பௌத்த மதமும் இக்கோட்பாட்டை கொண்டு அமைகிறது. பௌத்தம் பிற நாடுகளில் பரவத் தொடங்கிய போது கணபதிக் கோட்பாடு சார்ந்த சில இந்து சமயக் கூறுகளை தன்னுடன் கொண்டு சென்றது. அவ்வகையில் சீனாவிலும், யப்பானிலும் கணேசர் இருவகையாக அமைக்கப்பட்டுள்ளார். முதல் அமைப்பில் அவர் தனி வடிவத்திலும், இரண்டாம் அமைப்பில் இரு யானைமுகக் கடவுளர் எதிர் எதிரே நிற்பதான வடிவத்திலும் காட்டப்படுகிறார்.

காணாபத்திய நெறி ஒரு குறிப்பிட்ட கடவுள் நெறியாக அமைந்தாலும், அது கணபதியை உயர்ந்த உட் பொருளாக உயர்த்தி வைத்துள்ளது. இத்தன்மையினால் மிக உயர்ந்த தத்துவமாகக் கணபதி கொள்ளப்படுகிறார். 'சாரதா திலகம்' என்ற நூலில் காணப்படும் இரு பாடல்களிலிருந்து கணபதி வழிபாட்டின் நோக்கமும், உட்பொருளும் அறிய முடிகிறது. வேதங்களாலும் அடைய இயலாத ஆதியானவனாக கணபதியை வழிபாடு செய்து ஆன்மாவைச் சூழ்ந்துள்ள பேரிருளான அறியாமையை அவனது மகத்துவத்தால் அகற்றிக் கொள்ளலாம் என்ற பொருளில் இப்பாடல்களில் கணபதியின் உயர்வும், வழிபாட்டு நோக்கமும் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஏனைய தெய்வங்களுக்கு உள்ளது போன்று கணபதிக்கும் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. சிவனது பணியாட்களான கணங்களின் தலைவர் எஜமானர் என்ற கருத்தில் கணேசர், கணபதி என்ற பெயர்களும், யானை முத்தை உடையவர் என்ற கருத்தில் யானைமுகன், வக்கிரேதுண்டர் என்ற பெயர்களும், ஒரு துதிக்கையை உடையவர் என்ற கருத்தில் ஏகதுண்டர் என்ற பெயரும், பானை வயிறு உடையவர் என்பதால் லம்போதரர் என்ற பெயரும், எலி வாகனத்தை உடையவராதலால் ஆகுதரர் எனவும், மக்களின் விக்கினங்களைத் தீர்ப்பவர் என்ற வகையில் விக்கினேஸ்வரர் என்ற பெயரும், மக்களுக்கு வெற்றியையும், காப்பாற்றுதலையும் தருபவர் என்ற வகையில் ஹேரம்பர் என்ற பெயரும் வழங்கப்படுகின்றன.

கடவுள் சந்நிதியில் நாம் வாழுகின்றோம். கடவுள் எங்கும் உறைபவர். அவர் நாம் நினைப்பதை, பேசுவதை, செய்வதை அறிந்து கொண்டேயிருக்கின்றார். ஆதலால் நல்ல சிந்தனை, நல்ல சொற்கள், நல்ல நடைகள் ஆகியனவைகளை மேற்கொள்ள வேண்டும்.

வாரியார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அற்புதம் நிறைந்த கற்பகம்

பிரணவத்தைக் குறிக்கும் ஆனைமுகமும், பஞ்ச கிருத்தியங்களைச் செய்பவர் என்பதற்கு ஐந்து கரங்களையும், சூரியன், சந்திரன், அக்கினியை உணர்த்தும் மூன்று கண்களையும், ஆன்மாக்களின் வினைவெப்பத்தைப் போக்கவென விசாலமான இரண்டு செவிகளையும், அண்டங்களும் அவற்றின் உயிர்களும் தன்னுள் அடக்கம் என்பதை உணர்த்தும் பெருவயிறுமான திருவுருவம் கொண்டவர் விநாயகப் பெருமான்.

எக்காரியங்களை ஆரம்பிக்கும் போதும் விநாயகப் பெருமானை வேண்டித்துதித்து ஆரம்பிப்பதே இந்துசமயிகளின் மரபாகும் சிவாச்சாரியார்கள் கூட,

“சுக்கிலாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
பிரசன்னவதனம் தியாயேத் சர்வ விக்னோப சாந்தயேத்“

என விநாயகரைப் பணிந்தே தமது கிரியைகளை ஆரம்பிக்கின்றனர்.

இந்துமதத்திலே தெய்வ வழிபாடுகளுக்கு ஆசாரங்கள் பேணப்படுகின்றன. ஆயினும் விநாயக வழிபாட்டுக்கு அவ்வாறல்லாத ஒரு சிறப்பு காணப்படுகிறது. ஆறு, குளங்களின் கரைகள், அரசமரத்தடி, காட்டு வெளிகள், சந்திகள், தெருஓரங்களிலும் வீற்றிருந்து தன்னை வழிபடுபவர்களுக்கு அருள் தருபவர். கருங்கல்லிலும், களிமண்ணிலும், சாணத்திலும், மஞ்சள் மாவிலும் வடிவம் கொள்வார்.

இந்து மதத்தின் அரும்பெரும் நூல்களை அருளியவர்கள் கூட விநாயகப் பெருமானை முதன்னிலைப் படுத்தியே இவற்றை ஆக்கியளித்திருக்கிறார்கள். இந்து மதப் பக்தி இலக்கியங்களிலும் விநாயகர் வழிபாடு முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

கலைகளுக்கு தெய்வம் கலைமகள். ஆனால் அறிவுக்கு தெய்வம் கணபதியே. தன்னைப் பூசிப்பவர்களைக் கைதூக்கி விடுவார் என்பதுடன், தன்னைப் பணிவோரது காரியங்கள் தோல்வியடையாது காப்பவரும் விநாயகரே. எனவே தான், “திருவாக்கும் செய்கருமம் கைகூடும் என்றும் விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான் எனவும் கபிலதேவர் தமது 11ம் திருமுறையில் குறிப்பிடுகிறார்.

மேன்மைகொள் சைவத்திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி கண்டெடுப்பதற்கு, திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரே காரணமாயிருந்தார் என்பதும் சைவ உலகம் அறிந்ததே. விநாயகருக்கு உரிய விரதங்கள் மூன்று வகையானது. வாரந்தோறும் சுக்கிரவார விரதமும், மாதம் தோறும் சதுர்த்தி விரதமும், ஆண்டுக்கு ஒருதடவை விநாயகர் சஷ்டி விரதமும் அனுட்டிக்கப்படுகிறது. ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தி திதியன்று வரும் விநாயகர் சதுர்த்தி வட இந்தியாவிலே தேசியப்பெரு விழாவாக கொண்டாடப் படுகிறது.

திரு. கி.வே.கிருஸ்ணானந்தன் B.A, பொதுமுகாமையாளர், யாழ்.மா.வி.நு.கூ.ச.சமாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய சுதந்திரப் போராட்டம் தடை செய்யப்பட்டிருந்த வேளையில் பாலகங்காதர திலகர் போன்றோரால் ஆவணிச் சதுர்த்திப் பெருவிழாவை முன்னிலைப் படுத்தி சுதந்திரப் போராட்ட விழாக்கள் பின்னெடுத்துச் செல்லப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் ஆவணிச் சதுர்த்தியின் சிறப்புக்கும், செல்வாக்கிற்கும் எடுத்துக்காட்டாகும்.

அவ்வாறானதோர் திருநாளில் ஆத்தியடி மேவும் கற்பகப்பெருமானின் பத்தாம் நாள் அலங்கார உற்சவம் அண்டை, அயலூரவர்களும் கலந்து கொள்ளும் பெருவிழாவாக நடைபெறுவது வழக்கம். இவ்வூரவர்கள் இத்தினத்தன்று ஆசாரசீலராக விரதமனுட்டிப்பதுடன் காவடி, கற்பூரச்சட்டி ஏந்துதல், அங்கப் பிரதட்சணம், அடியளித்தல், மற்றும் பல நேர்த்திகளையும் நிறைவு செய்து கொள்வர்.

அடியேனும் இவ்வாலயத்தின் புனித மண்ணிலே ஆவணிச்சதுர்த்தியன்று அங்கப்பிரதட்சணம் செய்வது வழமை. சென்ற ஆண்டின் நடுப்பகுதியில் எனது மகனை சத்திரசிகிச்சை ஒன்றிற்காக, ஜேர்மனியிலுள்ள எனது உடன்பிறப்பு ரவீந்திரனும், மனையாளும் அளித்த பெரு நிதியால், இந்தியாவிற்கு கொண்டு சென்றிருந்தேன். ஆண்டிற்கொரு முறைவரும் ஆவணிச சதுர்த்தியில், கற்பகனைக் கையெடுத்துக் கூப்பிய கரங்களுடன் , அவன் திருவீதியில் உருண்டு, புரண்டு வேண்டியதன் பலன்போலும் ஆவணிச் சதுர்த்தி நன்னாளிலே அப்பாரிய சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்று என் மகன் நலமேயுள்ளான்.

இந்து சமயத்தின் வளர்ச்சியில் சித்தர்களின் பங்கு அளப்பரியது. சித்தர்களாலும், முனிவர்களாலும் அருளப்பட்டது சித்தமருத்துவம். இது தமிழர்களின் பாரம்பரிய மருத்துவ முறையாகும். யாழ்ப்பாண மன்னராட்சிக் காலத்திலே சுதேச மருத்துவமாக சிறப்புடன் துலங்கிய சித்த மருத்துவம் தெய்வீகத்துடன் தொடர்புடையது. நக்கீர தேவரால் அருளப்பட்ட விநாயகர் திருவகவலில் , வியாதிகள் 4448 எனக் குறிப்பிடப்படுகின்றது. இந்து சமயத்தின் அங்கமான சித்தமருத்துவத் துறையில் இவ்வூரவர்களும் சிறந்து விளங்கினர். இவ்வாலய முகாமையின் தந்தையார் அமரர்.ஆறுமும் புண்ணியமூர்த்தி அவர்கள் சித்தமருத்துவத்தில் கைதேர்ந்து விளங்கவும், அவர்தம் மகன்களில் ஒருவர் மருத்துவத்துறையில் புகழ்பூத்து விளங்குவதும் எல்லாம் வல்ல கற்பகப்பிள்ளையாரை உபாசித்தமையேயாகும்.

கற்பகம் என்றால் நினைத்ததை, கேட்டதை தருவது என்று பொருள்படும். திருவாத்தி மரத்தின் கீழ் வீற்றிருக்கும் விநாயகர், கற்பக விநாயகர் - நினைத்ததைக் கேட்டதை தருபவர். இவ்வூர் மக்கள் அல்லும் பகலும் சதா அவரது நாமத்தை உச்சரித்து , பஞ்சம் பசியின்றி , அடம்பன் கொடி திரண்டதுபோல் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழ்ந்து தமது விழுமியங்களைப் பேணி வருவதும் கற்பகனின் கருணையினாலன்றோ.

பல வருடங்களுக்கு முன் இவ்வூர்ச் சனசமூக நிலைய நவராத்திரி விழாவின் போது " வாணி வரம் தாராய் " எனும் தலைப்பின்கீழ் " கோவில் உண்டு கொடிமரம் இல்லை , திருவீதி உண்டு தேர் இல்லை " என்று நான் சொன்ன கவிதை வரிகள் இன்று நிதர்சனமாகிவிட்டதென்றால், அது அந்த ஆனைமுகத்தோனது அற்புதமேயன்றிவேறொன்றில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனது பெரிய தந்தையார் அமரர்.கி.வைரமுத்து அவர்கள் 1987ல் இவ்வூர் வாசகர் வட்டத்தினால் வெளியிடப்பட்ட இவ்வாலயத்தின் கும்பாபிஷேக மலரில் " தோரோடும் திருநாள் எப்போது வருமோ, அவனருளாலே அவன் தேரோடும் ஞான்று வணங்கும் நாள் எப்பொழுதோ " எனக்குறிப்பிட்டிருந்தமை அவர்தம் வேணவா மட்டுமல்ல, இவ்வூரில் வாழ்ந்தவர்கள், வாழ்பலர்கள் அனைவரது ஊரவா மட்டுமல்ல, ஆத்தியடியானை முதலில் ஆராதனை செய்தவராம் பிரமனாச்சியின் பேரவாவுமாயிருக்கும்.

கோவில் முன்னாள் முகாமையாளர், அமரர்.பு.ஸ்ரீனிவாசன் அவர்கள் கும்பாபிஷேக மலருக்கு வழங்கிய ஆசியுரையில், 28வருடங்களுக்கு முன் தமது தந்தையார், ஆறுமுகம் புண்ணியமூர்த்தி அவர்களுக்கு, இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் செய்து வைக்கும் பேறு கிடைத்தமையும், அதன் பின் தமது காலத்தில் 1987ல், கும்பாபிஷேகம் நடாத்தும் பெறுபேறு தமக்கு கிடைத்தது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

காலத்தின் கோலத்தினால், காலன் அவரை நம்மிடமிருந்து பிரித்து, அதுவும் ஒரு சதுர்த்தி விரத நன்னாளில் கற்பகனது கழலடியை ஏகவைத்தனன். அடக்கமும் அமைதியும், சாந்தமும், மனப்பக்குவமும் நிறைந்த அன்னார் விட்டுச் சென்ற பணியை தொடரும் அவர்தம் சகோதரர் திரு.பு.ஸ்ரீகாந்தன் அவர்கட்கும், அலங்கார உற்சவமாக நடைபெற்று வந்த பிரமனாட்சி தோட்டத்து கற்பகப் பிள்ளையாரது உற்சவங்கள், மகோற்சவமாக நடைபெறக் காரணமானவர்கள் அனைவருக்கும் தும்பிக்கையானருள் தப்பாமல் சாரும்.

வியாசர் முன்னே வந்தமர்ந்து, பாரதக் கதை எழுதும்போது ஒடிந்த எழுத்தாணிக்காக, தன் அழகு முகத்தின் ஒரு கொம்பை ஒடித்து உலகுக்கு மகா பாரதத்தை தந்தருளிய தியாகத்தின் திருவுருவை ,ஔவைக்கும் , அகத்தியருக்கும் அருள் புரிந்த அற்புதம் நிறைந்த கற்பகனை தம்குல தெய்வமாக ஆராதிக்கும் நன்மக்கள் வாழும் இவ்வூரில் பிறந்தது யான் செய் புண்ணியமே.

கஜமுகாசுரனால் பட்டதுன்பம் தாளமாட்டாது வருந்திய உயிர்களுக்கு " உங்கள் துயர் அனைத்தும் விரைவில் துடைப்போம் " என அபயம் அளித்த சிவனிடமிருந்து வெளிப்பட்ட சக்தியின் வடிவமான விநாயகப் பெருமான், பாரதக்கதையை எழுதி முடிக்க அன்று ஒடித்த தனது கொம்பினால் கஜமுகா சுரனை வதம் செய்து மக்கள் துயர்துடைத்தது போல், இன்று தேரேறி வரும் பிரமனாச்சி தோட்டத்து கற்பகப்பிள்ளையாரும் எங்கள் துயர் அனைத்தும் விரைவில் துடைத்தருள வேண்டும் என அவர்திருத்தாள்பரவிப்பணிவோமாக.

கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமனாச்சி தோட்ட கற்பகப் பிள்ளையார்
## போற்றி திருவகவற்பா

பிரமனாச்சி தோட்ட ஆத்தியடி மேவும்
பரமனார் தன்மகனே கற்பகப் பிள்ளையாரே
வெடியரச பூபதி விளங்கு சந்ததி
துடியிடை நாச்சியார் நித்தமும் கைதொழுதிட
வரமருளி வாழ்வித்தாய் வித்தகனே விநாயகனே
போற்றி போற்றி போற்றி போற்றி

பிரணவப் பொருளே ஓங்கார சோதியே
அரக்கர் செருக்கறுத்து தேவர் துயர் துடைத்த
ஆனை முகத்தானே ஐங்கரத்தானே
ஒளவைக்கு முத்தி அருளிய ஐயனே
அடியேமைக் காத்தருள்வாய் திருவடி சூடிநின்றோம்
போற்றி போற்றி போற்றி போற்றி

பிச்சை ஓட்டில் ஆடும் பற்கள்
கொழுவி இழுக்க காலைத் தூக்கி
ஆடிய அப்பன் நடனம் நின்றிட
கடத்தின் வயிறு எழுப்பிக் குறிக்க
ஆடிய நர்த்தனை விநாயகா வித்தகா
போற்றி போற்றி போற்றி போற்றி

அண்ணா அண்ணா என்று அழைத்திட
கணப் பொழு தொன்றில் ஆனையாய் அசைந்து
வள்ளியைச் சேர்த்த விநாயகா வந்திடுவாய்
கொடுங் கோ வரசை நெடிய கரத்தால்
பிடித்து மடக்கி எறிவாய் நீயே
போற்றி போற்றி போற்றி போற்றி

திரிபுர மெரித்த திரிசடைக் கடவுள்
ஊர்பெருந் தேரின் அச்சது ஒடித்த
ஒப்பில்லா வீரனை ஓதுவார்க் கெளியனே
ஒளவைக்கு புண்ணிய லோகந் தன்னை
தும்பிக் கையா துதித்தோ முன்னை
போற்றி போற்றி போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழோ டிசைபாடி நித்தமுங் கைகூப்பி
செந்தழ செம்மை வஞ்சனைப் பாசீச
நஞ்சா நிலை கெட்டு மாய்த்து ஒழித்திட
தஞ்சம் தருவா யஞ்ச வென்று
குஞ்சரமே யுன்னடி பணிந்தோம்
போற்றி போற்றி போற்றி போற்றி

உலகம் உய்ய உவந்து கருணை
பொழியும் சீரோனே பார்வதி திருமகனே
பேரின்பம் நல்கும் புகழ் சேர் பேரியனே
எல்லா உலகும் கைகூப்பி உன்னை
வணங்கிட வரமருளும் வள்ளலே
போற்றி போற்றி போற்றி போற்றி

அமரர்
சி. வைரமுத்து
(பிரசித்த நொத்தாரிசும்
சமாதான நீதவானும்)

---

யானைக்கு மிகவும் பிடித்தமான ஆகாரம் அரிசியும், வெல்லக் கட்டியும், தேங்காயுமே யாகும். இவைகளைக் கொண்டே மோதகம் தயாரிக்கப்படுகிறது.

மோதகம் கணபதிப் பெருமானுக்கு மிகவும் பிடிக்கும்.

---

மனிதனுக்குத் துன்பங்கள் அத்தனைக்கும் மூல காரணம் ஆசை ஒன்றுதான். ஆசையை விட்டவனே இன்பத்தை அடைவான். ஆசையை விடாதவன் துன்பத்தில் ஆழ்ந்து துயரமடைவான்.

- வாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா கும்பாபிஷேக கிரியா விளக்கம்

இவ்வுலகத்தில் சகல ஆன்மாக்களும் பிறந்து இறந்து உழல்வன. அவை பசுக்கள் எனப்படும். இவர்கள் இகபர பலன்களை அடைவதற்காக ஆலய வழிபாடு செல்லப்பட்டது. பதியாகிய சிவ பெருமான் அருளிய வேத சிவாகமங்களின் பிரகாரம் சிற்ப சாஸ்திர இலக்கணங்களுக்கு அமைய ஆலயங்கள் நிர்மாணிக்கப்டுகின்றன. ஆலயத்தில் நிறுவப்படும் திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகத்திலே கும்பாபிஷேகம், குடமுழுக்கு, குட நன்னீராட்டு விழா என்பன ஒரே பொருட் சொற்களாகும். கும்பாபிஷேகம் நான்கு வகைப்படும். அவையாவன, (ரை) ஆவர்த்தனம் (ரைரை) அனாவர்த்தனம் (iii) புனராவர்த்தனம் (iv) அந்தரிதம் என்பனவாகும்.

ஆவர்த்தனம் என்பது புதிதாக ஒரு சிவலிங்கத்தை பாலப்பிரதிஷ்டை செய்து புதிதாகக் கோயில் கட்டி பாலாய மூர்த்தியைக் கும்பத்தில் எடுத்து மூலஸ்தானத்தில் மூர்த்தியை ஸ்தாபித்து அபிஷேகஞ் செய்தலாகும்.

அனாவர்த்தனம் என்பது ஓர் ஆலயம் வெகு காலமாகப் பூசையில்லாமல் சீர்குலைந்து அழிந்து போயிருக்க அதனை முன் போல் திருத்தி கும்பாபிஷேகம் செய்தலாகும்.

புனராவர்த்தனம் என்பது ஆலயக் கட்டிடங்களில் அல்லது அஷ்டபந்தனத்தில் பழுதுகள் ஏற்பட்ட விடத்து சுவாமியை பாலாயத்தில் வைத்துப் பூஜித்து திருத்த வேலைகள் செய்து பின்னர் கும்பாபிஷேகம் செய்தலாகும்.

அந்தரீதம் என்பது ஆலயத்தில் சேரன், சண்டாளன் முதலியோர் உட்சென்று தீண்டியதன் காரணமாக ஏற்பட்ட பழுதுகளைத் திருத்தி உடனே அபிஷேகம் செய்தலாகும். இத்தன்மையான அந்தரீதப் பிரதிஷ்டைக்கு நாள் பார்க்க வேண்டியதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கும்பாபிஷேகக் கிரியைகளில் முதலில் செய்யப்படும் கிரியைக்கு அனுக்ஞை என்று பெயர். கடவுளை பிரதிஷ்டை செய்வதற்காக அவருடைய பூரண திருவருளையும், உத்தரவையும் பெறுவதே அனுக்ஞையாகும்.

அனுக்ஞை செய்வதற்காக வேண்டிய திரவியங்களை சேகரித்து முதலில் விக்னேஸ்வர பூஜை, புண்ணியாகம், பஞ்சகவ்வியம் செய்கின்றோம். நாம் தொடங்கியுள்ள கும்பாபிஷேகக் கருமம் எவ்வித இடையூறுகளும் இன்றி இனிது நிறைவேறுதற் பொருட்டு முதலில் விக்னேஸ்வரப் பூஜையும், நமது உடம்பிலுள்ள அந்தக்கரணங்களை சுத்தி செய்தற் பொருட்டு பசுவிலிருந்து எடுக்கப்பட்ட பால், தயிர், நெய், கோமயம், கோசலம் ஆகிய ஐந்து வஸ்துக்களையும் ஒன்று சேர்த்துப் பூசித்தலாகும். பஞ்ச கவ்விய பூசையும், ஸ்தல சுத்தியின் பொருட்டும் கங்கையைப் பூசித்தலாகிய வருண பூஜை எனப்படும் புண்ணியாகமும் முதலில் நடைபெறும் கிரியைகளாகும்.

## பிராம்மண அனுக்ஞை

முதற்கண் பிராம்மண அனுக்ஞை சொல்லப்படுகிறது.வேத சிவாகமங்களிலும் புரான இதிகாசங்களிலும் பிராம்மணோத்தமர்கள் நடமாடுந் தெய்வம் எனச் சொல்லப்படுகிறது. முப்பொழுதும் இறைவனுடைய திருமேனி தீண்டும் பெறற்கரிய பேற்றைப் பெற்ற தன்மையினாலும், ஆன்மார்த்தம், பரார்த்தம் ஆகிய இருவகைக் கிரியைகளையும் நன்கு கற்றுத் தொழில் செய்கின்ற தன்மையினாலும், தெய்வத் தன்மை பொருந்திய அவர்கட்கு தட்சணை முதலிய உபசாரங்கள் செய்து அவர்களிடத்திலுள்ள தெய்வீக உத்தரவைப் பெறுதல் பிராம்மண அனுக்ஞை என்று சொல்லப்படும்.

சிவஸ்ரீ - சி.சிதம்பரநாதக்குருக்கள்,மட்டுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவ அனுக்ஞை

சிவாச்சாரியாரானவர் ஏனைய பிராமணோத்தமர்களுடன் மங்கல வாத்தியங்கள் முழங்க வீதிப்பிரதட்சினம் செய்து தேவாதி தேவர் எழுந்தருளி இருக்கும் மூலாலயத்தையடைந்து விசேட பூஜை செய்து. அனுக்ஞையில் பூசிக்கப்பட்ட திரவியங்களை கரத்தில் தாங்கி "எடுத்துக்கொண்ட

குறிக்கோளாகிய மகா கும்பாபிஷேகம் இடையூறுகளின்றி இனிது நடாத்தியருள வேண்டும்" என்ற கருத்துக்கடளங்கிய சுலோகத்ததை உச்சரித்து அம்மூர்த்தியிடத்தில் உத்தரவு பெறுதலாகும்.

## தன பூசையும் திரவிய சுத்தியும்

கும்பாபிஷேகத்திற்கென தரும நெறியினாலேயே தேடப்பெற்ற பணத்தை சிவாச்சாரியாரிடம் கொடுக்க வேண்டும். அவர் அவற்றிற்கு முறைப்படி அபிஷேகம், பூஜை செய்து பின் தர்மகர்த்தாவை அழைத்து சந்நிதானத்தில் இருக்கச் செய்து கிடைத்தற்கரிய இந்த மானிட ஜென்மத்தில் செய்தற்கரிய தருமங்களில் சிவதர்மம் யாவராலும் செய்தற்கரியது. இந்தத் தர்மமானது பூர்வஜன்ம புண்ணியவசத்தால் நீங்கள் செய்ய முன் வந்திருக்கிறீர்கள். ஆகவே உங்களால் கொடுக்கப்பட்ட தனத்தை 11 பங்காகப் பிரித்து,

| | |
|---|---|
| யாகத்துக்காக | 3 பாகமும் |
| அபிஷேகத்துக்காக | 1 பாகமும் |
| குருவுக்காக | 1 பாகமும் |
| உதவிக்குருமாருக்காக | 1 பாகமும் |
| பிராமண போசனத்துக்காக | 1 பாகமும் |
| ஜபம், தானம் இவற்றிற்கு | 1 பாகமும் |
| மண்டலாபிஷேகத்திற்கு | 1 பாகமும் |

ஆகச் செலவு செய்து சிறப்பாக நடாத்துவீர்களாக; என்று போதித்து முகூர்த்தப் பத்திரிகையையும், தர்மகர்த்தா கையில் கொடுத்தல் வேண்டும். இதுவே தன பூசை எனப்படுவதாகும்.

நெல் முதலாகிய தானியங்கள், சரக்கு வகைகள், இரத்தின வகைகள், வஸ்திரங்கள், சமித்து வகைகள் முதலான எல்லாவற்றையும் புண்ணியாக ஜலத்தினால் சுத்தி செய்து பூசித்து, அவ்வத்திரவியங்களை பின்னால் எடுத்து உதவுதல் வேண்டும். இதுவே திரவிய சுத்தி எனப்படும்.

## கிராம சாந்தி

ஆலயம் அமைந்திருக்கும் கிராமத்தில் சகல சீவராசிகளும், சகல சனங்களும் சுகமாகச் சீவித்தற் பொருட்டு அசுரன், ராட்சதன், பிரம்மராட்சசன், பைசாசன் முதலிய தேவதைகளினால் கேடுவராமல் காவல் தெய்வமான வைரவப் பெருமானைக் குறித்து பூஜை, ஓமம், பலி என்பனவற்றைச் செய்தலே கிராம சாந்தி எனப்படும். ஆலயத்திற்கு மேற்கே யாக மண்டலம், கும்பம், பரிவார கும்பம், யாகேஸ்வரன், யாகேஸ்வரி, சதுர்த்துவார கும்பம் இவற்றை வைத்து பூசை, ஓமம் செய்து நீற்றுப்பூசணிக்காய், அன்ன உருண்டை முதலிய பலிகளை இட்டு "இந்தக் கிராமத்திலே உள்ள சகல சீவராசிகளையும் நன்றாகப் பாதுகாத்து சுகமாக வாழ வைக்க வேண்டும். இந்த ஆலயம் எக்காலத்தும் நித்திய நைமித்தியங்களுடன் சிறப்பாக நடைபெற வேண்டும்" என்று விண்ணப்பம் செய்து பிரார்த்தித்தலாகும்.

## பிரவேச பலி

ஆலயத்தில் எட்டுத்திக்குகளிலும் வசிக்கின்ற இயக்கர், இராட்சகர், பிசாசர், பிரம்ம ராட்சதர், பூதர், காளி, சரளி, வைரவர் முதலிய தேவதைகளை கிழக்கு முதலான எட்டுத்திக்குகளிலும், மேடையமைத்து, அவ்வவ்விடங்களுக்குச் சொல்லப்பட்ட மண்டலங்களில் அந்தந்தத் தேவதைகளைப் பூசித்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னம்பூ, கமுகம்பூ, பூசணிக்காய்த்துண்டு, அன்ன உருண்டை, வடை, இளநீர், வெற்றிலை, பாக்கு, நெற்பொரி இவைகளை நிவேதித்து பஞ்ச தைலங்களினாலான பந்தத்தையும் குத்தி, மகாதேவனாகிய ஈஸ்வரனுடைய ஆஞ்ஞையினாலே அவ்வத் தேவைகளை முறையே கடல், மலையின் உச்சி, நீர் நிலை, காடுகள், வனாந்தரம், மயானம் முதலிய இடங்களில் சென்று வசிக்கும் வண்ணம் துரத்துதலேயாம். இது குறிப்பிட்ட ஆலயத்தில் துஷ்ட தேவதைகளினால் இடையூறுகள் ஏற்படா வண்ணம் செய்யும் கிரியையாகும்.

## ரக்ஷோக்ன ஹோமம்

ரக்ஷோக்னம் என்ற துஷ்ட தேவதைக்கு காஞ்சூரம் சமித்து, கடுகு, தவிடு, மிளகு இவைகளினாலும், நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் என்னும் பஞ்ச தைலங்களாலும் ஓமம் செய்து, அத்தேவதையை விலக்குதல் பொருட்டு செய்வது இந்த ரக்ஷோக்ன தேவையானது பூத, பிரேத, பிசாச, பிரம்ம ராட்சத என்னும் அட்ட தேவதைகளின் உபாதைகளை நீக்கும்பொருட்டு. பூசிக்கப்படுந் தேவதை, சிவன்,சக்தி, இவர்களைப் பூசித்து அவர்கள் ஆஞ்ஞையினால் துட்ட தேவதைகளை அவ்விடத்தில் நின்றும் விலக்கும் கிரியையாகும்.

## வாஸ்து சாந்தி

நிலத்தில் உள்ள குற்றங்களை நீக்கி சுத்தஞ்செய்யும் பொருட்டுச் செய்யப்படும் சாந்தியே வாஸ்து சாந்தி எனப்படும்.

அந்தகாசுர யுத்தத்தில் பரம்பொருளின் கோபத்தில் தோன்றியது ஒரு பூதம், அது அந்த காசுரனுடைய இரத்தத்தைக் குடித்தது. பின்பு சிவபெருமானிடம் பல வரங்களைப் பெற்று உலகை அடக்கியாளத் தொடங்கியது. அதன் கொடுமையைத் தாங்காது சிவபெருமானிடம் முறையிட்ட அவர் அதிபலர் என்னும் உருத்திரனைத் தோற்றி பூதத்தை அடக்கும்படி பணித்தார். அவர் அப்பூதத்தைப் பாசத்தால் கட்டுப்படுத்தி அதன் பூதவுடலில் பிரம்மா முதலிய தேவரை வசிக்கச் செய்தார். அந்த உடலுக்கு வாஸ்து என்று பெயர். வாஸ்து புருடனை எரித்து சுத்தப்படுத்துவதே வாஸ்து சாந்தியாகும். சுத்தஞ்செய்யும் விஷயத்தில் மண், நீர், நெருப்பு என்னும் மூன்றும் பயன்படும். அவற்றுள் நெருப்பு எரித்துச் சுத்தப்படுத்துதல் மேன்மையுடையது. அதுவே வாஸ்து சாந்தியில் கையாளப்படுகிறது.

மேலும் நிலத்துக்கு அதிபராக உள்ளவர் பிரம்மா. பூமிக்கு மழையைப் பெய்விப்பவன் இந்திரன். அதனால் வாஸ்து சாந்தியில் பிரம்மாவை முதன்மையாகவும், இந்திரன் முதலிய தேவர்களை அங்கமாகவும் பூசித்து வழிபாடு செய்யப்படுகிறது. இறுதியில் சர்வசம்□ர புருஷனாகிய வாஸ்து புருஷனை வைக்கோலினாலும், தருப்பையினாலும் செய்து, பூசித்து, ஓமாக்கினியில் கொழுத்தி அந்த இடங்களிலுள்ள துர்நாற்றம் முதலியன நீங்குதற் பொருட்டு கொண்டு சென்று புண்ணியாக தீர்த்தம் தெளித்து சுத்தம் செய்தலாகும்.

இவ்வாஸ்து சாந்தி கும்பாபிஷேகத்தில் மட்டுமல்ல, மஹோற்சவ ஆரம்பத்திலும், பாலஸ்தாபன காலத்திலும், பிராயச்சித்தம் செய்யும் போதும், கிரகப்பிரவேசத்தின் போதும் செய்யப்படும் சாந்தியாகும்.

## நவக்கிரக யாகம்

நவக்கிரக யாகம் என்பது நவக்கிரகங்களுக்காச் செய்யப்படும் யாகமாகும். இந்த நவக்கிரகம் ஹோமம் சில அசுப கருமங்களின் பின்பும், சுப கருமங்கள் நிகழ்வதற்கு முன்பும் செய்யப்படுவதாகும். பிரதிஷ்டை, சம்புரோக்ஷணை, சௌளம், உபநயனம், விவாகம், கிரகப்பிரவேசம், ரோக சாந்தி, ஆயுஷ்ய ஹோமம் முதலிய வைபவங்களிலும் இந்த யாகம் இடம்பெறுகின்றது. குறித்த சுபகருமத்தின் போது நவக்கிரகங்களால் தோஷம் ஏற்படாதவாறு பிரீதி செய்வதே இதன் கருத்தாகும். நவக்கிரக மண்டலத்தில் கும்பம் வைத்து பூசித்து அக்கினி காரியத்தில் அவ்விக்கிரகங்களுக்குரிய சமித்து, தானிய வகை, அன்ன வகை முதலியவற்றை ஹோமஞ் செய்து, பூர்ணாகுதி முடித்து தானாதிகள் வழங்கி, பிராமண போசனம் செய்வித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசா ஹோமம்

நான்கு திக்குகளிலும் முறையே பாசுபதாஸ்திரம், அகோராஸ்திரம், பித்தியங்கிராஸ்திரம், சிவாஸ்திரம் முதலியவர்களைப் பூசித்து காவல் செய்யும்படி கட்டளை இடுதலாம்.

## கோ பூஜை

நம் சமய நெறியிலே பசு தெய்வமாக வணங்கப்படுகின்றது. பசுவின் முகத்தில் பிரம்மாவும், முதுகில் விஷ்ணுவும், வயிற்றில் உருத்திரனும், மூலாதாரத்தில் மகா லட்சுமியும், கொம்பில் தேவர்களும், வால் நுனியில் ஸர்வ தீர்த்தங்களும், உரோமங்களின் அடியில் இருஷிகளும் வியாபித்து இருக்கின்றார்கள். நான்கு கால்களும் நான்கு வேதங்களாகப் பூஜிக்கப்படுகின்றது. இவ்வாறு பூஜிக்கப்பட்ட தெய்வத்தன்மை பொருந்திய பசவை மூலாலயத்துக்கு அழைத்துச் செல்லுதல் "கோவாசம்" எனப்படும். கோவாசம் கிருகப்பிரவேசங்களிலும் நடைபெறுதல் குறிப்பிடத்தக்கது.

## மிருத் சங்கிரகணம்

மிருத் - மண், சங்கிரகணம் - எடுத்தல். அங்குரார்ப்பண கிரியையின் பொருட்டு சுத்தமான இடத்தில் மண் எடுத்தல் மிருத் சங்கிரகணம் எனப்படும்.

சுத்தமான இடங்களாவன: நதிதீரம், தடாகக் கரை, மலையடிவாரம், தருப்பையடி, வில்வ மரத்தடி, புஷ்ப மரத்தடி, புண்ணியஸ்தலம், பசுமாடு கட்டிய இடம், வயல், நந்தவனம் என்பனவாம். சிவாச்சாரியர் அஸ்திர தேவருடன் மங்கல வாத்திய சகிதம் சென்று சுத்தமான இடத்தில் பிரம்மாவுக்கும், பூமாதேவிக்கும் பூசை செய்து, மண்வெட்டிக்கு அபிஷேகம் செய்து பூசித்து தேவியையும் வாஸ்து பிரம்மாவையும் இந்திராதி தேவர்களையும் "நான் தேவ காரியத்தின் பொருட்டு இவ்விடத்தில் மண் எடுக்கப்போகிறேன். அனுக்கிரகம் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்து பூமி தேவியை பூசித்த இடத்திலிருந்து 3 முறை மண்வெட்டியினால் மண்ணை எடுத்து தாம்பாளத்தில் இட்டு பட்டுத்துணியினால் மூடிச் சம்ரட்சணை செய்து மண் எடுத்த இடத்தைச் சமன்படுத்தி நவதானியம் இட்டு ஸப்தவாரி கும்பத்தை அபிஷேகஞ் செய்தலாம். இந்தக் கிரியையை மாலை வேளையில் செய்தல் உத்தமம்.

## அங்குரார்ப்பணம்

அங்குரம் - தானியங்கள். அர்ப்பணம் - இடுதல். எனவே முளையிடுதல் என்பது பொருள். பிரதான யாகத்தின் வாயு திக்கிலே கும்பம் வைத்து அதில் ஸஸ்தியாதிபதியாகிய சோமனையும், கார்த்திகை, ரோகினி ஆகிய இரு சக்திகளையும் பூசித்து சுத்தி வைக்கப்பட்ட 12 பாலிகைகளிலும் மண் இட்டு நவதானியம் விதைத்து முளைக்க வைக்கலாம். பாலிகைகளில் உள்ள பயிர்கள் செழித்து வளர்ந்தால் எடுத்த கருமம் மிகவும் சிறப்பாக அனுகூலமாகும் என்று சொல்லப்படுகிறது.

## ரக்ஷா பந்தனம்

ரக்ஷா பந்தனம் என்றால் இரட்சித்தற்பொருட்டு கட்டப்படும் காப்பு என்பதாகும். தொடங்கிய கருமம் இனிது நிறைவேற இடையில் இடையூறுகள் தடுக்கா வண்ணம் சிவாச்சாரியார்கள் காப்புக் கட்டுவதாம். காப்பு சுவர்ணத்தினாலேனும், வெள்ளியினாலேனும், பட்டு நூலினாலேனும், கட்டத்தகும். தொடங்கிய கருமம் முடியும் வரை ஆசௌசம் முதலிய இடையூறுகள் சிவாச்சாரியாரைச் சாராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடஸ்தானம்

குடத்தைச் சுத்தமாக்கி சப்த தாதுக்களும், ஜீவனும் உண்டாக்குவதற்காக கும்பத்தின் அடியில் ஆத்ம தத்துவத்தையும், பிரம்மாவையும் கும்ப நடுவில் வித்தியா தத்துவத்தையும், விஷ்ணுவையும், கும்ப நுனியில் சிவ தத்துவத்தையும், உருத்திரனையும், கும்பத்தில் 9 சக்திகளையம், மூவினை நூலில் சரஸ்வதி, இலக்குமி, ரௌத்ரி ஆகியோரையும் கும்பத்துக்குக் காட்டப்படும். தூபத்தில் அர்ச்சினி சக்கியையும்,தீர்த்தத்தில் கங்கை முதலிய புண்ணிய நதிகளையும்மத்தியில் வருணனையும் நவரத்தினத்தில் நவசக்திகளையும்,தங்கத்தாமரைப்பூவில் சதாசிவனையும்,வாசனைத்திரவியங்களில் சப்த மாதுருக்களையும் பூசித்துக் குடத்தில் இட்டு,

மாவிலையை சடையாகவும், தேங்காயை சிரசாகவும், கூர்ச்சத்தை முடியாகவும், வஸ்திரத்தை தோலாகவும் பூசிப்பதால் கும்பமானது சர்வதேவதா சொருபமாகிறது.

## கலா கர்ஷணம்

கலைகள், தத்துவங்கள், புவனங்கள், வர்ணங்கள், பதங்கள், மந்திரங்கள் ஆகிய சடத்துவ நியாசத்தைச் செய்து பாலாலய பிம்பத்திலிருந்து கலைகள் கும்பத்துக்கு வரச் செய்தல். ஆகவே பிம்பத்திலிருக்கும் மந்திர சொருபமான ஈசுவரனை கும்பத்தில் சாந்நித்தியமாக இருக்கும்படி ஆவாகித்தல் கலாகர்ஷணம் எனப்படும்.

## யாக மண்டப அமைப்பு

யாக மண்டபமானது ஷடத்துவாக்களின் வடிவாக உள்ளது. யாகசாலை எங்கும் சாந்திய தீத கலா சொருபமாம். கிழக்குத் துவாரம் முதலிய நான்கு துவாரங்களும் சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி என்னும் கலாத்துவா வடிவாயுள்ளன. மண்டபத்தின் நடுப்பாகம் ஐம்பத்தொரு அட்சரங்களைக் கொண்ட வர்ணாத்துவா வடிவாயுள்ளது. கும்பங்கள் பதினொரு மந்திராத்துவா வடிவாக உள்ளன. ஓமத்திரவிங்கள் முப்பத்தாறு தத்துவா வடிவாயுள்ளன. மண்டபம் இருநூற்றி இருபத்து நான்கு புவனாத்துவா வடிவாக உள்ளது.

யாகசாலை உள்ள நிலம் கூர்மாசனம். அதற்கு மேல் கட்டப்படும் வேதிகை அனந்தாசனம். வேதிகையின் மேல் கட்டப்படும் மகா வேதிகை சிங்காசனம். அதில் பரவப்படும் நெல் யோகாசனம். அதன் மேல் பரவப்பட்ட அரிசி பத்மாசனம். அதற்கு மேல் படிப்படியாகப் பரவும் பயறு, உழுந்து, கடலை முதலிய தானியங்கள் தாமரையில் உள்ள உறுப்புக்கள், எள்ளு விலாசனம் அதன் மேல் பரவப்படும் நெற்பொரி சத்தியாசனம்.

## யாக பூசை

யாகத்தைச் சுற்றி வைக்கப்பட்ட கும்பங்கள் சாந்தி முதலிய கலைகள், லோக பாலகர்கள், சூரியன், வாஸ்துபிரம்மா, ஷேத்ரபாலர், சதாசிவம் முதலியன சப்தகுரு முதலியனவாம். ஈசானத்தில் ஞானவாள் ஏந்தியபடி யாகேஸ்வரனும் யாகேஸ்வரியும் விளங்குகிறார்கள். இவர்களுடைய பூஜை முடித்து நடு வேதிகையில் விநாயகப் பெருமானுக்கு பஞ்சமாவரண பூசை வரை நடைபெறும்.

யாகத்தில் 33, 25, 17, 9, 5, 1 ஆகிய குண்டங்கள் ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

## ஸ்தூபி ஸ்தாபனம்

கட்டப்பெற்ற மூலஸ்தான பண்டிகையின் மேலுள்ள பத்மத்தில் ஸ்தூல லிங்கமாகிய ஸ்தூபியை ஸ்தாபித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீப ஸ்தானம்

இறைவன் சோதி வடிவினன். அவனைச் சோதி வடிவமாக வணங்குவதற்காக முதன் முதல் மூலஸ்தானத்திலே தீபத்தை ஸ்தாபித்தலாம்.

## யந்திர ஸ்தாபனம்

இறைவனுடைய மூல பிராசாத மந்திரங்கள் எழுதிப் பூசிக்கப்பட்ட யந்திரத்தை மூல மூர்த்தியின் ஆசனத்தில் உரிய இடத்தில் ஸ்தாபித்தலாம்.

## பிம்ப ஸ்தாபனம்

திருவுருவங்களை முறைப்படி அவ்வஸ்தானங்களில் ஸ்தாபித்தலாம்.

## அஷ்ட பந்தனம்

சுங்கான் கல்லு, குங்குலியம், கொம்பரக்கு, தேன்மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, எருமை வெண்ணெய், சாதிலிங்கம் முதலிய எட்டுவகையான திரவியங்களை ஒன்று சேர்த்து இடித்து எடுக்கப்படுவதாம். இந்த அஷ்ட பந்தன மருந்து ஆசனத்தையும் பிம்பத்தையும் பொருத்துவதற்குப்

## தைலாப்பியங்கம்

பக்தர்கள் எண்ணெய் சாத்துதல். அன்பர்கள் தங்களிடத்திலுள்ள ஆணவ மல சம்பந்தத்தாலும், திரிகரணங்களாலும், ஏற்படும் குற்றம் நீங்கிச் சுத்தி அடைதற்பொருட்டு எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெயை இறைவனுடைய திருமேனி முழுவதும் குளிரும்படி சாத்துதலாம்.

## பிம்ப சுத்தி

பலராலும் பரிசிக்கப்பட்ட தோஷம் நீங்குவதற்காகவும், உஷ்ண சாந்திக்காகவும் உதகம், கந்தம், புஷ்பம், பத்திரம், காஷாயம், மிருகத், பீஜம், பல்லவம், இரத்தினம், உலோகம், தாது, அஸ்திரம், ஓஷதி, கவ்வியம், குசம், சிருங்கம் முதலிய 16 வகையான திரவியங்களையும் கலயங்களில் இட்டு நீரினால் நிரப்பி, பூசித்து அபிஷேகம் செய்தலாம்.

## பிம்பரக்ஷாந்தனம்

கும்பாபிஷேகத்தின் நிமித்தம் சுவாமிக்கு காப்புக் கட்டுதலாம்.

## நியாஸாதிகள்

கலை முதல் மந்திரம் இறுதியாக உள்ள மந்திரங்களை உச்சரித்து இறைவனுடைய திருமேனி முழுவதையும் மந்திரஸ்வரூபமாக நியசித்தலாம்.

## ஸ்பர்சாகுதி

யாக கும்பத்துக்கும், மூர்த்திக்கும் தொடர்பை ஏற்படுத்தி யாகத்திலே பூஜிக்கப்பட்ட மூர்த்தி, மூர்த்தீஸ்வரன், மந்திரம் ஆகியவற்றை ஓமஞ்செய்த முறைப்படி மூலமூர்த்தியிடம் சென்று அந்தந்த ஸ்தானங்களில் ஸ்தாபித்தலாம். (பிரம்மபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம் ஆகிய மூன்றும் இவ்விடத்தில் ஒன்று சேர்க்கப்படுகிறது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹாபூர்ணாகுதி

தாம்பாளத்தில் தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், சந்தனம், குங்குமம், வஸ்திரம், சவர்ணம், சமித்து இவற்றை வைத்து யஜமானன் கையில் கொடுத்து ஒரே காலத்தில் எல்லாக் குண்டங்களுக்கும் ஆகுதி செய்து எல்லா அக்கினிகளையும் பிரதான குண்டத்தில் ஒடுக்கி, பிரதான குண்டத்துக்கும், பூர்ணாகுதி முடித்து பலியிட்டு, கும்பத்தில் சம்யோஜனம் செய்தலாம்.

## தீபாராதனை

யாககும்பத்தில் ஆவாகனம் செய்யப்பட்ட விநாயகப்பெருமானுக்கு விசேடதீபங்கள் காண்பித்து அர்ச்சனை செய்து வேதஅத்தியயனம் திருமுறை பாராயணம் என்பன செய்தலாம்.

## மகாகும்பாபிஷேகம்

அர்ச்சகர் ஒருவரை நந்திதேவராகப் பூசித்து அவருக்கு உபசாரங்கள் செய்து அலங்கரித்து,அவரது சிரசின் மீது பிரதான கும்பத்தை வைத்து பக்தஜனங்கள் சூழ்ந்துவர புஷ்பாஞ்சலி, வேதம், தோத்திரம்,சங்கு மங்களவாத்தியம் முதலிய கோஷங்களுடன் வீதி வலம் வந்து, மூலாலயத்தை அடைந்து, கும்பத்துக்கும், பிம்பத்துக்கும் தொடர்பேற்படுத்தி, உரிய முகூர்த்தத்தில் மூலமந்திரம், பதமந்திரம், உச்சரித்து பக்தர்கள் 'ஹர ஹர' என்ற கோஷிடமிட, வேதமந்திரம், தோத்திரம் ஒத, சகலவாத்தியங்களும் ஒலிக்க, கும்பதீர்த்தத்தை அபிஷேகம் செய்து, சகலஜீவராசிகளும் திருவருள் பெற்றுய்யப் பிரார்த்திப்பதே கும்பாபிஷேகமாம். அதன்மேல் மகாநைவேத்தியம் செய்து, அலங்கரித்து, ஆராதனை செய்து தேவர்களின் பூசைக்காகக்கதவைச்சாத்தி வைக்கப்படுகிறது.

## தசதர்சனம்

கதவைத்திறந்து பசு,ஆசாரியர்,வேத பாதகா,கண்ணாடி,பூரணகும்பம்,தீபம்,இடைடைச்சாமரை,கன்னிகை சந்நியாசி,சுமங்கலி,பக்தஜனங்கள்,ஆகியவற்றைச் சகல வாத்தியங்களுடனும் தரிசிக்கச்செய்தலாம்.

## ஆசார்யஉற்சவம்

சிவாசார்யார்களைவீதிவலமாகஅழைத்துவந்துமண்டபத்தில்இருக்கச்செய்துதஷிணதாம்பூலம் வழங்கி, அவர்களைவணங்கிஆசிபெறுதலாம்.

## மகாபிஷேகம்

இது முதலாவது அபிஷேகம்.முதற்பூஜை எனப்படும். ஸ்நபனகும்பம் வைத்துப் பூசித்து அக்கினி காரியம் முடித்து, மூர்த்திக்கு தைலம், மாக்காப்பு, பஞ்சகவ்வியம், பஞசாமிர்தம், பால், தயிர், வெந்நீர், தேன், கரும்பு, இளநீர், அன்னம், ஸகஸ்ரதாமரை, விபூதி, சந்தனம் முதலியவற்றால் குளிர்ச்சிசடையும் படியாக அபிஷேகங் செய்து, நைவேத்தியம், தீபாராதனை முதலியவற்றுடன் பூஜை நிறைவேற்றுதலாம்.மகாபிஷேகத்தினபபின்னரே பக்தர்களுடைய அர்ச்சனை முதலியன ஏற்று வழிபாடு செய்யஉரியகாலமாகும்

## மண்டலாபிஷேகம்

மகாபிஷேகத்தைத் தொடர்ந்து திரிபக்ஷம் அதாவது ஒருமண்டலம் (45 நாட்கள்)வரை அபிஷேக ஆராதனைகள் உற்சவம் நடாத்தப்படும்.இறுதித்தினமாகிய 45ம்நாள் மகாசங்காபிஷேகம் சிறப்பாக நடாத்தப்பட்டு ,உற்சவம் முதலியன நடைபெறும். இவ்வாறு ஒரு மண்டலம் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவதாலும், அடியார்களுடைய வழிபாடுகளாலும் திருவருள் பெருகுகின்றது.

மண்டலாபிஷேகம் முடிந்தபின்னரே கும்பாபிஷேகம் நிறைவேறியது என்பது கருத்தாகும். இதன்பின்னரேஏனையநைமித்தியக்கிரியைகள்இடம்பெறலாகும்.

மேற் கூறிய பிரகாரம் வேதாகமங்களில் கூறியபடி கும்பாபிஷேகக் கிரியைகளை நடாத்தஇறைவன் திருவருளை சகல ஆன்மாக்களும் பெற்றுய்ய எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற் செய்தி இது

நள்ளும் கீழுமம் மேலுளும் யாவுலும்
எள்ளும் எண்ணெய்யும் போல் நின்ற எந்தை

கற்பகப் பிள்ளையார் எம்மிடமிருக்கும் மும்மலங்களையும், இன்னும் எமது சோதனைகளையும் வேதனைகளையும், எதிர்ப்புக்களையும் எதிரிடைத் தளங்களையும் அழித்து நல்லன வெல்லாவற்றையும் அருளுவதற்காக தேரேறி வருகிறார் என்பது பெரு மகிழ்ச்சிக்குரியது மட்டுமல்லாது அக்கருணை வள்ளலின் கருணையையும் மாட்சியையும் வெளிப்படுத்தும் ஒன்றாகும்.

பல்வேறு சிரமங்கள், சிக்கல்கள் இருந்தும் நித்திய நைமித்திய கிரியைகள் செவ்வனே காலா காலத்தில் நடைபெறும் மிகச் சில கோயில்களிலே ஒன்றாகிய எமது கிராமத்து கற்பகப் பிள்ளையார் கோயிலில் மிகப் பழங்காலம் தொட்டு எழுந்தருளி வேண்டுவார் வேண்டுவன வெல்லாவற்றையும் குறைவின்றி அருளும் கற்பகப் பிள்ளையாருக்கு மிக அண்மையில் எதுவித குறைகளுமின்றி கோலாகலமாக மகா கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நடைபெற்றுள்ளமை எமது கிராமத்தின் தவப்பேறேயாகும்.

கிராமத்தின் ஷேமத்துக்காக நடைபெறும் இவ் வேள்விகளின் பேறாக கற்பகப் பிள்ளையாரின் அருளால் மகோற்சவங்கள் நடைபெறவுள்ள இத் தருணத்தில் கற்பகப் பிள்ளையார் தேரேறி வந்து திருவருட் கடாட்சம் புரியவுள்ளது மிகச் சிறந்த நற்செய்தியேயாகும். அது எமது பேறே !

திரு. த. மு. கதிர்காமநாதன்
(சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடியேற்ற வைபவம்

இறைவன் சாந்நித்தியம் கொண்டு அருள் சுரக்கும் இடம் ஆலயம் என்று பெயர் பெற்றுள்ளது. ஆலயம் என்ற சொல்லை ஆ+லயம் என்று பிரிக்கலாம். உயிர்கள் இலயித்தற்குரிய இடமே ஆலயம் என்று சிறப்புப் பொருளையும் கொண்டுள்ளது. ஐம்புலங்களின் வசத்தால் அல்லலுறும் மனதைப் பக்குவப்படுத்த இறைவன் சிந்தனையில் லயப்படுத்தும் புனித இடமாகவும் அது விளங்குகின்றது. மனிதன் பண்புள்ளவனாக விளங்க உள்ளத்தின் வளர்ச்சியும், பக்குவமும் இன்றியமையாதவை ஆகும். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் இறைவனை ஆலயத்தில்தான் சிறப்பாக வழிபட்டு உணரமுடிகின்ற காரணத்தால் இந்த நாகரிக வரலாற்றில் ஆலயமரபும் அதனோடு இணைந்த கிரியை முறைகளும் சிறப்பாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஆலயமரபினை மேலும் சிறப்பிக்கும் ஆலயக் கிரியைகள் மூன்று வகையாகக் கூறப்படுகின்றன. அவை நித்திய, நைமித்திய, காமிக கிரியைகள் ஆகும். தினம்தோறும் நிகழும் கிரியைகள் நித்தியக்கிரியைகள் என்றும், காரணம் கொண்டு நிகழ்வன நைமித்தியக் கிரியைகள் என்றும், பலன் கருதிச் செய்யப்படும் கிரியைகள் காமிகக் கிரியைகள் வகைப் படுகின்றன.

இவ்வாறு கூறப்படும் கிரிகைகள் உள்ளே வருடாந்த உற்சவமானது நைமித்தியக் கிரிகைக்குள்ளே இடம் பெறுகின்றது கொடிமரம் இல்லாத கோயில்களில் அலங்கார உற்சவமும் கொடிமரம் உள்ள கோயில்களில் மஹோற்சவமும் நடைபெறுகின்றன.

மஹோற்சவம் நிகழ்வதற்கு அவசியமான கொடிமரம், நந்தி, பலிபீடம் என்பவற்றை அடுத்து மனிதனின் முள்ளந்தண்டை நிகர்த்து நிமிர்ந்து நிற்கும் அமைப்பினை உடையது. கொடிமரத்தினை அமைப்பதற்கு மூங்கில், கருங்காலி, வில்வம், தேவதாரு, பலாசு, தென்னை முதலிய மரங்களில் மூன்றைப் பயன்படுத்துகிறார்கள். இது கொடிச்சீலை விரிந்து நிற்கத்தக்க அமைப்புக்களைக் கொண்டதாக உருவாக்கப்படுகிறது.

கொடிமரத்தில் ஏற்றப்படும் கொடிச்சீலையின் நீளம் கொடிமரத்தின் உயரத்தைப்போல் இருமடங்கு உடையதாக இருக்கும். அந்தந்த ஆலயத்தின் மூர்த்தியின் வாகனத்தின் படம் மையத்தில் வரையப்படும். இது ஆன்மா மலபரிபாகம் அடைந்ததைக் குறிக்கின்றது. இவற்றைவிட சூரிய சந்திரர்களும் அதிஷ்ட மங்கலப் பொருட்களும் கொடிச்சீலையில் வரையப்பட்டிருக்கும். கொடிமரம் பதியாகிய இறைவனையும், கொடிச்சீலையிலுள்ள நந்தி பக்குவமடைந்த சீவான்மாவாகிய பசுவையும், இடையில் காணப்படும் தர்ப்பைக் கயிறு பாசமாகிய மும்மலத்தையும் குறிக்கின்றது.

இவ்வாறு இந்துமத தத்துவங்களை தன்னகத்தே கொண்டு மிளிர்கின்ற கொடிமரமானது நந்திக்குப் பின்னால் அமைந்திருக்கும். இதில் மஹோற்சவத்தின் தொடக்கநாள் பகலில் இடம்பெறுவதே கொடியேற்ற வைபவமாகும். கொடியேற்றம் நிகழும் கோயிலை ஒட்டி கொடிச்சீலையில் இடம்பெறும் வாகனமும், படைக்கலமும் வேறுபடுகின்றது. விநாயகருக்கு உற்சவம் நிகழின் மூஷிகமும், அங்குசமும் இடம் பெறுவனவாகும்.

விநாயகப்பெருமானுக்கு கொடியேற்ற வைபவம் இடம்பெறுவதற்கு முன்னர் சிவாச்சாரியார்கள் மூஷிகம், கொடிமரம், பலிபீடம், அஸ்திரராஜர் ஆகிய தெய்வங்களுக்கு பிரதிஷ்டையின் பொருட்டு யாகங்கள் செய்து பிரதிஷ்டை நிகழ்த்துவார்கள். பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிமரத்தில் ரசஷா பந்தனம் செய்வார்கள். இதையடுத்து பேரிதானம் என்னும் கிரியை கொடியேற்றம் நிகழப் போவதையும், அதற்கு தேவர்களைச் சமுகமளிக்க வேண்டுவதையும் பறை சாற்றுவதாக அமைகின்றது.

இக்கிரியைகளை அடுத்து உற்சவமூர்த்தியை அலங்கரித்து வலமாக கொடிமரத்திற்கு முன் எழுந்தருளுவித்த பின் கொடிச்சீலையை கோயிலை வலமாகக் கொண்டுவந்து கொடிமரத்திலுள்ள கயிற்றில் பிணைத்து சமஸ்த தேவதாவாஹனம் எனும் கிரியையினை நிகழ்த்துவார்கள். இக்கிரியையில் தேவர்கள் அனைவரும் கொடிமரத்தில் திருவிழா முடியும் வரை சாந்நித்தியங் கொண்டருளுமாறு வேண்டப்படுகின்றனர். பின்னர் கொடியை சகல வாத்திய கோஷங்களுடன் ஏற்றி, வலமாகச்சுற்றி, தர்ப்பையைச் சுற்றிலும் பரப்பி இணைத்துக் கட்டி அலங்கரித்தபின் மூஷியாக கும்பத்தை கொடிக்கம்பத்தினடியில் அபிஷேகம் செய்வார்கள். பின்னர் அன்னத்தினாலான உருண்டைகளால் பலியிட்டு தூபதீபங்களால் அர்ச்சித்து பணிமாலை, சூர்ணிகை, உரிய தானங்கள் முதலியவற்றைப் படித்தபின் அஸ்திரதேவரைப் பிரஷ்டித்து, ஆலாகித்து, மகா ஆசீர்வாதம் நிகழ்த்தி உற்சவ மூர்த்தியையும் பூசித்தபின் பிரமசாந்த முதலான சந்தியாவாகனம் நிகழ்த்தி திக்குகள் அனைத்திலும் அவ்வத்திக்குக்குரியவரைத் தியானித்து அவரவர்க்குரிய வேதமந்திரம், ராகம், பண், தாளம், வாத்தியம், நிருத்தம் முதலியவற்றுடன் சங்கீதம், நாட்டியம் இரண்டும் இக்கிரியைகளில் விரிவாக இடம் பெறுகின்றன.

இவ்வாறான கிரியைகள் முடிந்த பின்னர் தினம்தோறும் இரு வேளைகளிலும் யாக பூசையும், கொடிக்கம்பத்திற்கு அபிஷேகமும், பூசை, திக்குகளில் பலியும் நிகழும். இதையடுத்து உற்சவமூர்த்திக்கு அபிஷேக அலங்காரமும், விசேட தீபாராதனையும் அதைத் தொடர்ந்து கொடி, குடை, ஆலவட்டம் முதலிய சகல விருதுகளுடனும் வேதகோஷம், திருமுறை ஓதல் முதலியவற்றுடன் திருவுலாவும் நடைபெறும்.

ஆலயக்கிரியைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவத்தைக் கொண்டு மிளிர்கின்ற சிறப்புப் பொருந்தியதாக அமைகின்றது. அந்த வகையில் இந்தக் கொடியேற்ற வைபவம் உணர்த்தும் தத்துவமானது ஆணவத்திற்கும், ஞானத்திற்கும் இடம் ஒன்றே ஞானம் மேலிட்டவேளை ஆணவம் ஒழித்து நிற்கும். ஆணவம் மேலிட்டவேளை ஞானம் உருக்காந்து நிற்கும். ஒன்றுமேலிட்ட காலத்து ஒன்று ஒழிந்து நின்றாலும் ஞானத்தை ஆணவமலம் பொருந்தாது. பூர்வவாசனா விசேஷத்தினால் மூழ்கிக் கிடக்கும் ஆன்மா அருள் கூடும்படியாக மலங்களைப் போக்கவே கொடியேற்ற வைபவம் நிகழ்கின்றது. இவ்வாறு இத்தத்துவம் உணர்த்துகின்றன.

இவ்வாறாக ஆலய மரபு மக்களுடன் இணைந்து காணப்படுவது போன்று கிரியைகளும் மக்களுடன் இணைந்து காணப்படுகின்றன. இக்கிரியைகள் உணர்த்தும் தத்துவங்களை அறிந்து எமது பிறவிப் பயனாகிய முத்தி இன்பத்தினை அடைவோமாக.

திருமதி. சறோஜினி சிவனேசன் பி.ஏ (சிறப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவங்கள் பொதிந்த கொடியேற்றத்திருவிழா

நன்நெறிகளில் நாடு வாழ்வதற்கு நம்முன்னோர்கள் நாடு முழுவதும் கோயில்களை உருவாக்கி வளர்த்தனர்.பண்புடைய சமுதாயத்தை வளர்ப்பதற்காகப் பக்தி மார்க்கமான காரியங்களை வகைப்படுத்தினர். மும்மலக்கெடுதியினால் வாழும் மனிதன் முழுமை பெற ஆலய தரிசனம் அவசியம் என்பதை உணர்ந்தனர். எங்கும்நிறைந்த இறைவன் உள்ள இடம் கோயில் என்பதை அறிந்தே கோயிலை மையமாகக் கொண்டு வாழ்விடத்தை அமைத்தனர்.

இரவும் பகலும் பிரியாத இறைவனை வணங்கி ஈர நெஞ்சுடைய இனியவராய் வாழ்ந்தனர். தாம் அஞ்சுவதும் ஒன்றுமில்லைத் தமக்கு அஞ்ச வருவதும் ஒன்றும் இல்லை, தமக்கு அரணாக ஆலயமும், ஆண்டவனும் இருக்கும் போது என்று கூறித் திடம் கொண்டனர். இத்தகைய பாரம்பரியத்தில் வாழ்ந்த எம் இனிய பண்பாட்டை நாம் பேண முற்பட வேண்டும். அதே வேளை கோயில்கள் யாவும் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு புனித அருள் பெருக வழிவகை செய்தல் வேண்டும்.

ஆலயங்களின் அமைப்பு முதல் நடைபெறும் கிரியைகள் வரை சிவாகமம் எனும் சிறப்பு நூல் கூறும் தத்துவத்துக்கு அமையவே செயற்படுகிறது. மனித சரீரத்தின் தோற்றத்தில் அமைக்கப்படும் ஆலயம்மனிதனை இறைவனோடு சேர்க்கும் தத்துவக் களமாகக் கொள்ளப்படுகிறது. அறிவு, இச்சை, செயல் என்ற மனிதனுடைய இயல்புகளைச் செம்மைப்படுத்தும் நோக்கில் ஆலய அமைப்பு முறை, ஆராதனை முறை, வழிபடும் முறை என்ற மூன்று விடயங்களையும் ஆகமங்கள் சிறப்பாக வகுத்துள்ளன.

ஆன்மாவாகிய உயிரினை ஆற்றுப்படுத்துவதற்குக் கோயிலில் நடைபெறும் கிரியைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. தினந்தோறும் இறைவனின் சன்னிதானத்தில் நடைபெறும் நித்திய பூசைகளில் விடும் தவறுகளை நிவர்த்தி செய்யவும், வாழும் சமுதாயம் ஈடேறவும், நாடு நலம் பெறவும் ஆலயங்களில் நைமித்தியக் கிரியைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நைமித்தியக் கிரியைகளில் மகோற்சவம் எனக் கூறப்படும் திருவிழா முதன்மைமிக்கது. இறைவனின் பஞ்சகிருத்திய தத்துவத்தினை விளக்கும் இத்திருவிழாவானது அடியவர்களின் வாழ்வைப் புனிதமாக்குவது. ஆன்மாவானது இறைவனோடு அத்துவிதமாய் நிற்க வேண்டும் என்ற அரிய தத்துவத்தினை உணர்த்துகின்றது.

குறிப்பாக ஆலயத்தில் அமைந்த பலிபீடத்தைச் சார்ந்து கொடிமரம் இருக்கிறது. இதனைத் தூலலிங்கம் எனவும் அழைப்பர். உலகத்தின் துன்பங்களுக்குக் காரணமாகவும், இறைவனை உணர்த்துவதற்குத் தடையாகவும் மனிதனிடம் அமைந்திருப்பவை ஆசைகளாகும்.கோயிலின் பலிபீடத்தில் அந்த ஆசைகளின் மூலமாகிய ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் பலி கொடுத்து வணங்க முற்படும் போது மனிதனால் தெய்வ நிலையை நோக்கி எளிதாக மேலேற முடியும் என்ற தத்துவத்திற்கு விளக்கமாக அமைந்ததே கொடிமரமாகும். கொடியேற்று வைபவத்தினூடாக ஆன்மாக்களை இறைவன் பால் இணைப்பதன் உட்பொருள் உணர்த்தப்பட்டுள்ளது.

திரு.ஆறுதிருமுருகன், ''பாலாவி'' மருதனார்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடி மரமானது சிவத்தையும் கொடிச்சேலை ஆன்மாவையும், தருப்பைக் கயிறு ஆன்மாவைப் பந்தித்து நிற்கும் பாசத்தையும் குறிக்கிறது. கொடிச்சேலையில் வரையப்பட்டிருக்கும் படமானது இறைவன் திருவருளைப் பெற்ற சீவான்மாவின் உயர் நிலையை விளக்கும். இறைவனே படைப்பவன் அவனே எம்மைப் பக்குவமடையச் செய்பவன் என்பதனைக் குறிக்கும். கொடியேற்ற விழாவும் கொடிமரத்தின் தத்துவமும் அற்புதமானது. திசைகள் தோறும் விளங்கும் தெய்வங்களையும், இதர தெய்வங்களையும் மந்திரங்களாலும் பாவனைகளாலும் அழைத்து ஒரு நிலைப்படுத்தி சிவாச்சாரியார் கொடியேற்று நிகழ்ச்சியை நடத்துவார்.

கொடியேற்ற வைபவத்தின் போது உமாபதி சிவாச்சாரியாரால் சிதம்பரத்தில் பாடிய "கொடிக்கவி" என்னும் திருவருட் பாடல்களைப் பாடித் துதித்தல் இன்றுமரபாக உள்ளது. கொடியேற்றிய நாள் முதல் கொடி இறக்கல் வைபவம் வரை கொடித்தம்பப் பூஜை உற்சவ காலத்தில் நடைபெறும். கொடியேற்ற நாளில் ஆலயமூர்த்திக்குரியவனான வேதவாக்கியம், தேவாரப்பண், தாளம், வாத்தியம், நிருத்தம், இராகம், என்பவற்றால் பூஜித்து வாழ்த்துவது சிறப்பம்சமாகும்.

---

காந்த ஊசியானது எப்பொழுதும்
வடக்குத் திசையை நோக்கியே
நிற்கின்றது. அதனால்தான் கடலில்
செல்லும் கப்பல் திசை மாறிச்
செல்வது இல்லை. அது போலவே
பக்தனுடைய உள்ளம் கடவுளையே
நோக்கியதாகவே இருக்க வேண்டும்.
அப்படிப்பட்டவன் "ஆசை" என்னும்
பெருங்கடலில் வழி தவறிக் கெட
மாட்டான்.

இராமகிருஸ்ணர்

---

ஓம் ஓம் ஓம்

ஓம் என்பதற்கு நூறுக்கும் அதிகமான
அர்த்தங்கள் உள்ளன.
ஓம் என்ற சொல்லிலிருந்து தான் பிற
மந்திரங்கள் பிறந்தன.
ஓம் என்ற சொல் உச்சரிப்பு ஞான
மந்திரத்தின் திறவுகோல்
ஓம் என்ற சொல் உச்சரிப்பு அலையும்
மனத்தை ஒருமுகப்படுத்தும்
விந்தையைச் செய்கின்றது.
ஓம் என்னும் போது ஆத்மாவின்
இருப்பிடமான இதயத்திலிருந்து 108
நாடிகளும் இயங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர் ஏறும் திருவிழா

சைவ சமயிகளாகிய எமக்கு சகல வழிபாட்டு அம்சங்களும் ஆலயத்தை மையமாக வைத்தே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க தொன்றாகும். லௌகீக விடயங்களில் உழலும் மனித மனத்தை ஆலய வழிபாடு மூலமாக ஒன்ற வைத்து இறையடி சேர்ப்பதே ஆலய வழிபாட்டின் நோக்கமாகும். அதற்காக ஆலயங்களில் நடைபெறும் எத்தனையோ உயர்ந்த செயல் முறைகள் ஆகமம் சார்ந்து பலவும், சில தேச வழமை சார்ந்தும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் ஆலயத்தில் இடம்பெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் ஆன்ம ஈடேற்றம் கருதியே இருக்கும். இருக்க வேண்டும். ஆலயம் எவ்வளவு சிறப்போடு போற்றப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தும் முகமாகவும்,ஆலயமும் மனிதனும் வேறு வேறு இல்லை என்பதனை எடுத்துக் காட்டும் முகமாகவும் ஆலயமே மனித உடல் என்றும் தன் உடலை ஒருவன் எவ்வளவு உயர்வுறப் போற்றுவானோ அவ்வளவு உயர்வாக தான் வழிபடும் ஆலயத்தையும் போற்ற வேண்டும் என்பதை வலியுறுத்த "ஆலயமே உடம்பு" என்றனர் ஆன்றோர்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல் தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம் கள்ளப் புலனைந்தும் காணா மணி விளக்கே" என்று திறம்பட இயம்பி அரிய தத்துவங்களையும் எடுத்துச் சொல்லினர். இவ்வாறு சிறப்பிக்கப்பெறும் ஆலயத்தில் தொண்டுகள் எல்லாமே ஆன்மீகத் தொண்டுகள் தாம். ஒரு ஆலயத்தை ஒருவர் நிர்மாணம் செய்யத் துணை நின்றார் என்றால் அவர் "பிறவிப்பிணி" அற்றவராய் சிவனடியில் நீடு வாழ்வார் என்பதும் எம் ஆன்றோர் வாக்கே. "புல்லினால் ஒரு கோடி புதுமண்ணால் பத்துக்கோடி சொல்லுமாங்காலத்தன்னில் செங்கல்லால் பதினாயிரங்கோடி. அல்லினுங் குண்வாய் கேளாய் ஆலய மடங்கள் எல்லாம் கல்லினால் கட்டுவோர்கள் கயிலை விட்டகலார் மாதோ" இத்தகைய ஆலயம் ஆன்மீக ஈடேற்றம் கருதி தத்துவக் கருத்துக்களை தன்னகத்தே கொண்ட திருவிழாக்களை உடையது.

பஞ்ச கிருத்தியங்களைக் குறிக்கும் மகோற்சவப் பெருவிழா இவற்றுள் சிறப்பிடம் பெறுகின்றது. மஹோற்சவ விழா நிஷ்காமிய நோக்கில் பார்த்த பூசையாக இடம்பெறுவது "லோகா சமஸ்த்தா சுகினோபவந்து சர்வேஜனகா சுகினோ பவந்து" என்பதே மஹோற்சவத்தின் அடிப்படை அத்தகைய மகோற்சவப் பெருவிழாவிலும் சிகரம் வைத்த விழா "தேர்த்திருவிழா" ஆகும். "தேரேறித்தெய்வம் வர வினைகள் வேரோடு ஓடும்". தேர்த்திருவிழா காண எவ்வாலயத்திலும் மக்கள் வெள்ளம் பெருகுவது இயல்பு. அதற்குக்காரணம் தேர்த்திருவிழா சிந்தையைக்கவரும் பெரிய விழா மட்டுமன்றி அதற்குள் ஆழ்ந்த உண்மையும் ஒன்று உண்டு:. அது என்னவெனில், சைவ சமயத்தவர்களாகிய நாம் தீட்சை பெற்றிருத்தல் வேண்டும். சமய தீட்சை பெற்றவனே உண்மையான சைவசமயி. சைவசமய தீட்சை பெற்றால் மட்டும் போதாது. ஒவ்வொருநாளும் பெற்ற தீட்சைக்குரிய முறையான அனுட்டானத்தை ஒருநாள் செய்யத் தவறினும் தான் பெற்ற தீட்சையை ஒருவன் இழக்கிறான் என்பது விதி.

தமிழருவி - த. சிவகுமாரன் காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சைவ சமய தீட்சைகள் சாதாரணமாக மூன்று வகையின. முதலாவது சாதாரண தீட்சை. இத்தீட்சை பெற்றவனே தேவார திருவாசகங்களை ஓத அருகதை பெற்றவன். இரண்டாவது விசேட தீட்சை. இதைப் பெற்றவனே ஆகமத்தின் ஞானகாண்டப் பகுதியை ஓதலாம். மூன்றாவது நிர்வாண தீட்சை. இத்தீட்சையை முறையாகப் பெற்றவரே ஆகமத்தின் ஞானகாண்டப் பகுதியைக் கைக்கொள்ளஅருகதை உள்ளவர். இப்போது சைவசமயிகள் என்று பேசிக் கொள்ளும் பலர் எங்கே நிற்கிறார்கள். இவர்கள் சைவசமயத்தவர் இல்லையா? என்ற கேள்வி பிறக்கும். இதற்கும் பதில் தேர்த்திருவிழாவாகும். ஓர் ஆலயத்தில் குறிப்பாக சிவன் ஆலயத் தேர்த்திருவிழாவை ஒருவன் பார்ப்பானேயானால் அவனுக்கு அன்றே ஒரு தீட்சை கிடைக்கின்றது. அதற்கு "சாம்பவ தீட்சை" என்று பெயர். இதைப்பெற்றவர் அடுத்த தேர்த்திருவிழா வரை அத்தீட்சையின் செல்லுபடியாகும் காலம் தன்மை காரணமாக சைவசமயியாகிறார். இதிலிருந்து தேர்த்திருவிழா எத்தகைய முக்கியம் வாய்ந்தது என்று உணர்கின்றோம் அல்லவா? ஓர் ஆலயத்தில் தேர் சிறப்புற அமைய வேண்டியதும், அது பிரகாரம் சுற்றி வர வேண்டியதும் அவசியமே. புராண இதிகாச வரலாற்றில் முதல் தேர் ஓடியது சிவனுக்காக. திரிபுரங்களைத் தகனம் செய்ய தேவர்கள் சேர்ந்து சிவனுக்கு தேர் அமைத்துத் தந்தனர். அந்த தேரில் அமைந்தவை எவை, யார், யார் என்பதைப் புராணங்கள் அழகுறப்பேசும். தேரின் நான்கு குதிரைகளும், நான்கு வேதங்களே. சாரதி பிரமா. சாட்டை பிரணவம். இதை உதாரணத்திற்குச் சொல்லலாம். இவ்வாறே இன்றும் தேரில் எல்லாம் அமைக்கப்படுகின்றன. இத்தகைய உயர்வுகள் பல அடங்கியது தேரும், தேர்த்திருவிழாவும் ஆகும். இத்தகைய உயர்ந்த தேர் வட்டுக்கோட்டை-வடக்கு கற்பகப்பிள்ளையார் ஆலயத்தில் சிறப்புற அமைவது அக்கிராம மக்கள் செய்த தவத்தின் பேறினாலேயாம். இத்தேர்த்திருப்பணியில் பங்கு கொண்டோர் அனைவரும் இறையருள் பெற்றவர்களே. இத்தேர்த் திருவிழா கால காலமாக சிறப்புற அமைவதை கற்பகப்பிள்ளையார் ஆசீர்வதித்து அருள்வான்.

## ஒன்பது வகை பக்தி

| | | |
|---|---|---|
| சிரவனம் | - | கேட்டல் |
| கீர்த்தனம் | - | துதித்தல் |
| ஸ்மரணம் | - | நினைத்தல் |
| பாதசேவனம் | - | திருவடியைத் தொழுதல் |
| அர்ச்சனம் | - | பூஜித்தல் |
| வந்தனம் | - | வணங்குதல் |
| தாஸ்யம் | - | தொண்டு புரிதல் |
| சகக்யம் | - | தோழமை |
| ஆத்ம நிவேதனம் | - | தன்னை அர்ப்பணித்தல் |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மகிழ்ந்தோடி வருவாய் நீ மகிழ்வென்றுந் தருவாய் நீ

எழிலான வட்டுநகர் ஏரம்ப மூர்த்தி
எமையாளு மீசனே எழிற்சுடர்ச் சோதி
அழியாத புகழ் கொண்டு அத்திமீ தமர்ந்து
அருள் மழை பொழிகின்ற அருமறை நாதா !
பொழில் சேர்ந்த காவோடு பிரமனாச்சி தோட்டம்
பொலிவோடு விளங்குமெம் பொற்புறு கணேசா !
வழிபாடு செய்தென்றும் வணங்கிடும் அடியார்க்குக்
கதிகாட்டி வைப்பாயே கற்பகப் பிள்ளையே !

காவணிச் சோலையில் களித்திடும் கஜமுகா !
காலடி தஞ்சமெனக் காதலித்துறு வோர்க்கு
ஆவணிச் சதுர்த்தியில் அருமையாய்த் தேரேறி
அள்ளியருள் செய்கின்ற அரணார் திருமகனே !
மாமணி பூட்டிநல்ல மாதங்கம் இழுத்துவர
மகிழ்ந்தோடி வருவாய்நீ ! மகிழ்வென்றும் தருவாய்நீ
பூமணி சூட்டிநல்ல புதுத்தேரில் பவனிவரும்
புண்ணிய மூர்த்தியே புத்தூக்க மருளுவாயே !

## குறை போக்க என்றென்றும் அருள்வாயே

ஆடியும் பாடியும் அன்பர்கள் வழிபட
அசைந்தாடும் தேரேறி வருவாயே - நிதம்
கூடியும் குலாவியும் கும்பிடும் அடியாரின்
குறை போக்க என்றென்றும் அருள்வாயே !
தேடியும் தேடொணாத் தேவனே ! இன்று நீ
தேர் மீது ஏறிடும் காட்சியை - நாம்
தெவிட்டாத நோக்கோடு சேவித்துன் திருவடி
தெரிசித்தே மகிழ்வு கொண்டோம் !

## போதகமே போற்றி போற்றி

ஐங்கர நாதா போற்றி
ஆறுமுகன் அண்ணா போற்றி
திங்களைச் சூடும் நாதன்
சிவனார் சுதனே போற்றி
பங்கம் வந்துற் றிடாமல்
பார்த்தெமை யாளும் எங்கள்
பொங்குமாவருள் சுரக்கும்
போதகமே போற்றி ! போற்றி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

ஐங்கரன் கணேசனுக்கு மங்களம் மங்களம்
ஆறுமுகன் அண்ணனுக்கு மங்களம் மங்களம்
சிங்காரத் தேரேறும் சிவனேசன் மகனார்க்கு
அங்கரங் கூப்புவோம் மங்களம் மங்களம்
பிரமனாச்சி தோட்டத்தில் பிள்ளையாய் வீற்றிருந்து
பிரியமுடன் எமைக் காப்போய் மங்களம் மங்களம்
கற்பகப் பிள்ளையாரே மங்களம் மங்களம்
கருணா மூர்த்தியே மங்களம் மங்களம்

சுபம்

ஆக்கம் : திருமுருக கிருபானந்த வாரியார்
சுவாமிகளின் பிரதம சீடன்
பிரசங்க பூஷணம் நடேசன்
சிவசண்முகமூர்த்தி B.A. Dip. in Ed.

## 18 வகை அபிஷேகங்களும் அதனதன் பலன்களும்

| | | |
|---|---|---|
| தீர்த்தம் அபிஷேகம் | - | மனச்சுத்தம் |
| எண்ணெய் அபிஷேகம் | - | பக்தி |
| நெல்லிப்பொடி அபிஷேகம் | - | நோய் தீர்த்தல் |
| மஞ்சள் பொடி அபிஷேகம் | - | மங்களம் |
| பால் அபிஷேகம் | - | சாந்தம் |
| தயிர் அபிஷேகம் | - | உடல் திடம் |
| நெய் அபிஷேகம் | - | சுக வாழ்வு |
| பன்னீர் அபிஷேகம் | - | புகழ் |
| கரும்பு, சர்க்கரை அபிஷேகம் | - | சோதிடம் |
| விபூதி அபிஷேகம் | - | ஞானம் |
| சந்தன அபிஷேகம் | - | சொர்க்க லோகம் |
| தேன் அபிஷேகம் | - | குரலினிமை |
| பழச்சாறு அபிஷேகம் | - | ஜனவசீகரம் |
| பஞ்சாமிர்தம் அபிஷேகம் | - | நீண்ட ஆயுள் |
| பஞ்ச கவ்வியம் அபிஷேகம் | - | பாவ நிவர்த்தி |
| இளநீர் அபிஷேகம் | - | நன்மக்கட்பேறு |
| அன்னம் அபிஷேகம் | - | அரசு விருத்தி |
| மாயப்பொடி அபிஷேகம் | - | குபேர காபந்து |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காபிஷேக மகத்துவம்

மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களுக்கு அப்பாற்பட்டு எங்கும் பரந்து பரம் பொருளாக விளங்கும் இறைவன் ஒருவன். நாமம் அற்றவன் ஆயினும் பக்தகோடிகளின் பாவப்பிணியை நீக்கி, அவர்களின் இஷ்ட காம்யங்களை அருளி ஈடேற்றுவான். வேண்டிய உருவத்திருமேனியுடன் வந்து பல திருவிளையாடல்களைப் புரிந்து, காட்சி கொடுத்து அருளுகின்றான். இத்தகைய உருவங்களை நமது பரிபக்குவ நிலைகளுக்கேற்ப, விக்கிர வடிவினிலே வடித்தெடுத்து ஆலயங்களிலே பிரதிஷ்டை செய்து வழிபடுகின்றோம். இவ்வாறாக இறைவன் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆலயங்களிலே நிகழும் கிரியைகள் நித்தியம், நைமித்திகம், காமியம் என மூவகையின. தினந்தோறும் நிகழும் கிரியைகள் நித்திய கிரியைகள். ஒரு காரணத்தைக் கொண்டு நிகழ்வன நைமித்திகக் கிரியைகள். பெறுபேற்றினை அவாவிச் செய்யப்படுவன காமிய கிரியைகள் எனப்படும்.

காமியம் என்றால் நாம் மனதில் விரும்பிய இஷ்ட சித்திகளை அடையும் நோக்குடன் பலன் கருதிச் செய்யப்படும் கிரியை பூசை ஆகும். பெரும்பாலும் நிஷ்காமியமாக அதாவது பலன் கருதாது வழிபடுதலே சிறந்தது. ஆயினும் மானிடராகப் பிறந்த நாம் பயனை விரும்புவதே இயற்கையல்லவா. ஒருசில பெரியோர், மேனிலை பெற்றவர்கள், அறிவு முதிர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே பயன் கருதாது நிஷ்காமியக் கிரியை செய்ய முற்படுவர். பலவிதக் கிரியா முறைகளை விளக்கிக் கூறும் பொக்கிஷங்களான ஆகமங்கள், இவ்வாறு பயன்கருதி செய்வோருக்கும் தக்கபடி பல கிரியைகளைக் கூறுவதுடன் முடிவினில் அக்கிரியைகளால் வரும் பயன்களையும் கூறுகின்றன. இவ்வாறு பலனைக் கருதி நோ்கடன் முதலியன செய்தல் வழக்கமாகி விட்டது.

உருவம் பொருள்களையே கண்டு மனத்தை அதில் பதிக்க செலுத்தவல்லன பரிபக்குவமடையாத ஆன்மாக்கள்.. ஒருருவம், நாமம், விருப்பு, வெறுப்பு ஆகியன இன்றி நின்மலராக விளங்கும் பரம்பொருளுக்கு தங்கள் மனத்தை ஒரு முகப்படுத்தி வழிபடுவதற்காகப் பல உருவங்களில் சிலைகளை வடித்து அவற்றின் மூலம் பேரருள் பெற முனைகின்றனர். தன்னைப் பெற்று வளர்த்து மேன்மையடையச் செய்த பெற்றோர்களுக்கு தங்கள் நன்றிக் கடனாக மனநிறைவுக்காக உள்ளன்புடன் அவர்களைக் குளிப்பாட்டி, ஆடைஅணிகளால் அழகு செய்து ஆனந்தமடையும் நற்புதல்வர்களைப் போல், நாமும் ஆண்டவனுக்கும் அவற்றைச் செய்து மனநிறைவு பெறுகின்றோம்.

ஆலயங்களில் நிகழும் காமியக் கிரியைகளில், சங்காபிஷேகம் ஒன்றாகும். சங்காபிஷேகம் என்பது சங்கினால் செய்யப்படும் அபிஷேகம் என்று பொருள்படும். பலவிதமான அபிஷேகங்களுள் சங்கினால் செய்யப்படும் அபிஷேகமானது மிகமிகச் சிறந்த பலனைக்கொடுக்க வல்லதாய் விளங்குகின்றது. இதனை மண்குடத்திலும் பார்க்கச் செப்பினால் செய்யப்பட்ட குடம் ஆயிரம் மடங்கு விசேடமானது. அதனிலும் பொன்னால் செய்யப்பட்ட குடம் இரண்டு லட்சம் மடங்கு விசேடமானது. இவைகளிலும் பார்க்க இரத்தினங்களினால் அலங்கரிக்கப்பட்ட காண்டாமிருகக் கொம்பு இருமடங்கு விசேடமானது. அதைக் காட்டிலும் கடலிற்றோற்றிய சங்கு கோடி மடங்கு விசேடமானது என கூறப்படுகிறது.

சங்கானது முன்னொருபோது சாகரத்திலே (தேவர்கள் திருப்பாற்கடலை கடைந்தபோது தோன்றியவைகளுள் ஒன்றாக) தோன்றி விஷ்ணுபகவானுடைய திருக்கரத்தில் அமர்ந்திருக்கும் பேறு பெற்றது. எல்லாத் தேவர்களாலும் ஏத்திப் போற்றப்படும் பெருமை பெற்று விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சங்கு சந்திரனையும், சூரியனையும் அதிதேவதையாகக் கொண்டது. நடுவே வர்ணனும் பின்பாகத்தில் பிரஜாபதியும், நுனியில் கங்கா நதியும், சரஸ்வதி நதியும், சகல விதமான புண்ணிய தீர்த்தங்களும் வீற்றிருந்து அருள் புரிகின்றனர்.

இறைவனுடைய இரு கண்களாக விளங்கும் ஒளிப் பொருளான சூரியனும், சந்திரனும் நிர்மலமான பாற்சமுத்திரத்திலே தோன்றி அப்பழுக்கின்றிப் பரிசுத்தமாக மிளிரும் சங்கிலே அமர்ந்திருந்து அருள்வதும். தனக்கோர் நிறமற்றிருக்கும் புனித ஜலதேவதையான வருணனும், வெள்ளைக்கலை உடுத்து வெள்ளைக் கமலத்தே வீற்றிருந்து அருள்பாலிக்கும் சரஸ்வதி தேவியும், தாமரை ஆசனாகிய பிரமனும், சுத்தமான சங்கிலே உள்றவதும் கண்களுக்குத் தோன்றாத உருவத்தில் பூமியினடியில் சென்று உறைகின்ற பெருமை பெற்றதான சரஸ்வதி நதியும், பாபஞ் செய்தோர்களையும் தனது ஸ்பரிசத்தினால் புனிதம் செய்து மேலான பேற்றினை அளிக்கும் கங்கா நதியும் ஏனைய பலபுனித புண்ணிய தீர்த்தங்களும் வந்தமர்ந்து சங்கினில் நிறைந்து அபிஷேகிக்கும் நீரினிலே ஆவிர்பவித்து அருள்மழை பொழிகின்றன எனின் இதன் பெருமையினைப் புகழவும் வேண்டுமோ !.

இவற்றின் மூலம் சங்கு தெய்வீக சக்தி வாய்ந்தது என்பதனை அறிந்தோம். இத்தோடு மட்டுமன்றி சங்கு பற்பல நோய்களை அகற்றித் தீர்க்கக் கூடிய சக்தி வாய்ந்தது. இதனாலன்றோ நம் மூதாதையர் தொன்று தொட்டு குழந்தைக்கு மருந்து கொடுக்கும் போது "பாலடைச் சங்கு" என்பதில் மருந்தினை வார்த்துக் கொடுத்து வந்தனர்.

இவ்வாறு பல சக்திகளைக் கொண்ட சங்குகளில் நீர் நிறைத்து அபிஷேகித்தலையே சங்காபிஷேகம் என்று கூறுகின்றோம்.

சங்காபிஷேகம் பெரும்பாலும் அஷ்டோத்தர சத (1108) அல்லது அஷ்டோத்தர சகஸ்ர (1108) என்று இரு வகையினதாகும். விதிமுறைப்படி அமைக்கப்பட்ட யாகசாலையிலேவிருந்த (வட்ட) கிரமமாகவோ "வியூக" கிரமமாகவோ அமைத்து அதனில் சங்கங்களைத் தாபித்து சுகஸ்ந்த வஸ்துகள் முதலியவற்றுடன் கலந்து ஜலத்தை நிறைத்து மேலே மாவிலை, தருப்பை புஷ்பம் முதலியவற்றால் அலங்காரம் செய்து அதில் இறைவனை ஆவாகித்து யாகபூசனை புரிந்து சங்கபூசை செய்து பூசிப்பர் (ஐந்து) பஞ்சகுண்டமோ (ஒன்பது) நவகுண்டமோ தக்கபடி அமைத்து ஓமஞ் செய்து பின் அந்தச்சங்க நீரினால் (சங்கு நீரினால்) இறைவனுக்கு அபிஷேகஞ் செய்வர். இதனால் இறைவனுக்கு மூர்த்திகரமும், சாந்நித்தியமும் உண்டாவதோடு பக்தர்களின் மனோபீஷ்டங்களும் பூர்த்தியாகி அருள்மழை பெருகும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

யாகமண்டபமானது ஷடத்தவாக்களின் சொருபமாக அமைந்துள்ளது. யாகசாலை எங்கும் சாந்திய தீத கலை சொருபமாக உள்ளது. கிழக்கு, தெற்கு, மேற்கு,வடக்கு முதலிய நான்கு வாயில்களும் சாந்திவித்தை பிரதிஷ்டை நிவிருத்தி என்னும் காலத்வா வடிவமாக உள்ளன. இவ்வாறு ஆறு அத்துவாக்களின் சொருபமாக விளங்கும் யாகசாலையை முறைப்படி அமைத்து நடுவில் வேதிகை அமைப்பார்கள். அதில் பிரிதிவி தத்துவம் கூர்மாசனம், உபவேதிகை, அநந்தாசனம், மகா வேதிகை, சிம்மாசனத்தைக் குறிக்கும். நெல், யோகாசனம் - அரிசி பத்மாசனம், எள் விமலாசனம் நென்மலர் சத்தியாசனமுமாக பிருதுவி முதல் குடிலை ஈறாகிய முப்பத்தாறு தத்துவங்களும் ஆசனமாக அமைகின்றன. இவ்வாறு அமைக்கப்பட்ட வேதிகையின் 1108 சங்குகளை விருத்தக் கிரமமாகவோ அதாவது வட்டமாக பீடமமைத்து அதில் 16 ஆவரணம் அல்லது 17 ஆவரணம் என்ற முறையில் அமைத்து அதில் சங்குகளை ஸ்தாபனம் செய்வர். இதேபோல் வியூகமாகவும் சங்குகளை ஸ்தாபிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயங்களில் சிவனை சக்தியுள் பிரதானமாக மத்தியில் வைத்துப்பின்னர் அஷ்டவித்யேசுவரர்கள் என்பாரை அமைப்பர். அவருடைய பரிவாரங்களாக 1008 சங்குகளிலும் அவ்வம் மூர்த்திகளின் நாமங்களைக்கூறி - அத்தெய்வங்களை ஆலாகித்து பூசனை நிகழும், ஓரரசன் சபையில் வீற்றிருக்கும் போது மந்திரி பிரதானி புடைசூழ அமர்ந்திருத்தல் வழக்கமல்லவா! இதுபோன்றே உலகின் தனிப்பெரும் பேரரசனாகிய இறைவனை அவரது பரிவாரத் தெய்வங்களுடன் சூழ அமர்த்தி அவ்வவற்றுக்குரிய நாமாக்களுடன் பூசை நிகழும். இவ்வாறு விரிவாகச் செய்யப்படும் அபிஷேகத்தால் இறைவன் உளம் பூரித்து இஷ்ட காம்யார்த்தங்களை, வேண்டுவார் வேண்டியவாறு அருள்வான் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

இவ்வாறு இறைவனுக்கு பல நாமங்களைக் கூறி வழிபடும் முறை முதலில் யஜீர் வேதத்தில் காணுகின்றோம். இதனை "சதருத்ரீயம்" என்னும் பகுதியில் காணுகின்றோம். இவை காலக்கிரமத்தில் நூறாகவும், ஆயிரமாகியும் பெருகி இவைகளைக்கூறி அர்ச்சனை வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. இவ்வாறு இக்கிரியைகள் ஆகமவிதிப்படி அமைந்த கோயில்களில் இன்றும் நிகழ்வதைக் காணலாம்.

இவ்வாறு தொடர்பாக நிகழும் கிரியையின் பின்னர் பிரதான வேதிகையில் பூஜை தொடங்கும். அதில், முறைப்படி ஆதாரசக்தி முதல் பங்சாசன பஞ்சாவரண பூசையுடன் எந்தத் தெய்வம் பிரதானமோ அதன் மந்திரங்களைக்கூறி தியானித்து ஆவாகனம் செய்து மூல மந்திரத்தைக்கூறி அக்குடும்பத்தில் இறைவனை வணங்குவார். இவ்வாறு நிகழுங்காலை ஒவ்வொரு உறுப்புக்கள் அங்கங்களில் பலவித நியாயங்கள் நிகழ அக்கினிகாரியம் தொடங்கும் "அக்கினி முகா தேவா" என்று வேதத்தில் கூறியபடி அக்னி தேவர்களின் முகம் போன்றவர், ஆகையால் அக்கினியில் செய்யப்படும் கிரியைகள் ஓமங்கள் எல்லாம் எத்தெய்வத்தின் பெயரில் ஆகுதி செய்கின்றோமோ அத்தெய்வங்களை சென்றடையும். அதனால் திருப்தியடைந்த தேவர்கள் வேண்டிய சித்திகளை அளிப்பர். இவ்வக்னி கார்யம் ஆலயக் கிரியைகள் எல்லாவற்றிலும் அதாவது பிரதிஷ்டை முதல் உற்சவம் வரை உற்சவம் தொடங்கி பிராயச்சித்தம் வரையுள்ள சகல கிரியைகளிலும் மற்றும் மங்கள விஸயங்களிலும் அக்கினி பூசிக்கப்படுவது அக்னி சகல தேவர்கள் மயமாகவும் சகல மந்திர மயமாகவும் சகல வித்தை மயமாகவும் விளங்குவதாய் இதனை எல்லாக் கிரியைகளிலும் அக்கினியைத் தியானிக்க வேண்டும் என்று கூறுவதாலும் அதன் பெருமை விளங்குகின்றது. ஆகவே இவ்வித சிறப்புப்பெற்ற அக்கினியில் அக்கினிகார்யம் செய்து அக்கினியில் அந்தந்த மூர்த்திகளை ஆவாகனம் பின் நாட்சந்தானம் அதாவது அக்கினியில் இருந்து பிரதான கும்பத்துடன் தொடர்புபடுத்தி அக்னிகாண்டமும் முடிவில் விஷேஷதிரவிய ஓமமும் நிகழும். முடிவினில் மகாபூர்ணாகுதி செய்து அக்னியில் பூஜித்த இறைவனை கும்பத்தில் ஒழுக்கி கும்பத்தை எழுந்தருளச்செய் சங்குகளால் மூர்த்திக்கு அபிஷேகம் செய்வர்.

இவ்வாறு சிறந்ததான சங்க அபிஷேகத்தினால் நாம் வேண்டிய இஷ்ட சித்திகளைப் பெறுவதுடன் இகத்திலும் பரத்திலும் பேரானந்தப் பெருவாழ்வு பெறுவோம்.

எனவே இவ் உலகிலே பல வகைப் பிறப்புக்களிலும் சிறந்த மானிடப் பிறவியினைப் பெற்ற நாம் இயன்ற அளவு சிவகைங்கரியங்களை செய்து வந்தால் பெரும்பயனும், பிறவி பெற்றதன் முழுப்பயனும் பெற்றவர்கள் ஆவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக சதுர்த்தி விரதம்

''விரதமானது மனம் பொறி வழி போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதல்'' என நாவலர் பெருமான் குறிப்பிட்டுள்ளார். விரதத்தை அநுட்டிக்கும் போது அகத்தூய்மை, புறத்தூய்மையைப் பேணுவதுடன் பொறுமை, கொடை, உண்மை பேசுதல், புலனடக்குதல், ஆசையை அடக்குதல் என்பவற்றையும் கைக்கொள்ள வேண்டும். விரதம் அநுட்டிப்போர் இறைவனைத் துதித்து சங்கர்ப்பஞ் செய்து, காப்புக்கட்டியும், தர்ப்பை அணிந்தும் விரதத்தை நிறைவு செய்வார்கள். விரதம் அனுட்டிப்போர் காலையில் எழுந்து தம்மைப் புனிதப்படுத்தி, ஆலய தரிசனம் செய்து, திருமுறை ஓதுதல், புராணம் படித்தல், கேட்டல், ஆலயத் தொண்டுகள் செய்தல், நல்லவர்களோடு கூடியிருந்து இறைகதைகளை பேசுதல் என்பவற்றை செய்தல் வேண்டும். விரதம் அனுட்டிப்பதால் தேகசுத்தி, உளத்தூய்மை, பாவநீக்கம், மனமகிழ்ச்சி, நோயின்மை, இறைபக்தி போன்ற பல நன்மைகள் உண்டாகின்றன.

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களில் பிரதானமானவை சுக்கிரவார விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயக சஷ்டி விரதம் என்பனவாகும். விநாயக சதுர்த்தி விரதம் ஆவணி மாதத்து வளர்பிறையில் வருகின்ற சதுர்த்தித் திதியுடன் கூடிய திருநாளாகும்.

தீமைகளை அழித்து அறத்தை நிலைநாட்ட தெய்வ சக்தி அவ்வப்போது வெளிப்படுவதை புராணங்கள் மூலம் அறிந்து கொள்கிறோம். விக்கினங்கள் தீர்க்க விநாயகப் பெருமான் அவதரித்த நந்நாளே விநாயக சதுர்த்தித் தினமாகும். இறப்பை உணர்த்த மானிடராகிய நாம் பிறந்தநாளைக் கொண்டாடுகிறோம். பிறப்பு, இறப்பில்லாத இறைவனுக்கு பிறந்தநாளை கொண்டாடுவது எமது சமயத்தின் உயர்ந்த பண்பாட்டை குறித்து நிற்கின்றது. கொண்டாட்டங்கள் எல்லாம் கடவுளுக்கு நாம் செய்யும் ஒரு உபசாரம்தான். தமிழ்நாட்டில் இவ்விழா பெருவிழாவாக கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிலும் பிள்ளையார் வைத்து சிறப்புடன் பூசை செய்து பலகாரங்கள் படைத்து, எல்லோருக்கும் பகிர்ந்து மகிழ்வர்.

இவ்விரதம் அனுட்டிப்போர் விநாயகர் பாடல்களை மனங்குளிரப் பாடி, உள்ளன்புடன், உண்மையுடன் வழிபட்டால் நல்ல அறிவும், அமைதியும், நலமும், செல்வமும் சிறந்து தழைக்கவும், நாடும், வீடும் சிறக்கவும், விநாயகன் அருள்புரிவான். சதுர்த்தி விரதமிருந்து தேவரும், மூவரும், தேவியும் விநாயகன் அருள் பெற்றதை புராணங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. விநாயகனுக்குரிய சிறந்த நன்நாளாகிய விநாயக சதுர்த்தியில் எம் பெருமான் தேரில் உலா வருவது எமக்குக் கிடைத்த பெரும் பேறாகும். எம் வினைகள் யாவும் விலக தும்பிக்கையானை நம்பிக்கையுடன் முழு மனதுடன் துதிப்போமாக.

த. ரவிமோகன்
க.பொ.த (உ.த) - 2001 கலை
விக்ரோறியாக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தமிழ் மணங்கமழத் தொண்டாற்றிய நாவலர்

திரு.பாஸ்கரன்-ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை

19ம் நூற்றாண்டின் விடிவெள்ளி என்றும் சமயத்தையும், தமிழையும் காக்க எழுந்த செம்மல் எனவும் சிறப்பிக்கப்பட்டவர் நாவலர். அதாவது கிறிஸ்தவம் என்கின்ற இருள் நாட்டைக் கவிந்திருந்த பொழுது கிறிஸ்தவ இருளை அகற்றி இந்து சமயத்தையும் தமிழையும் பாதுகாத்து சமயத்தை மீளவும் முன்னிருந்த நிலைக்கு கொண்டு வந்த பெருமை நாவலருக்கே உரியது. ஆதலால் அவரை மேற்கண்டவாறு சிறப்புப்படுத்துகின்றோம்.

யாழ்ப்பாணத்து நல்லூரிலே கார்காத்த வேளாளர் குலத்திலே பாண்டிமழவர் குடியிலே பசுக்கொலைக்கஞ்சிப் பாரதஞ் சென்ற ஞானப்பிரகாசர் மரபிலே தோன்றிய கந்தர் என்பவருக்கும் அவர்தம் பத்தினியார் சிவகாமியம்மையாருக்கும் இவர்களின் இல்லறம் என்னும் நல்லறத்தின் பயனாய் பன்னிரண்டு பிள்ளைச் செல்வங்கள் வந்துதித்தனர். இவர்களில் ஆண்கள் அறுவர். ஆண்களிலே இளையவர் நாவலர். ஆறுமுகன் என்பது பிள்ளைத் திருநாமம். ஆறுமுகம் என்று வழங்குவதும் உண்டு. நாவலர் பிறந்தகாலம் 1822-12-18ம் திகதி புதன்கிழமையாகும். நாவலருக்கு ஒன்பதாம் வயது நடக்கும்போது ஒரு தினம் நாவலரின் தந்தையார் ஒரு நாடகம் எழுதிக் கொண்டிருந்தார். ஏடும் எழுத்தாணியும் கையில் பிடித்தபடி திடீரென இறந்து போனார். நாடகம் குறையாக இருந்தது. குறையாயிருந்த நாடகத்தை அந்தச் சிறுவயதில் எழுதி முடித்து நிறைவு செய்தார். இது நாவலரது தமையன்மாருக்கு பேராச்சரியத்தை விழைவித்தது. அதனாலே உயர்ந்த இலக்கண இலக்கியங்களைச் சிறந்த வித்துவான்களிடம் படிக்கும்படி செய்தார்கள். இவரது திறமை மேலும் பிரகாசித்து வயது பன்னிரண்டாயிற்று.

அப்போது அவரை ஆங்கிலம் கற்கும்படி கல்லூரி ஒன்றிற்கு அனுப்பினார்கள். அக் கல்லூரியின் அதிபர் பார்சிவல் பாதிரியார். நாவலர் தமிழைக் கைவிடாது கற்றுக்கொண்டே ஆங்கிலத்தையும் கற்றார். அவரது திறமையைக் கண்ட பாதிரியார் இவரைக்கீழ் வகுப்புக்களிற்கு ஆங்கிலத்தையும், மேல்வகுப்புக்களுக்கு தமிழையும் கற்பிக்க வைத்தார். இவ்வாறு பதின்நான்கு ஆண்டுகள் நாவலர் கிறிஸ்தவச்சூழலிலேயே இருந்து பாதிரிமார்களுக்கும் தமிழைக் கற்பித்தார். அத்துடன் பைபிளையும் தமிழுக்கு மொழி பெயர்த்துக் கொடுத்தார்.

நமது சமயம் எவ்வியல்பினது? அதற்குரிய நூல்கள் எவை? என்ற கேள்விகள் நாவலர் மனதில் எழுந்தது. சைவ நூல்களையும், முதன் நூல்களாகிய சமஸ்கிருத நூல்களையும் தாமே தேடிக்கற்றார். தனது 23 ஆம் வயதிலே தாம் கற்பதை ஒருவாறு நிறுத்திவிட்டு இரவிலும், காலையிலும் கற்பிக்கத் தொடங்கினார். வித்தியாசாலைகள் மூலமும், ஆலயங்கள் மூலமும் சைவத்தை விருத்தி செய்ய வேண்டும் என்பதே நாவலர் நோக்காயிருந்தது. 1847-12-31 ம் திகதியன்று வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலில் நாவலர் சைவப் பிரச்சாரம் செய்யத்தொடங்கினா. அவ்வாண்டிலேயே (1848) வண்ணார்பண்ணையில் ஓர் சைவப்பிரகாச வித்தியாசாலையும் ஸ்தாபிக்கப்பட்டது. இக் காலப்பகுதியில் தனது ஆசிரியத் தொழிலையும் துறந்தார்.

1849 ம் ஆண்டு புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுவதற்கு அச்சியந்திரங்கள் அவசியம் வேண்டப்பட்டன. எனவே அதனை வாங்கும் பொருட்டு சென்னைக்கு நாவலர் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்றார். ஆதீன சந்நிதானங்கள் அவரது திறமையைக்கண்டு வியந்து "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கினர். ஆறுமுக நாவலர் என்ற பட்டத்தைப் பெற்ற அவர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் வந்தார். நாவலர் பெருமை எங்கும் பரவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாநுபாலன யந்திரசாலை என்ற பெயரில் ஓர் அச்சகத்தினை அமைத்து பெரியபுராண விருத்தியுரை, இலக்கணச்சுருக்கம், கந்தபுராண விருத்தியுரை, பாலபோதினி, பாலபாடம், நித்திய கர்மவிதி, சைவ வினாவிடை, கிறிஸ்தவ எதிர்ப்பாக வச்சிரதண்டம் என்னும் ஓர் துண்டுப் புத்தகத்தையும், ஞானக்கும்மி என்கின்ற பல நூல்களையும் நாவலர் அச்சிட்டு வெளியிட்டார். 1858 ம் ஆண்டு மீண்டும் சென்னைநகர் சென்று அங்கும் ஓர் அச்சியந்திர சாலையை வித்தியாநுபாலனம் என்ற பெயரில் நிறுவி அங்கு பரிமேலழகரின் திருக்குறள் கருத்துரையையும், திருக்கோவையாருரை, தருக்க சங்கிரகம், அன்னம்பட்டீயம் என்பன போன்ற நூல்களும் அங்கு அச்சிடப்பட்டது. நாவலர் சென்னையில் நூலுரைகள் செய்தும், பரிசோதித்தும் அச்சிடுவதில் ஈடுபட்டிருந்தார். அத்துடன் சுக்கிரவாரந்தோறும் தமது இருப்பிடத்தில் சைவப்பிரசங்கங்கள் செய்தும் அயலிடங்களிற்குச் சென்று பிரசங்கங்களும் செய்வதுண்டு.

மீண்டும் 1870 ம் ஆண்டு மாசி மாதம் யாழ்ப்பாணம் வந்தார். இக்காலப்பகுதியில் பெரிய உத்தியோகங்களில் இருந்து கொண்டே பலர் தமிழ்ப்பணி, சைவப்பணி செய்தார்கள். புலோலி முதலிய இடங்களில் சைவப் பாடசாலைகள் தொடங்கின. இந்நிகழ்ச்சிகள் மகிழ்ச்சிக்கு உரியனவே. ஆயினும் சமயப் புரட்டர்களும் குறைவின்றி வாழ்ந்தார்கள். பிராமண சைவக் குருமாரின் நிலை நாவலரது மனசுக்கு வேதனையைக் கொடுத்தது. இந்நிலையில் ''யாழ்ப்பாணத்து சமயநிலை'' என்ற புத்தகம் 1872 இல் வெளிவந்தது. இந்நூலை யாழ்ப்பாணத்தாருக்கு நாவலர் செய்து வைத்ததொரு ஸ்மிருதி எனலாம் என பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார்.

1876 ம் ஆண்டில் மழையின்மையால் நாட்டில் பெரியதொரு பஞ்சம் உண்டானது. நாவலர் கஞ்சித் தொட்டித்தருமம் ஒன்றை நடத்தினார். ஏழைகளுக்கு இரங்கி அரசாங்கம் உதவ முன்வந்த உதவியை வடமாகாண அதிபருங் கீழ் உத்தியோகத்தரும் உறிஞ்சிக்கொண்டனர். அவர்களுக்கு எதிராக நாவலர் கர்ச்சித்தெழுந்தார். 1879ம் ஆண்டு ஆடி மாதம் சுந்தரர் குருபூசைத் தினத்தன்று நாவலர் தமது இறுதிப்பிரசங்கத்தைச் செய்தார். ''முப்பத்திரண்டு வருடகாலம் உங்களது ஏச்சையும் பொறுத்துக்கொண்டு பிரசங்கம் செய்து வந்தேன். இனி ஒருவரைத் தேடிக்கொள்ளுங்கள்'' என்று தம்மையும் மறந்து சொன்னார். அதனைக் கேட்டுச் சுவர்கள், தூண்கள் என்றிவையும் கண்ணீர் சொரிந்தன.

சைவத்தையும் தமிழையும் தனது இரு கண்களாகக் கொண்டு தொண்டாற்றிய நாவலர் சமயகுரவர் நால்வருடன் சேர்ந்து ஐந்தாவது குரவர் எனச்சிறப்பிக்கப்படுகின்றார். இதை அம்பலவாண நாவலர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''ஐந்தாம் சமயகுரவராகவும், அண்மைக் காலத்துரையாசிரியராகவும் தோன்றிய நாவலர் பெருமானின் வசனநடை நூல்களே சைவத்தமிழ் உலகை உய்வித்தன''.

இதனைக் கூறவந்த சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்து புராணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை'' மேலே கூறப்பட்ட கூற்றுக்களில் இருந்து

நாவலர் தமிழ், சமயம் என்ற இரண்டிற்குமாற்றிய தொண்டு எத்தகையதென்பது எம்மால் உணர முடிகின்றது. இவ்வாறு சிறப்பிக்கப்படும் நாவலர் பெருமான் 1879ம் ஆண்டு கார்த்திகை மாதம் சிவபதமெய்தினார். நாவலர் கோட்டில் நின்று ஒன்று சொன்னாலும் சரி ஒருவனை சினந்து வைதாலுஞ்சரி நாவலருடைய சொற்கள், எழுத்துக்கள், செயல்கள் அனைத்தும் வைதீக, சைவ மணங்கமழ்வனவேயாம் என பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக காலங்களில் நாம் அனுசரிக்க வேண்டிய சில ஒழுங்குகள்

கலாநிதி ப. கோபாலகிருஸ்ணன், தலைவர்
இந்து நாகரீகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

நமது ஆலயங்கள் மக்களை லயப்படுத்தும் விதத்தில் அழகுடனும், பூரணப் பொலிவுடனும் விளங்குதல் இன்றியமையாததாகும். அவை இந்நிலையில் அமையும் போதுதான் மக்கள் பக்தி நெறி நிற்பதற்கும், சிவ சிந்தையுடன் நின்றொழுகுவதற்கும் வாய்ப்பேற்படும். இத்தகைய நிலைக்கு ஆலயங்களை உட்படுத்தும் நிகழ்வுகளில் மகா கும்பாபிஷேகம் முக்கிய இடத்தினை வகிக்கின்றது எனலாம்.

திருப்பணி வேலைகளுக்கென பாலஸ்தாபனம் செய்யப்பட்ட ஓர் ஆலயத்திலே திருப்பணி வேலைகள் பூரணமான முறையில் நிறைவு பெற்ற பின்னரே கும்பாபிஷேகம் நடைபெறுதல் வேண்டும். திருக்கோயில் புனருத்தாரணப் பணிக்கு நிதி கொடுத்தல் ஒரு சிவப்பணியாகும். இது நிரந்தர சிவபுண்ணியத்தைத் தேடித் தரும். வாழ்க்கையில் ஈட்டிய செல்வத்தில் ஒரு பகுதியை இதற்கெனச் செலவு செய்தல் ஒவ்வோர் இந்துவினது கடமையாகும். ஆலயத் திருப்பணிக்காகக் கொடுத்த நிதியுதவிக்காக ஆலய நிருவாகத்தில் தலையிடுதலும், தமது கோரிக்கைகளை முன் வைத்து ஆலய நிருவாகத்தினரை நெருக்கடிக் குள்ளாக்குவதும் சில இடங்களில் நடக்கத்தான் செய்கின்றன. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டிய தொன்று. நமது செல்வத்தை ஆண்டவனின் சொத்து எனக் கருதி, அதன் ஒரு பகுதியை ஆண்டவனுக்கு மனமார அர்ப்பணிக்கும் போது வேறு சிந்தனை வராது. ஒருவர் ஒரு பொருளை ஆலயத்திற்குக் கொடுக்கும் போது அப்பொருளைக் கொடுத்த மாத்திரத்திலேயே அது ஆலயத்துள் உறையும் ஆண்டவன் சொத்தாகின்றது. இத்தகைய உணர்வுகளோடு செயற்படும் போதுதான் ஆலயங்கள் இறை சிந்தனை மிளிரும் இடங்களாக எழுச்சி பெறுகின்றன எனலாம்.

தற்காலத்தில் ஆலயங்கள் பல்கிப் பெருகிக்கொண்டு வருகின்ற நிலைக்கேற்ப அவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்குரிய ஒழுங்குகள் உரியபடி மேற் கொள்ளப்படாமற் போவது எனது சமயத்தின் எதிர்காலத்தைப் பொறுத்தமட்டில் நல்லதல்ல. எத்தனையோ ஆலயங்களில், அவைசிறிய நிலையில் இருப்பினும் கும்பாபிஷேகங்கள் விமரிசையாக,அதிக பொருட்செலவில் நடைபெறுகின்றன. ஆனால் கும்பாபிஷேகத்தின் பின்னர் அவை சரிவரக் கவனிக்கப்படாத நிலையிலே தான் உள்ளன. மகா கும்பாபிஷேக காலத்தில் காட்டப்படுகின்ற உற்சாகம் பின்னர் காட்டப்படுவதில்லை. எனவே கும்பாபிஷேகத்தினால் ஏற்பட்ட பூரணத்துவத்தைத் தொடர்ந்து பேணுவதில் அனைவரும் அக்கறை கொள்ளுதல் அவசியமாகும்.

நித்திய,நைமித்தியக் கிரியைகளில் ஏற்படும் குறைகளை நிறைவு செய்வதும் மகாகும்பாபிஷேகமாகும். இக் கிரியைமட்டுமன்றி ஆலயத்தில் நடக்கும் எக்கிரியையும் ஊர்மக்களது சுகத்திற்கும், நல்வாழ்விற்கும், வளத்திற்குமாகவே நடைபெறுகின்றன என்பதை இக்கிரியை முறைகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த உண்மையை நாம் மறத்தலாகாது. ஆதலால் ஆலயத்தில் வழிபடுவோர் அதன் வளர்ச்சியில் அக்கறை உடையோராய் இருத்தல் மிக மிக அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா கும்பாபிஷேகத்தின் போது தெய்வத்திற்கு அடுத்த நிலையில் சிறப்பிடம் பெறுபவர் சிவாச்சாரியார் ஆவர். ஆச்சாரியாரது கிரியா விசேடத்தினால் மக்கள் உள்ளத்தில் பக்தி பெருக வழிபிறக்கின்றது. ஆச்சாரியாரது ஒழுக்கம், பக்தி, தெய்வநம்பிக்கை, அமைதி, நிதானம், பொறுமை, கோபமின்மை, பிறருடன் பழகுதல் போன்ற நற்குணங்கள் இவர்களது தகைமையை மேலோங்கச் செய்கின்றன. இவர்கள் காலத்தின் பெறுமதியினை உணர்ந்து கிரியைகளை உரிய காலத்தில் நிகழ்த்தும் திறமை பெற்றிருத்தல் அவசியமாகும். நேர ஒழுங்கில் நடைபெறும் கிரியைகள் தெய்வ சாந்நித்தியத்தை மேலும் பொலியச் செய்யத் துணைபுரியும்.

திருக்கோயில்களின் வளர்ச்சியில் அறங்காவலர் பங்கும் மிக முக்கியமானதாகும். திருக்கோவிலை வழிநடத்துவோராக அறங்காவலரோ அன்றித் திருப்பணிச் சபையினரோ இருந்தாலும்கூட அத்திருக்கோயிலின் வளர்ச்சியினால் முழுக் கிராமமும் தன்னிலை எய்துகின்றது என்பதனை நாம் மறத்தலாகாது. அறங்காவலர் நற்பணி முழுக்கிராம வளர்ச்சிக்கும் வழி வகுக்கும் என்பதை நாம் வலியுறுத்தல் அவசியமன்று. இந்தக் கருத்தினைப் புரிந்து கொண்டு மக்கள் திருக்கோயில் நித்திய,நைமித்தியக் கிரியைகளில் கலக்கும் போதுதான் திருக்கோயில் அருள் சுரக்கும் இடமாகின்றது.

அண்மையில் கும்பாபிஷேகம் கண்ட கற்பகப் பிள்ளையார் ஆலயம் சகல நிலைகளிலும் பூரணப் பொலிவு பெற்று விளங்குகின்றது. நேர ஒழுங்குகளைக் கடைப்பிடித்து ஒழுகும் ஆலயங்களில் இதுவுமொன்றாகும். இத்தகைய நிலை பிற ஆலயங்களுக்கும் ஒரு முன் மாதிரியாகும். மகா கும்பாபிஷேகம் விநாயகர் பெருமானுக்கு நடைபெறும் பெருவிழா. இவ்விழாவைக் கண்டு களிக்கும் பேறு இவ்வூர் மக்களுக்குக் கிடைத்த ஓர் பாக்கியம் என்றே கூற வேண்டும். இவ்விழா சிறப்புடன் நடைபெறுவதற்கு முதலிற் கிடைத்தது விநாயகர் கடாக்ஷமாகும். இக்கடாக்ஷத்தின் பங்காளிகளாக சிவாச்சாரியர்கள், அறங்காவலர், ஊர்மக்கள் விளங்குகின்றனர் எனலாம். இங்கே நடைபெறும் கைங்கரியங்களில் பங்காளிகளாக நின்று திருவருளை அள்ளிப் பருகும் பாக்கியசாலிகளாக இவ்வூர் மக்கள் விளங்க வேண்டுமென்றும் அனைவருக்கும் சர்வ வல்லவரான விநாயகப் பெருமானின் திருவருள் கிட்ட வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றோம். கும்பாபிஷேக நற்பலன் அனைவரையும் சென்றடைவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டுக்கோட்டை
## பிரமனாச்சி தோட்டத்தில் எழுந்தருளியிருக்கும்
## ஸ்ரீ கற்பகர் பிள்ளையார் திருவூஞ்சல்

### காப்பு

சீர்மேவும் ஈழவழ நாட்டில் என்றும்
சிகரமென வளருநகர் வட்டுக்கோட்டை
ஊர்மேவும் கற்பகமாம் கணேசர் மீதில்
ஊஞ்சலிசை பாடியென்றும் உவந்து ஏத்த
பார்போற்றும் ஆத்தியடிப் பிள்ளையாரின்
பாதமலர் துணை செய்யப் பரிந்து வேண்டிக்
கார் ஆனை மாமுகனின் கருணை பாயக்
கற்பகத்தின் கஞ்சவடி காப்பதாமே.

### நூல்

இருக்குமுதல் யசுர்சாமம்அதர்வ ணம்நல்
இனியமறை வேதங்கள் கால்களாக்கி
அருட்சிவத்தின் ஆகமத்தை விட்டமாக்கி
அதனடுவே கலைஞானம் கயிறுதேக்கி
பெருக்கு நிறை ஓங்காரப் பலகைமாட்டி
பிரணவமாம் பதுமதத்தில் ஏற்றி வைத்து
கருத்திலொளிர் திருவாத்தி யடியில் மேவும்
கற்பகப் பிள்ளையாரே ஆடீர் ஊஞ்சல்.

சீவனவன் பக்தியாம் தூணநி றுத்தி
சிறந்தவுப நிடதமாம் விட்டம் பூட்டி
ஆவலுடன் நாற்கரண வட்டங்கள் மாட்டி
அன்பென்னும் பீடமதை அதிலே தேக்கி
தேவனவன் துதிக்கையன் தனையி ருத்தி
தினமுமன வூஞ்சலிலே வைத்து ஆட்ட
காவலனாம் திருவாத்தி யடியில் மேவும்
கற்பகப் பிள்ளையாரே ஆடீர் ஊஞசல்.

முடியாடச் சடையாட முறுவல் பூப்ப
மோதகத்தின் கரமாடச் செவியும் ஆட
துடியாடத் துங்கவெழில் தொந்தி யாட
துலங்கிடுமுப் புரிநூலும் துவண்டு ஆட
பிடியான உமையாடப் பித்தன் ஆட
பிரமாவும் திருமாலும் பெரிதுமாட
கடிதாக வண்டங்கள் கோடி யாடக்
கற்பகப் பிள்ளையாரே ஆடீர் ஊஞசல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரனும் சூரியனும் ஆல வட்டம்
சாமரையும் நாரியர்கள் ஏந்தி வீச
இந்திரனும் வெண் கொற்றக் குடையைத் தாங்கி
இனிதாக நின்னெழிலைக்கண்டு போற்ற
தொந்தியோடு தும்பிமுக தந்தித் தேவா
தொழுதடியார் நின்கழல்கள் நாடிப்பாட
கந்தமலர்த் திருவாத்தி யடியில் மேவும்
கற்பகப் பிள்ளையாரே ஆடீர்.

நான்முகனும் கலைமகளோர் வடந்தொட் டாட்ட
நாரணனும் இலக்குமியோர்வடந்தொட்டாட்ட
மான் மழுக்கை ஏந்துமர னோடு மாது
மலைமகளும் சேர்ந்து ஒரு வடந்தொட்டாட்ட
ஊன்உருக உளம் உருக உவந்து பாடி
உன்னடியார் அன்புடனோர் வடந்தொட்டாட்ட
கூன்பிறையும் திருவாத்தி சூடி மேவும்
கற்பகப் பிள்ளையாரே ஆடீர் ஊஞ்சல்.

முன்னமொரு மாங்கனியை வேண்டித்தம்பி
முருகனொடு முந்திவர மூன்று கண்ணன்
அன்னையுமை யானதெய்வ உலகந்தன்னை
அசைந்தசைந்து ஆடிவலம் வந்து நின்றாய்
வன்னமருப் பழகுடையாய் வந்தே நீயும்
வரமருளி இன்பங்கள் தானும் ஈய
கன்னலுதிர் திருவாத்தியடியில் மேவும்
கற்பகப் பிள்ளையாரே ஆடீர் ஊஞ்சல்.

செந்தமிழாம். அகவுற்றேன் உண்ட அந்த
செம்மதுவில் மயங்கி மகிழ் வெய்த முன்னர்
அந்தமிலா அன்பொழுகு அவ்வை யார்க்கு
அகங்குளிர அத்திமுகக் கையாற் றூக்கி
முந்துமெழில் முத்திநிலை தந்த தேவா
முல்லைமலி வட்டுநகர் பிரமனாச்சிக்
கந்துகமே திருவாத்தி அடியில் மேவும்
கற்பகப் பிள்ளையாரே.

பக்தியினால் பக்தருளம் நெகிழ்ந்து உன் தன்
பாதமலர் ஏத்தி நிதம் பரிந்து பாட
நித்தியமும் ஆத்தியடி கோயில் புக்கு
நெஞ்சார உனைத்துதித்த நாச்சி யாரும்
சித்திதரு பரம்பரையும் தோன்றலான
சேவைபுரி புண்ணிய நல மூர்த்தி ஏத்தும்
கொத்து மலர் திருவாத்தி அடியில் மேவும்
கற்பகப் பிள்ளையாரே ஆடீர் ஊஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வியருள் செறிந்தின்பம் சேர வென்றும்
சிந்தைகனி கொள்ளவரும் சிந்த நாட்டில்
கல்வி கலை கொழிந்துள்ளம் காணும் தெய்வ
கவின் பெறுநற் கருணையதும் பொங்கிப் பக்தி
பலவிதமாய்ப் பெருகிடவே பாலித்தன்பு
பழமான கணபதியே ஆடீர் ஊஞ்சல்
மெல்லியபூத் திருவாத்தி அடியில் மேவும்
கற்பகப் பிள்ளையாரே ஆடீர் ஊஞ்சல்

ஐங்கரரே ஆனைமுகா ஆடீர் ஊஞ்சல்
அம்புஜத்தின் பொற்பாதா ஆடீர் ஊஞ்சல்
சங்கரனார் மைந்தனே நீர் ஆடீர் ஊஞ்சல்
சாம்பவியின் புத்திரனே ஆடீர் ஊஞ்சல்
பொங்கவரம் தரித்தவனே ஆடீர் ஊஞ்சல்
பேழவயிற்றுடையவனே ஆடீர் ஊஞ்சல்
கங்கையுமை பாலதிரு வாத்தி மேவும்
கற்பகப்பிள்ளையாரே ஆடீர் ஊஞ்சல்

வாழி

வேதியரும் வானவரும் வாழி வாழி
விளங்கிடு நல் லானினங்கள் வாழி வாழி
மேமினியில் ஈழவன் நாடு ஆண்ட
மேவு வெடி யரசகுல மிளிர்ந்து வாழி
மாதரவர் கற்பு நெறி ஞானம் வாழி
மல்கிடுநற் சைவ நெறி வாழி
சீதவள ஆத்தியடி வாழி வாழி
சிற்பரனாம் கற்பாகமும் வாழி வாழி

எச்சரிக்கை

மதவாணப் பரிபூரணத் தேவா எச்சரிக்கை
மயில் வாகனன் பணியுங்கரி முகனே எச்சரிக்கை
நிதமேயுன தருளே தரும் பரனே எச்சரிக்கை
நிமலாதிப அமலாகண பதியே எச்சரிக்கை
பதமே தரும் கஜமாமுகத் தோனே எச்சரிக்கை
பரமேஸ்வரன் உமையாள் மகிழ் பாவா எச்சரிக்கை
வதமே செய்து அரக்கர் குலம் தொலைத்தாய் எச்சரிக்கை
வளமார்திரு வாத்தியடி நாதா எச்சரிக்கை

ஓங்காரத்தின் உருவாம்பிரணவமே எச்சரிக்கை
ஒருகொம்புடன் ஒளிர் ஐங்கரமூர்த்தி எச்சரிக்கை
பாங்காயருள் பாலித்திடும் ஈசா எச்சரிக்கை
பாசாங்குப்படை எந்தும் கணேசா எச்சரிக்கை
ஆங்காரத்தை அழிக்கும் கண நாதா எச்சரிக்கை
ஆனைமுகப் பாவனையிற் றோனே எச்சரிக்கை
பூங்காவனக் கோயில் வளர் தேவா எச்சரிக்கை
புனிதத்திரு வாத்தியடிக் கோவே எச்சரிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்பிக்கர நம்பிக்கண நாதா எச்சரிக்கை
துயர்நீக்கியே துன்பங்களை வோனே எச்சரிக்கை
தம்பிக்கொரு துணையாய்வரும் தேவே எச்சரிக்கை
தருமாதவக் கரிமாமுகில் மழையே எச்சரிக்கை
கும்பிட்டடி தொழவேயருள் கோனே எச்சரிக்கை
குலவுகலை அழகு தமிழ்க் கோவே எச்சரிக்கை
செம்பொற்றிகழ் பிறைசூடியின் சேயே எச்சரிக்கை
சேருந்திரு வாத்தியடித் தீரா எச்சரிக்கை.

பராக்கு

பூதகண நாயகனே பொலிவே பராக்கு
பூரணனே வாரணனே புகழே பராக்கு
நாதவிந்து வானவடி வானோய் பராக்கு
நாராய ணன்மருகா தேவா பராக்கு
ஐந்துகரத் தானைமுகா அபயம் பராக்கு
ஆறுமுகன் சோதரனே அருனே பராக்கு
முந்துகரத் தந்திமுகத் தோனே பராக்கு
மூஷிகத்தின் வாகனனே மூர்த்தி பராக்கு.

கொம்பினெழுத் தாணியேந்தும் கவியே பராக்கு
குலவுமெழில் பாரதத்தைத் தந்தாய் பராக்கு
அம்பிகையின் பாலகனே ஈசா பராக்கு
அகலமதில் அருள் வடிவாய் ஆனாய் பராக்கு
பெருவாழ்வு தருந்தெய்வம் பெரியோய் பராக்கு
பேழை வயிற் றுடையபெரு மானே பராக்கு
திருவாத்தி யடிமேவும் தேவா பராக்கு
திருவருளைத் தரும்பிள்ளை யாரே பராக்கு.

லாலி

கற்பகக் கணபதிக்கு லாலி சுப லாலி
கந்துக மதக்கரிக்கு லாலி சுப லாலி
பொற்பதக் கணேசருக்கு லாலி சுப லாலி
பொங்குகவருள் நாயகற்கு லாலி சுப லாலி
சொற்பதங்க டந்தவர்க்கு லாலி சுப லாலி
சோமசுந்தரன் மகற்கு லாலி சுப லாலி
கற்பனைக டந்தவர்க்கு லாலி சுப லாலி
கந்தமலர் ஆத்தியடி ஐங்கரற்கு லாலி.

குஞ்சரமு கத்தருக்கு லாலி சுப லாலி
குகனின் சகோதரற்கு லாலி சுப லாலி
அஞ்சலென்ற ருள்பவர்க்கு லாலி சுப லாலி
ஆனைமுகத் தேவருக்கு லாலி சுப லாலி
கஞ்சமலர்ப் பாதருக்கு லாலி சுப லாலி
கற்பகக் களிறவர்க்கு லாலி சுப லாலி
பிஞ்சிளம்பிறை சூடிக்கு லாலி சுப லாலி
மஞ்சள்மலர் ஆத்தியடி ஐங்கரற்கு லாலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திமுக அண்ணலுக்கு லாலி சுப லாலி
அங்குச பாசருக்கு லாலி சுப லாலி
சித்தி புத்தி நாதருக்கு லாலி சுப லாலி
சிந்தூர சிந்தாமணிக்கு லாலி சுப லாலி
தத்துவங்க டந்தவர்க்கு லாலி சுப லாலி
தயாநிதி யானவர்க்கு லாலி சுப லாலி
வித்தகவி நோதருக்கு லாலி சுப லாலி
விளங்கிடும் ஆத்தியடி ஐங்கரற்கு லாலி.

## மங்களம்

### பல்லவி

ஸ்ரீபாலச் சந்திரற்கு ஜெய மங்களம் -நித்ய
சுந்தர கணபதிக்கு சுப மங்களம்

### சரணம்

சீதப் பொற் பாதருக்கு சிற்பரனாம் தேவருக்கு
பூதகணத் தேவருக்கு புரந்தரர் நாதருக்கு


வல்லபை மணாளருக்கு வாரண முகத்தோருக்கு
நல்லருளைச் செய்யும் நல்வி நாயகருக்கு மங்களம்

அங்குச பாசருக்கு ஆனைமுக ஐங்கரற்கு
எங்கும் இன்பம் பொழியும் இன்னருளைச் செய்பவற்கு

காத்திடும் கணபதிக்கு காருண்யக் கணேசருக்கு
ஆத்தியடிக் கற்பகப் பிள்ளையார்க்கு மங்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம இரும்பகம்
ரு கொம்மினிக்கேசன்
த பிறின்ரேர்ஸ்
ம்

நெ.ம.ம. வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

நெஞ்சக் கனகல்லு நெகிழந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல் சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவா னைப்பதம் பணிவாய்.
(கந்தரனுபூதி)

துவிச்சக்கரவண்டிகள், நீர் இறைக்கும் யந்திரம், பெற்றோமாக்ஸ், மண்ணெய் அடுப்பு போன்றவைகளை சிறந்த முறையில் திருத்தி பெயின்ற் வேலைகள் செய்து கொடுக்குமிடம்

''பரிஸ் கவுஸ்''

கற்பகச்சோலை
வட்டு - வடக்கு
சித்தங்கேணி.

சகல விதமான பலசரக்கு பொருட்களையும் தரத்துடனும், மலிவு விலையிலும் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

''ஆனந்தா ஸ்ரோஸ்''

டச்சு வீதி, வட்டு - வடக்கு,
சித்தங்கேணி.

சகல விதமான வீட்டுப்பாவனைப் பொருட்களையும், மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

விநாயகர் பல்பொருள் வாணிபம்

டச்சு வீதி, வட்டு-வடக்கு
சித்தங்கேணி.

கட்டடப் பொருள்களின்
ஏக முன்னோடிகள்

கணேசன் காட்வெயர்

மெயின் வீதி
நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லீலா பேக் கவுஸ்

மாக்கட் - சதுக்கம்

சங்கானை


வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திரு மேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

(மூதுரை)


கட்டடப் பொருட்கள், சைக்கிள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்.

# பாக்கியரத்தினம் கட்டிடப் பொருள் விற்பனை நிலையம்

☎ : 021-2664

தலைமை : 163, 165 பிரதான வீதி
சங்கானை.

கிளை : தரன் ரேடேஸ்
130, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொங்கிறீட் கற்கள், பூக்கற்கள், கம்பி, சீமெந்து, பெயின் வகைகள் விற்பனையாளர்.
- தொலைத் தொடர்பு நிலையம்.

## கீதா ஸ்ரோஸ்

பலாலி வீதி
திருநெல்வேலி.
தொலைபேசி - 2731.


ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்று கின்றேனே.
(திருமந்திரம்)


வர்ண ஜாலங்களின் சங்கமம்
சகல விதமான பெயின்ற் வகைகளுக்கும்

## நியூ சிற்றி ஹாட்வெயர்ஸ்

## NEW CITY HARDWARES

245 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசம் மோட்டார் ஸ்ரோர்ஸ்

# RASAM MOTOR STORES

8/7, (128) Stanley Road, Jaffna.

IMPORTERS & DISTRIBUTORS OF

AUTOMOTIVE SPARE PARTS

SPECIALISTS IN ISUZU SPARE PARTS


அல்லல் போம் வல்வினை போம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லை போம் போகாத் துயரம் போம் - நல்ல
குணமதிய மாம் அருணைக் கோபுரத்துள் வீற்றிருக்கும்
கணபதியைக் கை தொழுதக் கால்.


மாலா சைக்கிள் பலஸ்

பிரதான வீதி
சங்கானை

நிலா ஒளி

பிரதான வீதி
சங்கானை

நியூ மெடி பிளஸ்

பிரதான வீதி
சங்கானை

மீனாட்சி ஜெவுளி
சமுத்திரம்

பிரதான வீதி
சங்கானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அசோக ரேடெஸ்

117 சென்ரல் ரோட்

கொழும்பு - 12

☎ - 331186

பக்தி நெறியில் பலமாய் உறைவார்
அத்தி முகனின் அடியைப் பணிவார்
முத்தி பெறுவார் முதன்மை உறுவார்
சித்தி அடைவார் திடமே ! திடமே !
(விநாயகர் அநுபூதி)

மின்சார உபகரணங்கள் விற்பனையாளர்கள்

ESS JEY ELECTRICALS

இல. 9 ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்.

☎ : 2564

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான கட்டடப் பொருட்கள், மின்சாரப் பொருட்கள் வாங்குவதற்கும் சிறந்த முறையில் போட்டோபிரதி, லெமனேற்றிங் செய்வதற்கும் நேரடித் தொடர்புச் சேவை பெற்றுக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டியது

ஜெகா மோட்டேஸ்

பிரதான வீதி, நெல்லியடி
தொலைபேசி - 070212228, 3237, 3274

கிளைகள் : கோப்பாய் - தொலைபேசி : 070212511
வல்வெட்டி - தொலைபேசி : 070212476
070212284

உம்பர் புகழும் உறுதிப் பொருளே
தும்பிச் சிரனே தொழுதேன் தொழுதேன்
நம்பும் எனை நீ நழுவ விடாமல்
அம் பொற் கரத்தாய் எனையான் டருளே
(விநாயகர் அநுபூதி)

சகல விதமான பெயின்ட் வகைகள்
விற்பனையாளர்கள்

முருகன் ரேடெஸ்

மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுமினியம் பீடிங்ஸ், கண்ணாடிகள், பிளைவூட், காட்போட் சீற்,
நைலோன் கயிறு, மீன்பிடி வலைகள், ஊதுபத்திகள்,
மோட்டார் சைக்கிள் விற்பனையாளர்கள்
படங்கள் சிறந்த முறையில் பிறேம் செய்பவர்கள்

# இராசேந்திரா ஸ்ரோர்ஸ்

192, கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 2669

தேடிப் பணிவார் சில பேர் சிறப்பாய்
ஆடிப் பணிவார் சில பேர் அணியாய்ப்
பாடிப் பணிவார் சில பேர் அவரை
நாடித் தருவான் நலம் ஐம் முகனே

(விநாயகர் அநுபூதி)

மின்சார உபகரணங்கள்
எஸ்லோன் குழாய்கள்
மோட்டார்கள்
விற்பனையாளர்கள்

# சுந்தர்சன்

சந்தைச் சதுக்கம்
மானிப்பாய்.
தொலைபேசி : 2751

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஸ்ணா ஸ்ரோஸ்

பிரதான வீதி

சங்கானை

வீடியோ விதுஸன்

பிரதான வீதி

சங்கானை

"மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்றின் மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.

(கந்த புராணம்)

சங்கானை பார்மஸி

பிரதான வீதி

சங்கானை

விக்னா இரும்பகம்

270 A, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு:
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

JAWAHAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில மருந்து விற்பனையில் பல
வருட கால முன்னோடிகள்

''மெடிலான்ற்''

**METILANT**

பிரதான வீதி
சங்கானை

என்றும்
சிறந்த சேவைக்கு

கற்பகப் பிள்ளையார்
கட்டடப் பொருட்கள்
ஒப்பந்த சேவை

வட்டு - வடக்கு
சித்தங்கேணி.

''வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழப்
பான்மை தரு செய்ய தமிழ் பார் மிசை விளங்க
ஞான மத ஐந்து கர மூன்று விழி நால்வாய்
ஆனை முகனைப் பரவி அஞ்சலி செய்கிற்போம்.''

சகல விதமான பெயின்ட் வகைகள்
எஸ்லோன் பைப்புக்கள்
விற்பனையாளர்கள்

## கீதா ரேடேஸ்

107, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் கலர்ப் படங்களை
சிறந்த முறையில்
உடனுக்குடன் பிரதியாக்க

## திரு வீடியோ கலர் லாப்

மூத்த விநாயகர் கோயிலடி,
கரணவாய்,
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Best Wishes !!!

## S.S. Import & Export (Pvt) Ltd.

### Importers, Distributors And General Hardware Merchants.

***Agent For :-***

Monison's Pain Balm, ABII Pappadam

A/G/3, Sanchi Arachchi Garden, Colombo 12.
Tel No. 01-449371, 324615 Fax No. 01-335673
E-Mail. ssie@pan.lk

*Wanted Distrubutor Island wide*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில்வர் கிறவுண் காட்வேயர்ஸ்

23, அப்துல் யபார் மாவத்தை
கொழும்பு - 12.

தொலைபேசி - 431419
323712


வாரணத் தானை அயனை விண் ணேரை மலர்க்கரத்து
வாரணத் தானை மகத்து வென் றோல்மைந் தனைத் துவச
வாரணத் தானை த்துணைநயந் தானே வயலருனை
வாரணத் தானை த் திறை கொண்ட யானையை வாழ்த்துவனே.

(கந்தர் அந்தாதி)


## CUSTOMS HOUSE CLEARING AGENTS

**C. SIVASAMY & CO**

A/G/ 3 Sanchi Arachchi Garden
Colombo - 12

Phone : 449371
324615

Fax : 94-1-535673



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதிவண்டி, உதிரிப்பாக இறக்குமதியாளர்கள், லோட்டஸ் மிதிவண்டி ரயர், ரியூப் ஏக விநியோகஸ்தர்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், கலர் பிலிம் சுருள்கள், வீடியோ, ஓடியோ கசற்

மற்றும்

பல்பொருள் விற்பனையாளர்கள்

உங்கள் தேவைகளுக்கு இன்றே நாடுங்கள்.

# இ.ச.பேரம்பலம் சகநிறுவனம்

50, 52 & 54 , கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்.

பக்ஸ் : 2368 தொலைபேசி - 2988

"திகடச் சக்கரம் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்"

(கந்தபுராணம்)

ஜெசிபா ஏஜென்சி

# JEISHEBA AGENCY

GENERAL HARDWARE MERCHANTS

132, Stanley Road, Jaffna.

Tel : 021-2407.

Agent For : Mitsuz Cement
S-Lon Lanka (Pvt) Ltd.
CIC Paints Ltd.
Kesewatta Marketing Services (Pvt) Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தம் புதிய மோட்டார் சைக்கிளா? மோட்டார் வாகனங்களா?
லான்ட் மாஸ்ரரா? உதிரிப்பாகங்களா? பற்றறி வகைகளா?
அசிட் வகைகளா? சோலா் வகைகளா?
இன்னும் எது வேண்டும்?
அத்தனையும் மலிவாகப் பெற்றிட
ஒரே கூரையின் கீழ் ஒரே இடம்

# அருள் விநாயகர் மோட்டோஸ்

103, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

கிளை : 262, கண்டி வீதி, சாவகச்சேரி


திருவாக்கும் செய் கருமம் கை கூட்டும் செல் சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோடும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவார் தம் கை.


# கரசன் எலெற்றிக்கல்ஸ்

யாழ் மாநகர சபைக் கட்டிடம்
இ (4) 14, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
Phone : 3128

- சகல மின்சாரப் பொருட்கள் மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்.
- மின்சார ஒப்பந்த வேலைகாரர்
- இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக் பாய்கள், ஊதுபத்திகள், அரிக்கன் லாம்புகள் விற்பனையாளர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நன்றிக்குரியோர்

❖ ஆலய கும்பாபிஷேக, மஹோற்சவ கருமங்கள் அனைத்தையும் நெறிப்படுத்தி, அருட்பணியாற்றிய எம் வணக்கத்துக்குரிய பிரதம குரு அவர்கள்.

❖ இவ்விரு பெருவிழாக் கிரியைகளை நிறைவாக நடாத்தி வைத்த சிவாச்சாரிய அந்தணப் பெரியார்கள்.

❖ குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்து இவ்விழாக் கிரியைகளில் பங்குபற்றிச் சிறப்பித்த சிவாச்சாரிய, அந்தணப் பெரியோர்கள்.

❖ இவ்விழா அருட் கடமைகள் அனைத்திற்கும் நற்பணியாற்றிய எங்கள் தேவஸ்தான குரு அவர்கள்.

❖ ஆலய விமானத்தினை அழகுற சிறந்த முறையில் நிர்மானித்த சிற்பாச்சாரியர் திரு.ச.கணேசமூர்த்தி அவர்கள்.

❖ சிற்பாச்சாரியர்கள் திரு. தம்பிராசா (அராலி), திரு. சி. மகேந்திரராசா (அராலி) அவர்கள்.

❖ வர்ண அமைப்பை அழகுறச் செய்த திரு. ப. விஜயரட்ணம் குழுவினர் (அராலி).

❖ ஆலயத்தின் கொடிமரத்தின் கவசத்தை செப்பனிட்டு, ஒழுங்கமைத்துத் தந்த திரு. மோகன் (ஆசாரியார்) அவர்கள்.

❖ புணருத்தாரண வேலைகளில் ஈடுபட்டு திருப்பணியை நிறைவேற்றிய திரு. மு. தங்கராசா (கட்டிடக்கலைஞர்) திரு. செ. சக்திவேல், திரு. ந. கமலநாதன் அவர்கள்.

❖ ஆலயத்திருப்பணி மரவேலைகளை இலவசமாக நிறைவேற்றித்தந்த திரு. ச. தபேந்திரன் அவர்கள்.

❖ கூரைத்தகடுகளை அன்பளிப்புச் செய்த திரு. கா. சுப்பிரமணியம் அவர்கள்.

❖ வசந்த மண்டபத்தை அமைத்ததோடு மேலும் பொலிவூட்டிய திரு.வே.பொன்னம்பலம் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ ஆலயத்திற்கு ஜெனரேற்றரை அன்பளிப்புச் செய்து வளம் செய்த திரு.புண்ணிய... குடும்பத்தினர்.

❖ ஆலயத்திற்கு ஒலிபெருக்கிச் சாதனங்களை அன்பளிப்புச் செய்து அணி செய்த திரு. கா. இராமநாதன் குடும்பத்தினர்.

❖ பாலஸ்தாப, மண்டலாபிஷேக விளம்பரப் பத்திரிகைகளை அன்பளிப்புச் செய்த சங்கானை திருமொழி அச்சகத்தினர்.

❖ கும்பாபிஷேகப் பத்திரிகையை அன்பளிப்புச் செய்த யாழ்.கற்பக விநாயகர் அச்சகத்தினர்.

❖ தேவஸ்தான மங்கல இசைக் கலைஞர்கள் திரு. இ. கண்ணன் குழுவினர்.

❖ சித்தங்கேணி கண்ணன் சவுண்ஸ் சேவீஸ் ஒலி, ஒளி அமைப்பாளர்.

❖ கொடிமரம், கொடிமரக்கவசம், கொடிமர வாகைமாலை முதலியவற்றை அன்பளிப்புச் செய்த திரு. நா. நவரத்தினம் குடும்பத்தினர்.

❖ ஸ்தம்பப் பிள்ளையாரை ஸ்தாபித்த திரு. பொ. கிருஸ்ணசாமி குடும்பத்தினர்.

❖ காலமெல்லாம் காத்திருந்த கற்பகனின் தேருக்கு கலசத்தை வழங்கிய திரு. பு. தியாகமூர்த்தி.

❖ மண்டலாபிஷேக, மஹோற்சவ உபயகாரர்கள்.

❖ கும்பாபிஷேக, தேர்த் திருப்பணிகளுக்கு நிதியுதவிகள் வழங்கிய கற்பகன் மீளா அடியவர்கள்.

❖ மேற்படி திருப்பணிகளுக்கான நிதி சேகரிப்பதில் அரும்பணியாற்றிய திரு.சி.கைலாயநாதன் அவர்கள்.

❖ தேர் சிறந்த முறையில் உருவாக்கித் தந்த திரு. ஆ. குணநாயகம் சகோதரர்கள்.

❖ ஆலய விமானம், வசந்த மண்டபம் ஆகியவைகளின் வர்ண நிறங்கள் வளமாக, மங்காது ஒளி தர, அதற்கு யந்திரம் மூலம் வாணிஸ் தெளிப்பதற்கு உதவிய திரு.நா.புஸ்பராசா அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர் அமைப்புக்களை மரங்களை சிறந்த முறையில் தயாரித்து வழங்கிய திரு. பொ. சற்குணம் (லஷ்சுமி மரக்காலை, வடலியடைப்பு) அவர்கள்.

❖ மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு துரித கதியில் ஆலயத்திற்கு மின்சாரம் பெறுவதற்கு உதவிய இலங்கை மின்சார சபை வட்டுக்கோட்டை மின் அத்தியட்சகர் திரு.மு.சண்முகானந்தசிவம் அவர்கள்.

❖ ஆலயத்தில் அன்னதானமடத்தை அமைத்து ஆலயத்திற்கு புனிதம் சேர்த்த திரு.மா.முருகேசுபிள்ளை அவர்கள்.

❖ இம்மலரின் சிறப்புக்கு ஆசியுரை, வாழ்த்துரை, பாமாலை, கட்டுரைகள் வழங்கிய ஆத்மீக ஞானிகள், கல்விமான்கள் அறிஞர் பெருமக்கள்.

❖ மலரின் முகப்பை வடிவமைத்த திரு. ஆறு திருமுருகன் அவர்கள்.

❖ மலரின் முகப்புப்படத்தை வரைந்து அச்சிட்ட சித்திரச்செல்வர் ஞானசேகரம் (ஞானம், சங்கானை) அவர்கள்.

❖ கொழும்பிலிருந்து மலரின் முகப்பு அட்டையைத் தருவித்து உதவியதுடன், மலரின் அச்சக வேலைகளுக்கும் முழுப் பொறுப்பாகச் செயற்பட்ட திரு. பொ. பத்மாதரன் அவர்கள்.

❖ மலரை அழகுறவும், செம்மையாகவும் அச்சிட்டு உதவிய மருதம் நிறுவனத்தினர்.

❖ விளம்பரங்கள் தந்து உதவிய வர்த்தகப் பெருமக்கள்.

❖ விளம்பரங்களைச் சேகரித்து உதவிய திரு. பொ. கங்காதரன் அவர்கள்.

❖ புகைப்படக் கலைஞர்கள் திரு. வே. சண்முகலிங்கம், திரு.வே. புலேந்திரன் அவர்கள்.

❖ வாகை மாலையை உபயமாக வழங்கிய திரு.எ.தியாகேஸ்வரன் (கலை நகர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ ஆலயத்தில் விநாயகரின் ஓவியங்களை அழகுற வரைந்த ஓவியர் திரு.வேலாயுதம் (கௌரி ஆட்ஸ், கட்டுவன்) அவர்கள்.

❖ திருப்பணி வேலைகளை நிறைவு செய்வதற்கு வாகன உதவிகள் நல்கிய திரு.க.மயில்வாகனம், திரு.கீ.சரவணபவா அவர்கள்.

❖ விழா சிறப்புற அரும்பணியாற்றியவர்கள்.

அனைவர்க்கும் அகம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு யாபேரும் இனிது வாழ கற்பகன் திருவடிகளைப் பணிந்து வணங்குகின்றோம்.

மருதம் பிரின்ரேர்ஸ், ம.ம.வீதி, நெல்லியடி, கரவெட்டி.
☎ 070-212229, 070-212329, Fax 070-212371

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VADDU-NORTH PRAMANACHCHI THODDAM

## KATPAHAP PILLAIYAR

# THER CHIRAPPU MALLAR



VADDU-NORTH
KATPAHAP PILLAIYAR DEVASTHANAM

GNANAMS ARTS & ADVERTISING COLOMBO - 6 TEL: 556935

Cover Printed By: Unie Arts (Pvt) Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org